செங்குந்த மித்திரன்

ரி. மலர்கள் 1933

2-3

7

JL
Y592SG.311, N28
N33.7.2-3
158910

1-NOV1933
MA...

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்:—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.
துணையாசிரியர்:—ஜெ. தங்கவேல், பி. ஏ.


| தொகுதி | மகாநாட்டு மலர் | பகுதி |
|---|---|---|
| எ | ஆங்கீரச௵ மாசி, பங்குனி௴ | உ, ௩ |

## உள்ளடக்கம்

| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை: மகாநாட்டு வைபவம் | ... 37 |
| மகாத்மா உபதேசம் | 40-A |
| தலைச் சங்கப் பொதுக்கூட்டமும் அறிக்கைப் பத்திரமும் | 40-C |
| திரு. வேலாயுத முதலியாரவர்கள் வரவேற்பு, சொற்பொழிவு | 40-H, 41 |
| கொடிக்கவி | ... 42 |
| திரு. முத்தைய முதலியாரவர்கள் வரவேற்பு, திறப்புரை | 43, 44 |
| ,, சபாபதி முதலியாரவர்கள் சொற்பெருக்கு | ... 49 |
| ,, சண்முகசுந்தர முதலியாரவர்கள் வரவேற்பு, சொற்பொழிவு | 55, 56 |
| ,, கா. அ. சண்முக முதலியாரவர்கள் வரவேற்பு, திறப்புரை | 66, 67 |
| வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர் சொற்பெருக்கு | ... 68 |
| திரு. செங்கோட்டையா முதலியாரவர்கள் வரவேற்பு, சொற்பொழிவு | 73, 74 |
| ,, பாவா. கோபலசாமி முதலியாரவர்கள் வரவேற்பு, திறப்புரை | 77, 78 |
| ,, ரெ. விநாயக மூர்த்தி முதலியாரவர்கள் சொற்பெருக்கு | ... 82 |
| ,, பன்னிருகைப் பெருமாள் முலியாரவர்கள் வரவேற்பு, முன்னுரை | 86, 87 |
| தீர்மானங்கள், திருவாரூர் செங்குந்தர் தொண்டர் படைச்சங்கம் | 92, 95 |
| கிளைச்சங்கங்களின் ஜாபிதா | .... 96 |

காரியாலயம் :—2/17, பவழக்கார தெரு, சென்னை.


1-NOV



கொடியேற்று விழா



கொடியுயர்த்திய பெரியார்
உயர்திரு. மா. ஆ. வேலாயுத
முதலியாரவர்கள்,
குடியேற்றம்





சமூக மகாநாட்டுத் திறப்பு விழாவாற்றிய
பெரியார் உயர்திரு.
ஆ. வே. முத்தைய முதலியாரவர்கள்,
பி. ஏ., பி. எல்., புதுவை




வர்த்தகர் மகாநாட்டுத் திறப்பு விழாவாற்றிய
பெரியார் உயர்திரு.
கா. அ. சண்முக முதலியாரவர்கள்
திருப்பத்தூர்



நான்காவது மகாநாட்டுத் தலைவர்கள்



சமூக மகாநாட்டுத் தலைவர்
உயர்திரு. ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள்,
எம். ஏ., எல். டி., சென்னை.



சமூக மகாநாட்டு வரவேற்புத் தலைவர்
உயர்திரு.
இ. நா. சபாபதி முதலியாரவர்கள்,
திருவாரூர்.


# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர் :—ஜெ. தங்கவேல், பி. ஏ.

தொகுதி—எ] ஆங்கீரசஹூ மாசிமீ பங்குனிமீ [பகுதி உ, ந


### கடவுள் வணக்கம்

எத்துணையும் பேதமுரு தெவ்வுயிருந் தம்முயிர்போ லெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்ருர் யாவ ரவ ருளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம் எனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன் சிந்தைமிக விழைவதாலோ.

(திருவருட்பா)

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### மகாநாட்டு வைபவம்

'வேண்டுமென்ற போது பெய்யாய், வேண்டாதபோது பெய்வாய்; தாண்டு நீ செய்வதெல்லாம் தப்புகளே' என்னும் வேதநாயக வாக்கினை வேதவாக்காக்கிய அடை மழையினல், மகாநாட்டுக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள அவாவி யிருந்த நங்குலச் சோதரர் பலரது எண்ணத்துக்குத் தடையேற்பட்டதேனும், மழைக்கு முன்னரே வந்து கூடியிருந்தோரும் மழையைச் சிறிதுங் கவனியாது குலமுன்னேற்றக் கருமமே கண்ணுகித் திரண்டு வந்தோருமாகிய அன்பர்களது ஆர்வமும் அபிமானமும் வருண பகவானது சேனையினைப் புறங் கண்டன வென்றே கூறவேண்டும். 'நீந்தக் கற்றுக் கொள்ள விரும்புவோனை நீரிலே தூக்கிப் போடு' என்பதுபோல முன்னேற்றத்துக்குத் தடையாயுள்ள கஷ்டங்களை யெல்லாம் நீந்திக் கரை சேருதற்குரிய உண்மை யவாவும் இடையரு முயற்சியும் நம்மிடையே இருக்கின்றனவா எனச் சோதிப்பதற்கோ, அத்துறையிலே நம்மைப் பண்ணுறுத்தித் திடப்படுத்துதற்கோ இறைவனருளினல் எதிர்பாராத காலத்திலே எதிர்பாராத அளவு கார்முகிலின் கருணை பெருக்கெடுத்து விட்டதன் பயனுக, பன்னுட்களாகப் பெருஞ் சிரமத்துடன் பெருஞ் செலவிலே பேரார்வத்துடன் தயாரிக்கப்பட்ட 'செங்குந்தர் கோட்டம்' கூட்டத்துக் குதவாது போயினும், கல்லாலின் நிழலினையே சிஷ்ய கோடிகட்கு ஞானோபதேசம் செய்தற்குகந்த இடமாகக் கொண்ட தக்ஷிணு மூர்த்தியின் மடத்திலுள்ள பரந்த கூடம் அதற்குப் பதிலாக வாய்த்தது நமது அதிர்ஷ்டவசமே யாகும். இயற்கனவே தலைவர்களுக்கு விடுதியாக உதவவேண்டி செவ்

வைப்படுத்தி வைக்கப் பட்டிருந்த மேற்படி மடம் தொண்டர்களின் பேருதவியால் சில நிமிஷங்களில் அழகுறப் பொலிந்து பிரமுகர்களுக்குத் திருப்தியையும் உற்சாகத்தையும் ஊட்டியது. ஞாயிறன்று காலை தலைவர்களெல்லாம் ஒருங்கே கூடியவுடன் மகாநாடு சுமார் 8 மணிக்குக் கடவுள் வாழ்த்துடன் வெகு மங்களகரமாக ஆரம்பித்தது. சுமார் 2000 ஜனங்கள் கூடத்திலும் அதைச் சுற்றியும் ஆர்வத்துடன் அமர்ந்திருந்தனர். உயர் திரு. மா. ஆ. வேலாயுத முதலியாரவர்கட்கு வரவேற்புப் பத்திரம் வழங்கப் பெற்றபின் அன்னார் கொடியின் தத்துவத்தை விளக்கி அதனை உயர்த்திக் காக்கவேண்டிய முறையையும் அவசியத்தையும் எடுத்துக்கூறிக் கொடியேற்று விழாவாற்றினார்கள். கொடியானது அதில் திகழும் வெங்கையும் சேவலும் வெற்றிக் குந்தமும் விளங்க உயரத்தில் விரித்து நாட்டப்பட்டது. உடனே திரு. ஜெ. தங்கவேல் அவர்கள் கொடிக் கவியினைப் பாட அனைவரும் அன்புடன் குலக் கொடியினைப் பணிந்து நின்றனர். பின்னர் நமது வள்ளலார் மகாநாட்டுக் கெழுந்தருளிய பிரமுகர்களனைவரையும் இனிதே வரவேற்றதும் தலைவர்களது தேர்தல்கள் நடந்தன. உடனே நங்குல மகாத்மா உயர்திரு. ஆ. வே. முத்தைய முதலியாரவர்கள் தாம் மகாநாட்டுத் திறப்பு விழாச் சடங்கினை யேற்றுக்கொண்டதன் காரணத்தைக் கூறுமுகத்தான் அனைவர்க்கும் தமது சீரிய கொள்கைகளை யறிவுறுத்தி மகாநாடு செவ்வனே சித்திபெற வேண்டுமென்னுங் கோரிக்கையுடன் சமூக மகாநாட்டினைத் திறந்து வைத்தார்கள். அடுத்தாற்போல் நமது ஆசிரியர் திரு. ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள், முன்னுரையாக, சமூக இயக்கங்களின் தன்மைகள், அவை கொள்ளவேண்டிய நோக்கங்களும் உழைக்கவேண்டிய முறைகளும், அவற்றிற்கும் தேசிய இயக்கத்திற்குமுள்ள சம்பந்தம், நமது இயக்கத்தின் சரிதை, அதுவும் அதன் கருவிகளாகிய தலைச் சங்கமும் மித்திரனும் சாதித்துள்ள அரிய காரியங்கள், இனிச் சாதிக்க வேண்டியவை, அதற்கு வேண்டிய முயற்சி, அம்முயற்சியில் பெரியோருக்கும் வாலிபருக்கும் பெண்களுக்கும் உரிய பாகங்கள் ஆகியவற்றைத் தெள்ளிதின் விளக்கும் அரிய சொற்பொழிவினை ஆற்றினார்கள். இத்துடன் சமூக மகாநாடு முடிய அன்பர்களனைவரும் பகற்போஜனத்திற்காகக் கலைந்தனர்.

சுமார் 2 மணிக்கு மீண்டும் மகாநாடு தொடங்கியது. திருப்பத்தூர் பிரபல வர்த்தகர் உயர்திரு. கா. அ. சண்முக முதலியாரவர்கள், நம்நாட்டிலே வர்த்தகத்தினை மேல் நிலைக்குக் கொண்டுவருவதற்கான சில நுட்பங்களை அறிவுறுத்தி நம்மவர் வர்த்தகர் மகாநாட்டினைத் திறந்து வைக்க, பிரதிநிதிகளை வரவேற்கும் பெரும் பணியினை, அதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த உயர்திரு. V.M.N. பொன்னம்பல முதலியாரவர்கள் விலக்க முடியாத அசந்தர்ப்பம் காரணமாக மகாநாட்டுக்கு வர முடியாததால், மன்னார்குடி. உயர்திரு. பெரி. ரா. நடராஜ முதலியாரவர்கள் ஆற்றினார்கள். உடனே கோவைப் பிரபல வர்த்தகர் உயர்திரு. V. S. செங்கோட்டையா முதலியாரவர்கள் தமது தலைமையுரையில் வர்த்தகத்தின் தற்கால நிலைமையையும், அதைச் சீர்படுத்துவதற்காக நாம் உழைக்கவேண்டிய முறைகளையும், வியாபாரிகள் கையாளவேண்டிய முக்கியமான கொள்கைகளையும், நங்குல வியாபாரிகள் மகமை வழங்குதல் முதலிய வழிகளில் நங்குலத்துக் காற்றவேண்டிய கடன்களையும் விளக்கிக் கூறினார்கள்.

வர்த்தகர் மகாநாடு முடிவடைந்த உடன் வாலிபர் மகாநாடு தொடங்கியது. அன்னிய குலத்தினரா யிருந்தும் நங்குல மக்களிடம் பேரபிமானங் கொண்டுள்ளவரும் நமது வள்ளலாருக்கு நெருங்கிய நண்பருமான திருவாரூர் நகரபரிபாலன சபைத் தலைவர் உயர்திரு. பாவ C. கோபாலசாமி முதலியாரவர்கள் நமது பண்டைப் புகழினை எடுத்தோதி, நாம் அசிரத்தையால் இழந்துவிட்ட அம்மேனிலையினை மீண்டும் அடைதற்குரிய வழிகளையும், இனி ஏற்படப்போகும் இராஜீய மாறுதல்களில் நாம் எவ்வாறு கலந்துகொள்ள வேண்டுமென்பதையும் விளக்கி மகாநாடு சிறப்புற நடைபெற்றுப் பயன் தரவேண்டுமென்னுங் கோரிக்கையுடன் மகாநாட்டினைத் திறந்து வைத்தார்கள். வாலிப மகாநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்கு முகத்தான் வரவேற்புத் தலைவர் மஞ்சட்கொல்லை உயர்திரு. ரெ. விநாயகமூர்த்தி முதலியாரவர்கள் தேசிய முன்னேற்றத்திலும் அதற்கடிப்படையான சமூக முன்னேற்றத்திலும் இளஞ் சிங்கங்களுக்குள்ள கடமையினை எடுத்துக் கூறினார்

15890



கள். அதன் பின்னர் தலைவர் திருவிதாங்கூர் உயர்திரு. C. பன்னிருகைப் பெருமாள் முதலியாரவர்கள் தமது முன்னுரையில் நமது முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டைகளாயுள்ள பல குறைகளையும் அவற்றைக் களைதற்குரிய வழிகளையும் தெளிவுற விளக்கி அத்தகைய வழிகளில் தளராதுழைக்குமாறு நங்குல வாலிபர்களையும், அவர்களது உழைப்புக்கு உடனிருந்து துணைபுரியுமாறு அனுபவ முதிர்ந்த பெரியோர்களையும் வேண்டிக் கொண்டார்கள்.

மூன்று மகாநாடுகளின் முதல் அங்கங்களும் முடிந்தபின் மிகமிக மங்களகரமான சடங்கொன்று நிறைவேறியது. முதல் மகாநாட்டின் தலைமை வகித்த சமயம் தாம் உபதேசித்த அரிய திருவாசகங்களைக் கேட்டது முதற்கொண்டே நங்குலப் பேரறிஞரான முத்தைய முதல்வர்பால் நங்குல மக்களனைவர் மனத்திடையும் பேரபிமானமும், பெருமதிப்பும், அன்பும் தோன்றிச் செழித்து வளர்ந்து வந்துள்ளன. அதன் பயனாக நம்மவரனைவரும் அன்னாரை நமது குலத்தினருக்குப் பேருபதேசம் செய்வதற்கென்றே அவதரித்த மகாத்மாவாகப் பாராட்டி வருகின்றனர். நம்மவர் பெருந்திரளாகக் கூடும் அரிய சந்தர்ப்பமாகிய மகாநாட்டுச் சமயத்திலே அன்னாருக்கு அனைவரும் அறிய 'செங்குந்த மகாத்மா' என்னும் தகுந்த பட்டத்தை வழங்கி அதுமுதல் நம்மவரனைவரும் அப்பெரியாரை அவ்வாறே பாராட்டுமாறு செய்தல் வேண்டுமென்னும் பேரவா நங்குலத் தலைவர்களது மனத்திடையே யன்றி ஏனைய பிரமுகர்களது மனத்திடையும் வேரூன்றி இருந்தது. ஆயினும், பெரியோர் தம்மைப் புகழுதலையும் போற்றுதலையும் காணச் சகியார்; அதற்கு இடமுந் தாரார் என்னும் எண்ணத்தினாலே இரண்டாவது மூன்றாவது மகாநாடுகளிலே மேற்சொன்ன அவா ஈடேறாது நின்றது. ஆனால் பரமாத்மனது திருவருள் கூடவே, வேறு பல அரிய விஷயங்களைச் சாதிப்பதற்குச் சாதகமாயிருந்த இந் நான்காவது மகாநாடு இவ்வெண்ணம் ஈடேறுதற்கும் வசதியளித்தது. முதலியாரவர்களது திருவுருவப் படத்தினைத் திறந்து வைக்கும் பெரும் பணியினை இம்மகாநாட்டுச் சமயத்தில் ஆற்றுதற்கு, அன்னாரது அரிய குணங்களைச் செவ்விதின் உணர்ந்தவரும், அரசாங்கத் தோரணையிலே அன்னாருடன் நெருங்கிய சம்பந்தமுடையவரும், பிரெஞ்சிந்திய சட்டசபையின் தலைவரும், காரைக்கால் நகராண்மைக் கழகத் தலைவருமான உயர்திரு. மரி தோமாஸ் அருள் அவர்கள் விருப்புடன் இசைந்திருந்தனர். ஆனால் விலக்கமுடியாத அசந்தர்ப்பத்தால் அன்னார் வருவது தடைப்பட்டது. ஆயினும் இப்பெரு விழாவினை ஆற்ற, முதலியாரவர்களிடம் பேரபிமானங் கொண்டவரும், அவரது அரிய உபதேசங்களைப் போற்றித் தமது ஜில்லாவிடைப் பரப்பி வருபவருமான ஈரோடு தலைமை ஆசிரியர் உயர்திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியாரவர்கள் இசைந்து முன் வந்து, நமது அறிஞரது தூய குணங்களனைத்தையும் எடுத்தறிவுறுத்தி, அத்தகைய பெரியாரது திருவுருவப் படம் எல்லோர்க்கும் வழிகாட்டியாக விளங்குமாறு, திறக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், அவரது உருவத்தை அடிக்கடி கண்டு தூய சிந்தனையிலாழ்ந்து அவரது அடிச்சுவடு பற்றி முன்னேற முயலவேண்டிய நமது கடமையையும் விளக்கி, அவருக்குச் 'செங்குந்த மகாத்மா' வெனும் பட்டத்தினையும் உரிமையாக்கி அவரது திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார்கள். உடனே ஆர்வத்துடன் எழுந்த ஜே கோஷமும் ஆரவாரமும் மக்களது உற்சாகத்தையும் திருப்தியையும் விளக்கின. தமது கொள்கைக்கு எதிரான சடங்கு திடீரென்று தமது சம்பந்தமாகவே நிறைவேறியது கண்டு திடுக்கிட்ட நமது மகாத்மாவும் அன்பு கனிந்த திருவதனத்துடன் முன் வந்து, அத்தகைய சடங்கை-தமது அனுமதியின்றித் தம்மைப் பற்றிநடத்தப்பட்ட தமக்கிஷ்ட மில்லாத சடங்கை-தாம் விரும்பவில்லை யாயினும் அது அறிவிக்கும் அன்பையும் அபிமானத்தையும் நன்றியுடன் ஏற்றுக்கொள்வதாகக் கூறி, உயரிய இலக்ஷியங்களைப் போற்றிக் கையாளுதலே நமது கடமையென்றும், அத்தகைய இலக்ஷியங்களை நாளுக்கு நாள் மாறக்கூடிய ஒரு மனிதன்மீது சாற்றி அதன் வாயிலாகப் போற்றுவதால், மனிதன் குறைபாடடையுங் காலத்தில இலக்ஷியத்துக்கும் குறைபாடு நேரக்கூடுமென்றும் விளக்கினார்கள். அச் சமயத்தில், கூட்டத்திலிருந்த நிம்மதியும் நிச்சப்தமுமே திருவுருவப் படத் திறப்புவிழா எவ்வளவு விரைவிலேயே பயனளித்து விட்டதென விளக்கின.

இத்தகைய அரிய சடங்கு நிறைவேறியதும், அசந்தர்ப்பங்கள் காரணமாக மகாநாட்

டுக்குவர இயலாது வருந்திய அபிமானிகளது வாழ்த்துக் கடிதங்களும் தந்திகளும் வாசிக்கப் பெற்ற பின்னர் முதல் நாட் கூட்டம் மிகவும் திருப்திகரமாக முடிந்தன.

இரண்டாம் நாள் காலை சுமார் 8 மணிக்கு மீண்டும் மகாநாடு தொடங்கியது. கூட்டமும் ஆர்வமும் முதல்நாளினும் அதிகமாகவே பெருகியிருந்தன. அன்று முழுதும் தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டன. மொத்தத்தில் இருபத்தொரு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியுள்ளன. அவற்றை மித்திரனில் மற்றொரு புறங் காண்க. தீர்மானங்கள் விஷயத்தில் மற்ற மகாநாடுகளுக் கில்லாத தனி விசேஷமொன்று இம்மகாநாட்டுக்குண்டென்றே சொல்லவேண்டும். குல முன்னேற்றத்துக்கான ஏற்பாடுகளை யொட்டிய தீர்மானங்களைப் பற்றிப் பேரறிஞர் பலர் மிக விளக்கமாகப் பேசியதோடு அவற்றைக் கட்டாயமாக நடைமுறைக்குக் கொண்டுவருதற்கான ஏற்பாடுகளும் அப்பொழுதே செய்யப்பட்டன. உதாரணமாக நம்மவரில்லங்களில் நடக்கும் சுபசடங்குகளில் கல்விநிதிக்கு நன்கொடை வாங்குவதைப் பற்றித் தொகை ஒரு ரூபாய்க்குக் குறையாமலிருக்க வேண்டுமெனத் திட்டப்படுத்தப்பட்டதோடு ஒவ்வொரு சடங்குக்கும் சென்று நன்கொடைகளைத் தவறாது வசூலித் தனுப்புவதற்கு ஒவ்வொரு ஊருக்கும் முக்கியஸ்தரொருவரிடம் வாக்குறுதி வாங்கப்பெற்றது. அவ்வாறே மகமை முதலியவற்றிலும் திட்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தீர்மானங்களெல்லாம் முடிந்த பின்னர் இரவு சுமார் 9 மணிக்கு இறைவணக்கத்தோடும் ஆனந்த கோஷத்தோடும் அனைவரும் கலந்தனர். உடனே தலைவர்களது ஊர்வலம் புறப்பட்டது. எண்ணற்ற விளக்குகள் எங்கும் ஒளிபரப்பவும், பல்லியம் முழங்கவும், மலர் மணம் கமழவும், ஜே கோஷம் வானைப் பிளக்கவும், உற்சாகமும் ஆர்வமும் எங்குந் தாண்டவமாடவும் தலைவர்களும் பிரதிநிதிகளும் கமலாலயத்தைச் சுற்றி வலம் வந்த காட்சி கண்டவர் மனத்தினைக் கவர்ந்திட்டது. ஊர்வலம் முடிந்தபின் அனைவரும் நமது வள்ளலாரகத்தில் தங்கி அமைதி யுற்றனர்.

மகாநாட்டினால் ஏற்பட்ட மகத்தான கிளர்ச்சியும் அதில் நிறைவேற்றப்பட்ட அரிய தீர்மானங்கள் பலவும் விரைவிலேயே பலன் தரக்கூடிய வகையிலே முனைந்து தொண்டாற்ற அன்பர்கள் ஆர்வத்துடன் முன்வருவரெனவும் அவர்களது முயற்சிக்குச் சித்தி மகுடஞ்சூட்ட குல நாயகனதருள் முன்னிற்கு மெனவும் பூரணமாக நம்புகிறோம்.

---


புனர் ஜென்மம்! புனருத்தாரணம்!

புதிய வடிவம்! புதிய முறை!!

புதிய விஷயங்கள்!!!

தன்னை எக்காலத்தும் தளரவிடாது காப்பதற்கென்றே கங்கணங் கட்டிக்கொண்டுள்ள குலாபிமானக் குரிசில்களின் பேராதரவில் நங்குலப் புதல்வனான 'செங்குந்த மித்திரன்' நிகழும் சித்திரை மாத முதல் அன்பர்கள் அனைவரும் திடுக்கிடுமாறு புதிய வடிவெடுத்துப் புதுமையான அரிய விஷயங்கள் பல தாங்கி ஒவ்வொரு மாதமும் உலாவுவான். முதல் தேதியன்று கட்டாயம் அன்பர் [illegible] அளவளாவ ஆர்வத்துடன் ஓடிவருவான்.

இனிமேலும் அன்பர்கள் அவனை ஆதரிக்கத் தயங்காது முன் வருவார்களாக!

பழமை [illegible]ரக் காரணமாயிருந்தவர்கள் புதுமை ஓங்கக் கை கொடுப்பார்களாக.




# மகாத்மா உபதேசம்

## ஏழைகள் பணம் எரிக்கும் நெருப்பாகும்

[ஜே. த.]

மகாநாட்டில் முதல்நா ளிரவு, குழுமியிருந்த மக்களனைவரும் இனிய கீதத்தின் வயப்பட்ட நாகம் போன்று அசையாது லயித்து நின்று கேட்க நமது மகாத்மா மூத்தையர் உபதேசித்த பொன்மொழிகளின் சாராம்சத்தைக் கூறுவிடின் மகாநாட்டு மலர் பூரண அழகுடன் பொலியாதென எண்ணுகிறேன். கல்வியில் தமக்குள்ள ஆர்வத்தைப் பூர்த்தி செய்துகொள்ளவும் அறிவுத் தாகத்தைத் தணித்துக்கொள்ளவும் போதிய பொருளுதவியின்றிப் பாறையிற் படிந்த பருவிதை போன்று வீணே மங்கி வாடும் ஏழை மாணவர் சார்பாக, அவர்களுக்குக் கைகொடுத் துதவுவதற்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ள செங்குந்தர் கல்விநிதியைப் பெருக்கி நிலைப்படுத்தும் வழிகளைப் புகட்ட முன் வந்த பெரியார் அந்நிதியினை இலகுவில் அபிவிருத்தி செய்வதற்கு என்றுந் தளராத பேராதாரமாய் நிற்கக்கூடியது மகமை நன்கொடையே எனக் கண்டு அதைப்பற்றிச் சவிஸ்தாரமாக அழுத்திப் பேசினர். காண்போர் மனதைக் கட்டவல்ல அந்தக் காந்த உருவத்தின் திருவாக்கினின்றும் இனிய தொனியோடு பிறக்கும் அழுத்தமுந் திருத்தமுந் தெளிவும் பொதிந்த சிறு சிறு வாக்கியங்களின் அழகைக் கடன் வாங்குவது இயலாத காரியமேனும் அவரது கருத்துக்களை ஒருவாறு வெளியிடுவது பெரும்பயன் தருமெனக் கருதுகிறேன்."

"எல்லாத் தருமங்களிலும் சிறந்தது கல்வியையளிப்பதுதான்—அறிவுக் கண்ணைத் திறப்பதுதான்—என்று எனக்குத் தோன்றுகிறது. நமது குலத்திலே, வறுமை காரணமாக, எத்தனையோ மாணவர்கள்—சிறிது பொருளுதவி யிருந்தால் சிறந்த அறிவாளிகளாக விருத்தியாகக் கூடியவர்கள்—வீணே பயனற்றுப் போகிறார்கள். அத்தகையவர்களுக்குக் கைகொடுத்து ஆதரிப்பது ஒரு சிறந்த தருமமா, குலப்பணியா, அல்லவா என்று யோசியுங்கள். அப்படிப்பட்ட மாணவர்களுக்குப் பொருளுதவி புரிவதற்கென்றே நமது கல்விநிதி நிறுவப்பட்டிருக்கிறது. அதனை ஆதரிப்பது—அதனை மேன்மேலும் விருத்தி செய்வது—அந்த வழியிலே தாராளமாக நன்கொடை வழங்குவது—நமது குலத்திலே தோன்றியுள்ள செல்வந்தர்களது முதற்கடமை யாகும். அப்படி நன்கொடை வழங்குவதும் கஷ்டமல்ல: அதற்காகத் தனியாகப் பொருளைத் தேடவேண்டியதில்லை; தங்கள் கையைவிட்டும் அதிகமாகக் கொடுக்க வேண்டியதில்லை. நமது வியாபாரிகளிடையே மகமை வசூலிக்கும் ஏற்பாடு ஒன்று இருந்து வருகிறது. அந்த ஏற்பாடு இத்தகைய தர்ம கைங்கரியத்துக்கு மிகவும் உபயோகப்படக் கூடியதாகும். அந்த மகமைப் பணத்தைக் கல்விநிதிக்கு நன்கொடையாக வழங்குவதென்னும் நிர்ணயம் வைத்துக்கொண்டு அதைக் கடைப்பிடித்து நமது வியாபாரிகள் நடப்பார்களானால் அவர்கள் பெரும் புண்ணியம் செய்தவர்களாவார்கள்; நமது கல்விநிதியும் விரைவில் பன்மடங்காக விருத்தியாகி, பல ஏழைச் சிறுவர்கள் அறிவு நிரம்பிய குலச்சீலர்களாய் ஓங்கவும் அதனால் நமது குலம் விரைவில் முன்னேறவும் அனுகூலமா யிருக்கும். சில வியாபாரிகள் இந்த முறையை இப்போது அனுசரித்து வருவதாகத் தெரிகிறது. ஆனால், சிலர் இந்த மகமைப் பணத்தை நன்கொடையாக வழங்கத் தயங்குகிறார்கள்; இன்னுஞ் சிலர் கண்டிப்பாய் மறுக்கிறார்கள். சிலர் அந்தப் பணத்தை ஆலயத் திருப்பணிகளுக்கு உபயோகப்படுத்துவதாகச் சொல்லுகிறார்கள்; வேறு சிலர் எவ்வழியிலும் செலவிடாது சேர்த்து வைத்துக்கொண் டிருக்கிறார்கள்; மற்றுஞ் சிலர் தாமே அனுபவித்து வருகிறார்கள். இத்தகைய வியாபகரிகளுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நன்றாக யோசியுங்கள்: இந்த மகமைப் பணம் முதலாளிகளாயுள்ள வியாபாரிகளுடையதல்ல; ஏழைகளுடையது—நாளெல்லாம் ஓயாது உழைத்து இரண்டணாவும் மூன்றணாவும் சம்பாதித்து, அறைவயிற்றுக் கஞ்சியும் கிடைக்காது வாடி வருந்தும் பரம ஏழைகளிடம் கட்டாயப்படுத்தி வசூலிக்கப்படுவது. ஆகவே, வியாபாரிகளுக்கு அதன்மீது என்ன உரிமை உண்டென்று கேட்கின்றேன். ஏழைகளிடமிருந்து வசூலிக்கப்படும் பணத்தின்மீது—ஏழைகளின் பணத்தின்மீது—அந்த ஏழைகளுக்கே உரிமையுண்டு. ஏழைகளது பணத்தை ஏழைகளுக்காகவே செலவிடவேண்டும். அன்றி, அவர்களுக்குதவாத முறையிலே, கோயில்களுக்கும் திருவிழாக்களுக்கும் அதை வாரி யிறைப்பதால் அவர்களுக்கு ஒரு பயனுங் கிடையாது. அது பெரும் பாபமுமாகும். ஒன்றுக்கும் உபயோகப்படுத்தாது தாமே சாப்பிட்டு வருவதோ, பின்னும் கொடிய பாபமாகும்.

"கடவுள் ஏழை பங்காளர்—ஏழைகளைக் காப்பாற்றுவதில் கண்ணுங் கருத்துமுடையவர்—ஏழைகளின் இதயத்திலே, மெலிந்துகிடக்கும் அவர்களது எலும்புக் கூட்டிலே, எழுந்தருளி யிருப்பவர். ஆகவே ஏழைகளது பணம்—அவர்களை வருத்தி வசூலிக்கப்படும் பணம்—அவர்களுக்காகப் பயன்படுத்தப்படாது வீண் ஆடம்பரங்களிலே விரயம் செய்யப்படுவதை, அல்லது பணத்தில் கொழுத்த வியாபாரிகளது பெட்டிகளிலே குவிந்து கிடப்பதை, அல்லது அவர்களது சுயநலத்துக்காக உபயோகப்படுத்தப்படுவதைக் காணச் சகியார். அப்படிச் செய்பவர்களைத் தண்டித்தே தீருவார்.

"ஆதலால் (திரும்பவும் சொல்கிறேன்) ஏழைகளிடமிருந்து வசூலிக்கும் மகமைப் பணத்தை

அவர்களுடைய நன்மைக்காகச் செலவு செய்யத் தயங்காதீர்கள்; அதை வீணே சேர்த்துக் குவித்து வைத்திராதீர்கள்; சுயநலத்துக்காகவோ, ஏழைகளுக்கு உபயோகப்படாத வகையிலோ செலவு செய்யத் துணியாதீர்கள். வருந்தி வருந்தி, உழைத்து உழைத்துச் சிறிது ஜீவனம் தேடும் ஏழைகளிடமிருந்து வசூலிக்கப்படும் பணம் நெருப்புக்குச் சமானமாகும். அது கையிலுள்ள வரை வைத்துள்ளவர்களை எரித்துக்கொண்டே—அரித்துக்கொண்டேதான்—இருக்கும். அப்படி எரிக்கப்பட்டுப் பல குடும்பங்கள் நலிந்து அழிந்து போயின; பல குடும்பங்கள் இன்றும் நலிந்துகொண்டே வருகின்றன. ஆதலால் ஏழைகளுடைய மகமைப்பணம் கையில் சேர்ந்த உடனே அதை அகற்றிவிட வேண்டும்—உபயோகித்துவிட வேண்டும். வீணுக்கல்ல, சுயநலத்துக்கல்ல, ஏதோ ஒரு வழியிலல்ல—மீண்டும் சொல்லுகிறேன்—ஏழைகளுக்காக—அவர்கள் கஷ்டத்தைப் போக்குவதற்காக—அவர்களைக் கை தூக்குவதற்காக. சிறிது சிறிதாக வசூலாகும் பொழுதே—அவ்வப்பொழுதே உபயோகப்படுத்தாமல் அதை நம்மிடம் சேரவிட்டால், பிறகு ஒன்று பத்தாகும், பத்து நூறாகும். அதன் பின்னர் அதை வழங்குவதற்கு மனம் வாராது. மனிதன் அளவில்லாத ஆசையுடையவன்—பணப்பற்று மிகுந்தவன். ஆகவே, தொகை சிறிது அதிகமாகச் சேர்ந்துவிட்டால் 'ஐயோ, இவ்வளவு தொகையை எப்படிக் கையை விட்டுக் கொடுப்பேன்' என்று தயங்குவது மனிதனது இயற்கை. ஆதலால் சிறிது சிறிதாகச் சேரும்போதே கையைவிட்டு அப்புறப்படுத்திக்கொண்டே வந்துவிட்டோமானால், இந்தக் கஷ்ட நிலைக்கு—இந்தத் தயக்கத்துக்கு—இந்தப் பேராசைக்கு—இடமிராது.

"இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். கடவுள் பேரால் உங்களுடைய ஜம்பத்துக்கும், உங்களுடைய பற்றைத் திருப்தி செய்வதற்கும் ஏழைகள் பணத்தைச் செலவு செய்யாதீர்கள். இந்தக் காலத்திலே கோயில் திருப்பணிகளுக்கும் திருவிழா ஆடம்பரங்களுக்கும் கணக்கு வழக்கில்லாது செலவு செய்வதால் ஏழைகளுக்கு ஒரு பலனும் ஏற்பட்டுவிடாது. ஆகையால் அவற்றிற்காகச் செலவிடுவது ஏழைகளுக்காகச் செலவிடுவதாகாது. உங்களுக்குக் கடவுள் பக்தி இருக்கட்டும், ஆலயப் பற்று இருக்கட்டும்—நான் வேண்டாமென்று சொல்லவில்லை. சரியென்று—அவசியமென்று—உங்களுக்குத் தோன்றினால், உங்களிடம் பணமிருந்தால், அதற்காகச் செலவு செய்யுங்கள். அதை நான் தடுக்கவில்லை; அது உங்களிஷ்டம். ஆனால் அதற்காக—உங்களுடைய பற்றுக்காக—ஏழைகள் பணத்தைச் செலவு செய்யாதீர்கள் என்றுதான் வேண்டிக்கொள்ளுகிறேன். இல்லை; மகமைப் பணத்தில் சிறிதாகிலும் தெய்வத் திருப்பணிக்காகச் செலவிட வேண்டுமென்று எண்ணுகிறீர்களா? ஒரு வழி சொல்லுகிறேன். எவ்வளவு மகமைப்பணம் ஏழைகளிடமிருந்து வசூலிக்கிறீர்களோ, அவ்வளவு பணம்—சரிக்குச் சரியாக—நீங்கள் போட்டு அதனுடன் கூட்டிக்கொள்ளுங்கள். பிறகு மொத்தப் பணத்தையும் இரண்டாகப் பங்கிடுங்கள். ஒரு பகுதியை ஏழைகளுக்குச் செலவிடுங்கள்; மற்றொரு பகுதியை உங்களிஷ்டப்படி ஆலயத் திருப்பணிக்காகச் செலவு செய்துகொள்ளுங்கள். இதிலென்ன கஷ்டம்? உங்களுடைய பக்திக்கும் பங்கமில்லை; ஏழைகளை ஏமாற்றும் பாவத்துக்கும் இடமில்லையல்லவோ?

"வியாபாரிகளே, மீண்டும் கூறுகிறேன், மகமைப்பணத்தை நன்கொடையாக வழங்குவது ஒன்றுதான் நமது கல்விநிதியை விரைவில் வளர்க்கும். அதுவே அப்பணத்திற்கும் சிறந்த உபயோகமாகும். அது ஏழைகள் பணம், அதைச் சொந்தத்துக்கு உபயோகப்படுத்தினால் ஏழை பங்கானது தண்டனைக்கு ஆளாவீர்கள், அது கையிலிருக்கும் வரை சுட்டுக்கொண்டே—தீய்த்துக்கொண்டேதான் இருக்கும், ஆகையால் அதை அவ்வப்போது உபயோகித்துவிடவேண்டும், உபயோகிப்பது ஏழைகளது நன்மைக்காகவே இருக்கவேண்டும் என்னும் உண்மைகளை ஆழ்ந்து ஆராய்ந்து சரியான முடிவுக்கு வாருங்கள். கல்விநிதியை வளர்க்கும் கைங்கரியத்தில், ஏழைகளது அறிவுக்கண்ணைத் திறக்கும் கைங்கரியத்தில், குலத்தினை முன்னேற்றும் கைங்கரியத்தில் ஈடுபட முன் வாருங்கள்".

இதுவே ஏறக்குறைய நமது மகாத்மா அவர்கள் உபதேசத்தின் சாராம்சமென எண்ணுகிறேன். வாசாஞானம் பேசாது அனுபவ முதிர்ச்சியால், ஆழ்ந்த ஆராய்ச்சியால் கண்டு தெளிந்தவற்றையே பிறர்க்கு எடுத்துப் போதிக்கும் நிர்ணயமுடைய நமது பெரியாரது பொன்மொழிகளை நங்குல மக்கள் பொன்னெனப் போற்றிப் பயன்பெறுவரென நம்புகிறேன்.

## சென்னைத் தலைச்சங்கச் சுற்றுப் பிரயாணம்

திரு. தி. அ. சண்முக முதலியார் சேலம், கோயம்புத்தூர் ஜில்லாவிலும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருவாங்கூர் ஜில்லாவிலும், திரு. சா. ந. குமரகுரு முதலியார் தென்னாற்காடு, திருச்சி ஜில்லாவிலும் பிரசாரமும், சந்தா வசூலும், கல்வி நிதி வசூலும் செய்யவும் பரம்பரைச் சந்தா சேர்க்கவும் வருகிறார்கள். அன்பர்கள் அவர்களுக்கு வேண்டிய உதவியைப் புரிந்து ஆதரிப்பாராக.



## தலைச்சங்கத்தின் ஐந்தாவது பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் நமது நான்காவது மகாநாட்டின் இரண்டாம் நாள் (13-3-33) பகல் சுமார் இரண்டு மணிக்குத் திருவாரூர் மடப்புறம் தக்ஷிணாமூர்த்தி மடாலயத்தில் தலைவர் உயர்திரு ஆ. வே. முத்தைய முதலியாரவர்கள் தலைமையிற் கூடியது. அதுசமயம் எழுபத்தைந்துக்கு மேற்பட்ட கிளைச்சங்கங்களின் பிரதிநிதிகள் குழுமியிருந்தனர்.

கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் சங்கத்தின் நான்காவது அறிக்கைப் பத்திரம் காரியதரிசியவர்களால் வாசிக்கப்பட்டுச் சில சந்தேகங்களும் விளக்கப்பட்ட பின்னர் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

அதன் பின்னர், தலைச்சங்கத்தின் நோக்கத்திற்கும் தொண்டிற்கும் பேருதவி புரிந்து வரும் செங்குந்த மித்திரனை ஆதரிக்கும் முறையிலே அதற்குப் பரம்பரைச் சந்தாதாரரைக் கூடியவரை பெருவாரியாகச் சேர்க்கவும், மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானத்தின்படி நமது கல்வி நிதிக்கு நன்கொடைகள் வசூலித்தனுப்பவும் ஒவ்வொரு கிளைச்சங்கமும் இயன்றவரை உழைப்பெடுத்துக் கொள்ள வேண்டும் என்னும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. அச்சமயமே பல அன்பர்கள் ஆர்வத்துடன் பரம்பரைச் சந்தா செலுத்தி மித்திரனைப் பாரம்பரியமாக ஆதரிக்கும் பெரும் புண்ணியத்தி லீடுபட்டனர்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்

## நான்காவது அறிக்கைப் பத்திரம்

சங்கத்தின் நிருவாக அங்கத்தினர் (1933ஹு மார்ச்சு மீ)

**தலைவர்**

ஆ. வே. முத்தைய முதலியார், பி.ஏ., பி.எல்., புதுவை

**உபதலைவர்கள்**

தி. நா. சபாபதி முதலியார், திருவாரூர்
சு. குழந்தைவேலு முதலியார், திருமயிலாப்பூர்
S. இரத்தினவேலு முதலியார், சைதாப்பேட்டை
V. S. செங்கோட்டையா முதலியார், கோவை
S. சடையப்ப முதலியார், சைதாப்பேட்டை

**அமைச்சர்**

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., சென்னை

**பொக்கிஷதார்**

மா. அ. கனகசபை முதலியார், கோடம்பாக்கம்

**இதர அங்கத்தினர்**

மா. பா. கந்தசாமி முதலியார், பி.ஏ., பி.இ., சென்னை
V. இரத்தின முதலியார், பி.ஏ., பி.எல்., திருமயிலாப்பூர்
C. P. இராமன் முதலியார், பி.ஏ., பி.எல்., திருமயிலாப்பூர்
மா. பரமகுருநாத முதலியார், ,,
மு. சரவண முதலியார், ,,
A. தக்ஷிணாமூர்த்தி முதலியார், திருமயிலாப்பூர்
P. S. தீர்த்தகிரி முதலியார், நுங்கம்பாக்கம்
A. தக்ஷிணாமூர்த்தி முதலியார், வடதிருநாகேஸ்வரம்
M. சாமிநாத முதலியார், காஞ்சிபுரம்
D. C. கந்தசாமி முதலியார், காஞ்சிபுரம்
A. R. செல்லப்பா முதலியார், தக்கோலம்
K. S. குப்புசாமி முதலியார், அசனம்மாபேட்டை
V. V. C. V. நடேச முதலியார், திருச்செங்கோடு
K. மாரிமுத்து முதலியார், அம்மாப்பேட்டை, சேலம்
R. மாணிக்க முதலியார், உன்னியூர்
A. அண்ணாமலை முதலியார், கரூர்
மொ. க. குழந்தையப்ப முதலியார், முறட்டுப்பாளையம்
V. M. மொட்டையப்ப முதலியார், ஈரோடு
K. முத்துக்குமாரசாமி முதலியார், கொல்லங்கோடு
T. சங்கரபாண்டிய முதலியார், சங்கரநயினார் கோவில்
T. P. K. ஆறுமுக முதலியார், தென்காசி
R. வேலாயுத முதலியார், அம்பாசமுத்திரம்
V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்., திருநெல்வேலி
P. A. முத்துக்கருப்ப முதலியார், தல்லாகுளம்
N. K. பழனி முதலியார், தல்லாகுளம்
E. முனியப்ப முதலியார், மண்டலமாணிக்கம்
A. K. C. சிவசுப்பிரமணிய முதலியார், அருப்புக்கோட்டை
P. வேலாயுத முதலியார், கோட்டாறு
C. பன்னிருகைப் பெருமான் முதலியார், பி.ஏ., பி.எல்., திருவநந்தபுரம்

# கடந்த ஆண்டின் வேலைகள்

**நான்காவது பொதுக் கூட்டம்** சென்னை திருமயிலாப்பூரில் தென்னிந்திய செங்குந்தர் மூன்றாவது மகாநாடு நடந்த சமயம் 1931ஸு டிசம்பர்மீ 26-ந் தேதி நடைபெற்றது. அதில் மேற்கண்ட நிருவாகசபை அங்கத்தினர் புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அப்போது சங்கத்தைப் பதிவு செய்யவேண்டு மென்றும், கட்சிகளை யொழிப்பதற்கு நிருவாக அங்கத்தினரும் இதர பிரமுகர்களும் முனைய வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின. சங்கத்தைப் பதிவு செய்வதற்குப் பணமில்லை. சைதாப்பேட்டைக் கட்சியினரைச் சமரசப்படுத்தத் தீவிர முயற்சி செய்தும் பயனில்லாமற் போய்விட்டது. அசனம்மாப்பேட்டை கட்சிகள் மிகப் பெருந்தன்மையான முறையில் நமது சங்கத்தின் முயற்சியால் சமரசப்பட்டன. வேறு சில இடங்களிலுள்ள கட்சிகளைப் போக்க முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**கிளைச்சங்கங்களின் தொகை** முதல் அறிக்கைப் பத்திரம் தயாரித்தபோது 55 ஆகவும், இரண்டாவது தயாரானபோது 76 ஆகவும், மூன்றாவது தயாரானபோது 88 ஆகவும் இருந்து, இப்போது 96 ஆக இருக்கிறது. இவை தோன்றியுள்ள ஊர்களின் பெயர்கள் கடைசிப் பக்கத்தில் அச்சிடப் பெற்றுள்ளன. இச்சங்கங்களிற் பல ஊக்கந் தளர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது. நாட்டின் வறுமை இதற்குக் காரணம் போலும்.

**செங்குந்த மித்திரன்** சந்தாதாரரின் தொகை 3682 ஆக இருந்தும், பணம் அனுப்புவோர் வெகு சிலரே. வசூலுக்குப் போகும் சங்கப் பிரசாரகர்கள் பாக்கிகளை வசூலிக்க மிகவும் சிரமப்படுகின்றனர். அச்சுக்கூலி வரையில் ஐந்நூறு ரூபாய்க்குமேல் 'மித்திரன்' கணக்கில் கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்நிலையே 'மித்திரன்' தவணை தப்பி வருதற்குக் காரணம். இந்நிலையை அனுசரித்தே ஆயுள் பரம்பரைச் சந்தாக்களின் திட்டம் ஏற்படுத்தப் பெற்றது. அதை விரைவில் சித்தியாக்கிவைக்க அன்பர்கள் துணை வேண்டும். வருஷக் கணக்காகப் பாக்கியினைச் செலுத்தாத சந்தாதாரர்களுக்கு அடுத்த மாதத்திலிருந்து பத்திரிகை யனுப்புவதை நிறுத்திவிட்டுப் பாக்கியை வசூலிக்க எண்ணியுள்ளோம்.

**கட்டடநிதி** ஒன்றைத் திரட்டிச் சென்னையில் செங்குந்தர் நிலையமொன்று அமைக்க வேண்டுமெனச் சென்ற மகாநாட்டுச் சமயம் நிறைவேறிய தீர்மானப்படி மதராஸ் பாளையக்காட்டுக் கம்பெனியில் சேரும் உண்டிப்பணம் இதற்கென ஒதுக்கப் பெற்றுளது. அதில் இதுவரையில் சேர்ந்துள்ள தொகை ரூ. 1144 ஆகும்.

**வருவாய்.**—கிளைச்சங்கக் கட்டணங்கள் வருஷா வருஷம் ஒழுங்காக வருவதில்லை. 'மித்திரன்' சந்தாக்களும் பெரும்பான்மை பாக்கியுள்ளன. அடுத்த பக்கத்திலுள்ள வரவுசெலவு ஜாபிதா செலவுக்கேற்ற வரவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. இது காரணமாகவே நமது சங்கம் அச்சுக் கூலிக்கும் இதர செலவுகளுக்கும் கடன்பட்டு ஆயிரத்துக்குச் சுமார் கடன் கொடுக்கவேண்டி யிருக்கிறது. குலாபிமானிகள் மனம் வைத்தால் இக்குறைகளெல்லாம் பஞ்செனப் பறக்குமன்றோ?

**1931ஸு** ஜனசங்கியை (சென்சஸ்) அதிகாரி 'மித்திரன்' ஆசிரியருக்கு எழுதிய கேள்வி ஜாபிதாவுக்கு அவர் ஆங்கிலத்தில் தயாரித்த அறிக்கையையும் விடைப் பத்திரத்தையும் சங்க நிருவாக சபையினர் அங்கீகரித்தனுப்பியதோடு, 'மித்திரன்' அனுபந்தமாக ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிட்டு இம்மகாநாட்டில் வழங்கியுள்ளனர். இது முன்னமே மித்திரனில் 5-வது தொகுதியில் 309-ம் பக்கத்தில் வெளிவந்தது.

**லோதியன் கமிட்டியார்** நமது சங்கத்துக்கு விடுத்த கேள்வி ஜாபிதாவுக்கு நிருவாக சபையார் தயாரித்தனுப்பிய குறிப்பு மித்திரன் 6-வது தொகுதி 83-ம் பக்கத்தில் வெளிவந்துள்ளது.

ம. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T.,
அமைச்சர்.

## அநுதாபம்

செங்குந்த குலாபிமானியும், திருவோத்தூர் ஸ்ரீ ம. தி. பாநுகவி சுவாமிகளின் பிரதம மாணவரும், திருநாவுக்கரசு மடாலய டிரஸ்டிகளி லொருவரும், ஷை மடத்து ஸ்ரீ பாநுகவி மாணவர் கழகத் தலைவரும், ஷை மடத்து ஸ்ரீ பாநுகவி தமிழ்க் கல்லூரி உபதலைவருமான திருவாளர் ஏ. கணபதி முதலியார் அவர்கள் தமது இரண்டு குழந்தைகளையும், தாயாரையும், மனைவியாரையும், மற்றுமுள்ள சுற்றத்தவரினையும், நண்பர்களையும் ஏங்கவிடுத்து 19-2-33 உ யன்று காலை திடீரென உண்டாய மாரடைப்பினால் அகால மரணத்திற்கு இலக்கானதைக் குறித்து ஷை கழக கல்லூரியினர்கள் துக்க மேலீட்டினால் தங்கள் அநுதாபத்தினை அவரது குடும்பத்தினருக்கு அதிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வதுடன் அன்னார் ஆத்மா சாந்தியடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகிறார்கள்.

### 1931-ஆம்ஸு டிசம்பர்மீ 1-ந்தேதி முதல் 31-1-1933 வரை, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகள்

| வரவு | தொகை ரூ. | அ. | பை. | செலவு | தொகை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| 30-11-31-ல் பாங்கி யிருப்பு | 120 | 1 | 0 | மித்திரனுக்கு அச்சுக் கூலி | 1614 | 13 | 3 |
| ,, கையிருப்பு | 20 | 15 | 9 | பத்திரிகைக்குத் தபால் செலவு | 580 | 14 | 0 |
| மித்திரன் சந்தா | 2566 | 11 | 3 | சிப்பந்தி சம்பளம் | 1288 | 8 | 0 |
| விளம்பரக் கட்டணம் | 35 | 0 | 0 | பிரசாரச் செலவு | 137 | 0 | 0 |
| நன்கொடை | 135 | 7 | 0 | பிளாக்கு செய்வதற்குக் கூலி | 37 | 0 | 0 |
| கிளைச்சங்கக் கட்டணம் | 49 | 0 | 0 | சங்கம் தபால் செலவு | 39 | 1 | 0 |
| போட்டோ படங்கள் புத்தகம் முதலியன விற்பனை வரவு | 26 | 3 | 0 | பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்தியதும் உபகரணங்களும், இதர சில்லரைச் செலவுகளும் | 81 | 5 | 0 |
| பிளாக்கு செய்ய வசூலான தொகை | 32 | 0 | 0 | கல்வி நிதிக்குச் செலுத்தியது | 225 | 0 | 0 |
| கடன் வரவு | 64 | 0 | 0 | பாங்கி கடனுக்குச் செலுத்தியது | 441 | 5 | 11 |
| பாங்கியிலிருந்து வட்டி வரவு | 507 | 10 | 2 | பாங்கி யிருப்பு | 8 | 5 | 3 |
| பிக்சட் டிபாசிட்மேல் கடன் | 899 | 13 | 3 | கையிருப்பு | 3 | 9 | 0 |
| | 4456 | 13 | 5 | | 4456 | 13 | 5 |

*N.B.*—பிக்சட் டிபாசிட்டி லிருந்த தொகையின்மேல் வாங்கிய கடனுக்கு வட்டியும் முதலும் செலுத்தியது போக மீதி யிருக்கும் தொகை ரூபாய் 107-12-9.

## மித்திரனுக்குப் பரம்பரைச் சந்தாதாரராகச் சேர்ந்துள்ளவர்கள்

### தொகை செலுத்தியுள்ளவர்கள்

1. திரு. தி. நா. சபாபதி முதலியாரவர்கள்.
2. திரு. ஆ. வே. முத்தைய முதலியாரவர்கள்.
3. திரு. ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள்.
4. திரு. தி. நா. கலியாண சுந்தர முதலியாரவர்கள், திருவாரூர்.
5. திரு. R. வேலாயுத முதலியாரவர்கள், அப்பாசமுத்திரம்.
6. திரு. அ. பச்சையப்ப முதலியாரவர்கள், காஞ்சிபுரம், (ரூ. 10/-மட்டும்).
7. மானும்பதி டிரேடிங் கம்பெனியார், நுங்கம்பாக்கம், சென்னை. (ரூ. 5/-மட்டும்)

### கையொப்ப மிட்டுள்ளவர்கள்

8. திரு. R. மாணிக்க முதலியாரவர்கள், உன்னியூர்.
9. திரு. C. பன்னிருகைப் பெருமாள் முதலியாரவர்கள், திருவிதாங்கூர்.
10. திரு. A. R. செல்லப்பா முதலியாரவர்கள், தக்கோலம்.
11. திரு. ஆ. திருவேங்கட முதலியாரவர்கள், காஞ்சிபுரம்.
12. திரு. T. V. அருணாசல முதலியாரவர்கள், சைதாப்பேட்டை.
13. திரு. S. இரத்தினவேல் முதலியாரவர்கள் ,,
14. திரு. மா. வே. சொக்கலிங்க முதலியாரவர்கள் ,,
15. திரு. S. T. நடேச முதலியாரவர்கள் ,,
16. திரு. மா. அ. கனகசபை முதலியாரவர்கள், கோடம்பாக்கம்
17. திரு. மே. தி. பொற்பாத முதலியாரவர்கள், அசனம்மாபேட்டை
18. திரு. K. S. குப்புசாமி முதலியாரவர்கள் ,,

## மகாநாட்டுச் சமயம் கல்விநிதிக்கு வழங்கப்பட்ட நன்கொடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மா. பொ. பெரியசாமி முதலியாரவர்கள், மதுரை | | ரூ. | 1 |
| 2. | எஸ். மாணிக்க முதலியாரவர்கள், | ,, | ரூ. | 1 |
| 3. | செ. வீ. கனகசபாபதி முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 4. | கா. ப. பழனிக்குமாரு முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 5. | ச. ஆண்டியப்ப முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 6. | மா. குப்புசாமி முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 7. | கு. வயிறவ முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 8. | ப. மு. வையாபுரி முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 9. | கி. பொன்னுச்சாமி முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 10. | கி. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 11. | S. N. சண்முகவேல் முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 12. | க. பழனியாண்டி முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 13. | மு. இருளாண்டி முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 14. | மா. மாயாண்டி முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 15. | கி. பொன்னம்பல முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 16. | எஸ். பழனியப்ப முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 17. | கொ. பழனிச்சாமி முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 18. | V. வீரபத்திர முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 19. | M. திருமேனி முதலியாரவர்கள். | ,, | ரூ. | 1 |
| 20. | மு. கருப்பசாமி முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 21. | தி. வெ. பழனியப்ப முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 22. | க. ச. சங்கிலி முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 23. | ஸ்ரீ வில்லிபுத்தூர் ச. சோமசுந்தர முதலியாரவர்கள் | | ரூ. | 1 |
| 24. | ,, மு. ச. சோமசுந்தர முதலியாரவர்கள் | | ரூ. | 1 |
| 25. | திரு. இரத்தின முதலியார், திரு. சாமி முதலியாரவர்கள், அம்மையப்பட்டு | | ரூ. | 1 |
| 26. | திரு. சு. சடையப்ப முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 27. | அ. மாணிக்க முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |
| 28. | அ. க. அப்பாவு முதலியாரவர்கள் | ,, | ரூ. | 1 |

### திரு. ச. நா. குமரகுரு முதலியார் மூலம் வசூலான நன்கொடை விபரம்

வடாற்காடு ஜில்லா, திருப்பத்தூர் மடவாளம், செலந்தம்பள்ளி திரு. சி. முருகேச முதலியார் அண்டு பிரதர்ஸ் அவர்கள் 13-3-33-ல் திருவாரூரில் கூடிய தென்னிந்திய செங்குந்தர் நான்காவது மகாநாட்டில் நமது கல்விநிதிக்கு மனமுவந்து அளித்த நன்கொடை ரூ. 2—0—0

23-3-33-ல் திருச்சி ஜில்லா வாரியங்காவல் பூ. ஏகாம்பர முதலியார் அவர்கள் நான்காவது மகாநாட்டிற்கு வந்ததின் ஞாபகார்த்மாக கல்வி நிதிக்கு வழங்கிய நன்கொடை ரூ. 0—8—0

குவாகம் வித்வான் ந. சு. பெரிய பிள்ளை முதலியார் அவர்கள் நமது நான்காவது மகாநாட்டிற்கு வந்ததின் ஞாபகார்த்தமாக நமது கல்விநிதிக்கு மனமுவந்தளித்த நன்கொடை ரூ. 0—4—0

பொன்பரப்பி திரு. சா. அண்ணாமலை முதலியார் அவர்கள் நான்காவது மகாநாட்டிற்கு வந்ததின் பயனாக நமது கல்விநிதிக்கு மனமுவந்து அளித்த நன்கொடை ரூ. 0—8—0

பொன்பரப்பி ப. ச. தங்கவேல் முதலியார் அவர்கள் 13-3-33-ல் 4-வது மகாநாட்டிற்கு விஜயம் செய்ததின் ஞாபகமாக நமது கல்விநிதிக்கு மனமுவந்து அளித்த நன்கொடை ரூ. 0—8—0

பொன்பரப்பி திருவாளர் அய்யாதுரை முதலியார் அவர்கள் நான்காவது மகாநாட்டிற்கு விஜயம் செய்ததின் ஞாபகமாக நமது கல்விநிதிக்கு வழங்கிய நன்கொடை ரூ. 0—8—0

திருச்சி ஜில்லா வாரியங்காவல் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் திருமடம் தி. கு. பழனி முதலியார் அவர்கள் 13-3-33-ல் நான்காவது திருவாரூர் மகாநாட்டிற்கு வந்ததின் ஞாபகமாக "செங்குந்தர் கல்விநிதிக்கு" மனமுவந்தளித்த நன்கொடை ரூ. 0—4—0

### கர்னபூஷண நன்கொடை

5-4-33-ல் திருவல்லிக்கேணி நெய்யக்காரத் தெரு, திரு கு. சி. கோவிந்தராஜு முதலியார் திரு. கு. சி. நாகலிங்க முதலியார் குமாரர்களுக்கு கர்னபூஷண முகூர்த்தத்தில் தலைச்சங்க கல்வி நிதிக்குக் கொடுத்த நன்கொடை ரூ. 1—0—0.



## சென்னை ஜில்லா

### திருவல்லிக்கேணி செங்குந்த வீரவாகுதேவர் சங்கம்

15-4-33 மாலை 6 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சிவஞான முருகானந்த சுவாமிகள் தலைமையில் கூடிய பொதுக் கூட்டத்தில் திரு. தி. அ. சண்முக முதலியார் "முருகன் பெருமை" என்னும் விஷயத்தையும், திரு. எதிராஜ முதலியார் "ஆலய வழிபாடு" என்னும் விஷயத்தையும் உபந்யசித்தார்கள்.

## அநுதாபம்

தலைச்சங்கத்தின் நிருவாகசபை அங்கத்தினரும், கல்விநிதியின் பொக்கிஷதாரருமான உயர் திரு. V. இரத்தின முதலியார், (பி. ஏ., பி. எல்.) அட்வகேட், சென்னை) அவர்கள் மனைவியார் 8-4-33 அன்று சிவபத மடைந்தது கேட்டுப் பெரிதும் வருந்துவதோடு அரிய மனைவியை யிழந்த முதலியாரவர்கட்கும் அவரது குடும்பத்தார்க்கும் எமது அநுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அம்மையாரது ஆன்மா சாந்தியுறுமாக !

## அநுதாபம்

சோளிங்கபுரம் பிரபலஸ்தரான உயர்திரு. பட்டணம் முனிசாமிமுதலியாரவர்கள் 13-4-33அன்று மார்நோய் கண்டதன் பயனாய் மண்ணுலக வாழ்வை நீத்ததுகேட்டு வருந்துவதோடு அன்னாது ஆன்மா சாந்தியடையக் கோருகிறோம். முதலியாரவர்களது குடும்பத்துக்கு எமது அநுதாபம் உரித்தாகுக.

## தேர்தல் வெற்றி

### தக்கோலம்

சமீபத்தில் நடந்த தக்கோலம் யூனியன்போர்டு தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் அங்கத்தினராய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் :

திரு. அ. ரா. செல்லப்ப முதலியார், திரு. எஸ். குப்புசாமி முதலியார், திரு. எஸ். வைத்தியநாத முதலியார் இவர்கள் மூவரும் அங்கத்தினர்களாய் தேர்ந்தெடுக்கப்பட் டிருப்பதுடன் திரு. அ. ரா. செல்லப்ப முதலியார் போர்டின் தற்கால பிரசிடெண்டாய் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**நீங்கள்** ஒன்று சேர்ந்து கூட்டிய மகாநாட்டில்
ஆழ்ந்து கலந்து ஆராய்ந்ததன் பயனாக
ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானங்களை
ஆதரித்து நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமல்லவா?

தலைச்சங்கத்தி னாதரவில் நடைபெறும் செங்குந்தர் கல்விநிதிக்கு,

(1) ஒவ்வொரு கிராமத்திலும் நம்மவர் சுப காரியங்களில் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் நன்கொடை வழங்கவேண்டும் ;

(2) நம்மவர்களால் நடத்தப்படும் வியாபாரத்தில் கிடைக்கும் மகமைப் பணத்தில் நான்கில் ஒரு பகுதியை நன்கொடையாக வழங்க வேண்டும் ;

(3) வியாபாரிகளல்லாத மிராசுதாரர்கள் பண்ணையாட்கள் முதலியவர்களுக்குக் கொடுப்பது போல் அறுவடை காலத்தில் ஏகராவுக்கு ஒரு பட்டணம் படி வீதம் தானியம் வழங்க வேண்டும் ;

என்னும் முக்கியமான தீர்மானங்கள் கவனத்தி லிருக்கின்றனவா ? அவற்றை இதுவரை எவ்வளவு தூரம் நடை முறைக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள் ?

சுப காரியங்களில் நன்கொடை வசூலிப்பதாக ஜில்லாவுக் கொருவராக வாக்குறுதி யளித்த முக்கியஸ்தர்களும்' தமது வாக்குறுதியை மறந்திரார்களென நம்புகிறோம்.

உ

ஆங்கீரஸஞூ மாசி மாதம் 29—30 தேதிகளில் நடைபெற்ற

தென்னிந்திய செங்குந்தர் நான்காவது மகாநாட்டில்

## கொடியேற்று விழா ஆற்றிய

குடியேற்றம் தாலுக்கா போர்டு தலைவரும்

வடஆற்காடு ஜில்லா போர்டு அங்கத்தினரும்

குடியேற்றம் நகரபரிபாலன சபை அங்கத்தினருமான உயர் திருவாளர்

## மா. ஆ. வேலாயுத முதலியாரவர்கட்கு

அச்சமயம் வரவேற்புச் சபையார் வாசித்தளித்த

# வரவேற்பு நல்லுரை

குடியேற்றப்பதி குலவிடு குரிசிலே!

நாடாவளங்கள் பலவற்றிற்குத் தாயகமாய் விளங்கும் தொண்டை நன்னாட்டிலே தனக்கு அழகிய அணிகலன்களாகத் திகழும் அறிஞர்களையும் அவர்கள் குறைபாடின்றி இன்புற்றிருப்பதற்கு வேண்டிய செழுமையையும் பெற்று ஏற்றத்துடன் விளங்குவதால் தனது இயற்பெயரைக் காரணப் பெயராக்கிக்கொண்டுள்ள பழம்பதியினின்றும் குலப்பணி யாற்றுங் குறிப்பினோடு சோழ வளநாட்டின் தலைநகரம் போந்த தங்களை இங்குக் குழுமியுள்ள செங்குந்த மக்களனைவரது உள்ளங்களும் ஒரு வழிப்பட்டு இனிதே வரவேற்கின்றனவெனக் கூறவும் வேண்டுமோ? உண்மையிலேயே தங்கள் வரவு இப்பதியினைப் புனிதமாக்கிற்று; எங்கள் உள்ளங்களையும் உவகை நீராட்டித் தூய்மைப்படுத்திற்று.

பொதுநல நோக்கம் பூண்டிடு புண்ணிய!

நகரபரிபாலன சபை, தாலுக்காச் சபை, ஜில்லாச் சபை முதலிய உள்ளூர்ச் சபைகளில் தங்களை அங்கத்தினராகவும் தலைவராகவும் அமர்த்தித் தங்களது அறிவு, ஆற்றல், வண்மை ஆதியவற்றின் இன்சுவைகளைப் பல திறப்பட்ட மக்களும் நுகர்ந்து வருவது கண்ட யாங்கள், தங்களது தொல் குலத்திற் றோன்றிய உரிமைபற்றி அவைகளிலொரு தனிப் பெரும் பங்கு கொள்ள அவாவியே தங்களை இச்சீரிய குலப் பணியினை ஆற்றுமாறு வேண்டினோம்.

குலநலம் பேணிடுங் குறிப்புடை மணியே!

குலப் பணியை யொரு பிறப்புரிமையாகப் பாராட்டுந் தங்கள் குலாபிமானத்தை யுணர்ந்த நாங்கள், 'கருணைமா முகிலிடம் மழையிரப்ப துண்டோ, கதிர்மதி தன்னிடம் ஒளியிரப்ப துண்டோ' என எண்ணித் தங்கள் தொண்டிற்குப் பாத்திரமாவோம் என்னும் திருப்தியில் திளைக்கின்றோம். ஆற்ற ஆற்றக் குறையாது வளரும் தங்கள் அருஞ் செயல்களுக்கு ஓர் அளவுதானுண்டோ? அத்தகைய அரும்பணிகள் இன்னும் பன்மடங்காகப் பெருகும் வண்ணம் தங்கட்கு நீடித்த வாழ்நாளும் வாழ்நாட் பேறுகளும் அருளுமாறு நங் குல நாயகனை இறைஞ்சுதல் எங்கள் கடனும் உரிமையும் பாக்கியமும் அலவோ?

இங்ஙனம்:
தங்கள் அன்புக்குப் பாத்திரர்களான

**தென்னிந்திய செங்குந்தர் நான்காவது**
**மகாநாட்டு வரவேற்புச் சபையார்.**

திருவாரூர்,
12-3-33



கொடியுயர்த்திய தலைவர் குடியேற்றம்

## திரு. மா. ஆ. வேலாயுத முதலியார் அவர்கள்

# சொற்பொழிவு

சான்றோர்களே! சகோதர சகோதரிகளே!!

இங்கு இதுபோது நடைபெறும் நமது நான்காவது மகாநாட்டின் சிறப்புற்றோங்கிய கொடியினை உயர்த்தும் பெரும் பணியினை அடியேனுக்குத் தந்து கௌரவப்படுத்திய வரவேற்புச் சபையாருக்கு என் மனமொழி மெய்களால் வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டவனாக வுள்ளேன். கல்வி, அறிவு, ஒழுக்கம், உலகநடை முதலியவற்றிற் சிறந்த பெரியோர் பலரிருக்க அவர்களுக்கு ஒரு சிறிதும் ஒப்பு ஆகாத அடியேனை இப்பணியினை இயற்றுமாறு வற்புறுத்தியது என் கருதியோ உணர்கிலேன். ஒருகால் சமூக சேவையில் எனக்கு மேன்மேலும் ஊக்கமுண்டாக்க அவர்கள் கருதினார்கள் போலும்! அவர்கள் அங்ஙனங் கருதியிருப்பார்களாயின் இத்தொண்டை மறுக்க அஞ்சி உங்களுடைய போதரவினாலே ஒருவாறு ஏற்றுக்கொள்ள முன்வருகின்றேன்.

செந்தமிழ் மணங்கமழும் நம் அகத்தியனார் தந்த காவிரி முதலிய பல்வளம் பெற்ற சோணாட்டிடையுள்ள திருவாரூர் என்னுஞ் சீரிய நகரத்தைக் கண்ணுறும்போது 'சிறக்கும் ஆரூர் தனிற் பிறக்க வெய்தலாம் முத்தி' என்றும், 'துவக்கறவிரிந்து பிறக்கும் ஆரூர்' என்றும், 'இறந்திடா ஞானசத்தி யெல்லையா மாரூர்' என்றும் நூல் கூறுவது என் நினைவுக்கு வருகிறது. அன்றியும், 'திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியேன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறியதும், என் நினைவுக்கு வருகிறது. அன்றியும், நூல்களிற் கூறப்பட்ட மநுநீதிச் சோழன், கன்றிழந்த பசுவைக் கண்ணுற்றுத் தன் அருமந்த மகனொருவன் மீது தேரைச் செலுத்திய அருஞ்செயலும், நடு நிலையும், பிறவும், இந்திரன் தந்த தியாகரைக் கொணர்ந்து இவண் பிரதிட்டை செய்த நம் குல மூதாதையர் முசுகுந்த சக்கிரவர்த்தியார் அருஞ்செயலும் பிறவும் என் நினைவுக்கு வருகின்றன. இவற்றின் நினைவு வரவும் என் நெஞ்சம் நெக்கு விடுகின்றது; உடலில் உள்ள மயிர்கள் சிலிர்க்கின்றன. உங்கட்கும் இவ்வாறிய நிகழ்ச்சி உண்டா யிருக்கலாமென்று எண்ணுகிறேன். இப் புண்ணிய பூமியின் மகிமையால் நம்மவர்கள் மிக விரைவில் சீர்திருத்தம் உறுவார்கள் என்று உறுதி கொள்ளுகின்றேன்.

நமது முதலாவது மகாநாட்டில் கொடியுயர்த்திய தலைவர் காஞ்சீபுரம் திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்களும், இரண்டாவது மகாநாட்டில் கொடியுயர்த்திய தலைவர் கோயமுத்தூர் உயர் சைவத் திருவாளர் வா. செ. செங்கோட்டையா முதலியார் அவர்களும், முன்னர்க் கொடியேற்ற வேண்டுவதைப் பற்றியும், இக்கொடியில் குந்தம், சேவல், வேங்கை ஆகிய மூன்றின் வடிவங்கள் வரையப் பெற்றதைப்பற்றியும் யாவரும் நன்குணரும்படி சொற்பொழிவு செய்திருக்கின்றபடியால் யானும் அதனையே கூறின் கூறியதையே கூறியதாய் முடியுமாதலால் கூறவேண்டுவதில்லை எனக் கருதுகிறேன்.

பண்டைக்காலத்திய அரசராய சேரரும், சோழரும், பாண்டியரும் பிறரும் தத்தமக்குரிய புலிக்கொடியையும், விற்கொடியையும், கெண்டைக் கொடியையும், பிற கொடிகளையும், போற்றி வந்தனர், இக்காலத்தைய அரசரும் பிறரும் தத்தமக்குரிய கொடிகளைப் போற்றி வருகின்றனர். நாமும் அங்ஙனம் நம்முடைய கொடியினைப் போற்றி வருவோமாயின் எல்லா நலனையும் உறுவோம் என்பதிற் சிறிதும் ஐயம் இல்லை.

இக்கொடியிற் பொறிக்கப்பெற்ற சேவல், புலி, குந்தம், என்பவற்றுள் சேவலை நோக்கும்போது நம் குல தெய்வமாகிய முருகக் கடவுளிடத்துள்ள இச்சா சத்தியின் நினைவு வருகிறது. இச்சா சத்தி என்பதற்கு நல்ல விருப்பத்தை உண்டுபண்ணும் ஒரு சத்தி என்பது பொருளாம். இங்குக் குறித்த சேவலானது நாள்தோறும் விடியற் காலத்திற் கூவித் தட்டி எழுப்பி நமது முழுமுதற் கடவுளாகிய முருகப் பெருமானை மனமொழி மெய்களால் வழிபடுமாறு தூண்டுகிறது. அவ்வாறு தூண்டியும் உறக்கத்தினின்றும் எழுந்தோமல்லோம்; கடவுளை வழிப்பட்டோமல்லோம்; வாழ்நாளை வீணாக்குகின்றோம். நமது ஆயுளே காலத்தாலாயதுதான், ஆதலால், நாம் வீணாய்ச் செலவிடும் ஒவ்வொரு மணியும் நாம் நம்மைக் கொலை செய்து கொள்ளுகிறோம். சீக்கிரம் சாவதென்றால் நாம் சம்மதியோம். அப்படி யிருக்க ஏன் நமக்கு ஏற்பட்டிருக்கும் காலத்தை வீணாக்கவேண்டும்? மேலும் நமக்கு இப்போதேற்பட்டிருக்கும் ஆயுளோ சற்றேறக்குறைய 60 வயது; அதிற்பாதியும் உறங்கிப்போகும்; நின்றபாதியில் கொஞ்ச காலம், சாப்பாடு, நீராடல், பிரயாணம், எக்களிப்பு, கல்யாண குதூகலங்கள் முதலியவைகளிற் சென்றுவிடுகின்றது. மிச்சம் ஏதேனும் 20 வருடங்கள் இருக்கும். இவற்றுள் நாம் வீண்காலம் எவ்வாறு போக்குகிறது? என்பதை நினைவுக்குக் கொண்டுவந்து நம் குல தெய்வத்தை வழிபடும் நல்ல விருப்பத்தை நாம் அடைவது நலம்.

இரண்டாவது புலியின் வடிவத்தைக் கருதும் போது நம் முழுமுதற் கடவுளாகிய முருகப் பெருமானின் கிரியா சத்தியின் நினைவு வருகிறது. கிரியா சக்தி என்பதற்கு நல்ல கிரியையினை [நல்லொழுக்கத்தினை] உண்டுபண்ணும் ஒரு சத்தி என்பது பொருள். இக்கொடியிற் பொறிக்கப்பெற்ற புலியானது "நான் பசிப்பிணியுற்ற சமயத்தும் புல்லைத் தின்னுவதில்லை. அதுபோல செங்குந்த குலத்துதித்த உத்தமோத்தமர்களே! வறுமையுற்ற காலத்தும் நல்லொழுக்கத்தினின்று விலகா

தீர்கள்" என்று நமக்கு நல்லொழுக்கமெனப்படுங் கிரியையினை உணர்த்துகின்ற தன்றோ!

நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற்கு ஒருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியேறரப் பசித்தும் தின்னாவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.

என்ற செய்யுள் இங்கு நோக்கத்தக்கது. ஆதலால், இப்புலியின் செய்தியை உணர்ந்தும் நாம் நல்லொழுக்கத்தினைப் பெறாதிருப்போமாயின், மக்கட் பிறப்பின் பயனை அடையோம் என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மூன்றாவது சேவலுக்கும் வேங்கைக்கும் நடுவண் பொறிக்கப்பெற்ற குந்தம் எனப்படும் வேலாயுதத்தைக் கண்ணுறும்போது நம் முருகப்பெருமானிடத்துள்ள ஞான சத்தியின் நினைவு வருகிறது. ஞான சத்தி என்பதற்கு நல்ல அறிவினை உண்டு பண்ணும் சத்தி என்பது பொருள். இக் குந்தமானது, உங்கள் இருதயக் குகையின்கண் திவ்விய ஆற்றலும் திண்மையும் உடைய குகன் ஒருவன் உளன்; அவன் ஒப்புயர்வற்றவன்; இவ்வுலக முழு முதல்; அவனைத் தருவி ஆயுங்கள்; உணருங்கள்; உணர்ந்தால் பிறவிக்கு வித்தாகிய அறியாமை முதலிய பகைவர்கள் புறமுதுகு காட்டி ஓடுவார்கள். பின்னர் வறுமை முதலிய துன்பங்களினின்றும் நீங்கி இவ்வுலகத்தில் எல்லையில் இன்பத்தை எய்துவீர்கள், என்ற உபதேசத்தைச் செய்கிறது. அவ்வுபதேசத்தைக் கைப்பற்றி நடத்தல் வேண்டாவோ? எனவே? சேவற் கொடியால் முருகனை வழிபடும் விருப்பும், புலிக்கொடியால், நன்னடையும், குந்தக்கொடியால் முருகனது காட்சியும் பெற்றபோதுதான் செங்குந்தக் கொடியைப் போற்றி வருபவர்களாவோம். இதுவே நமது கொடியின் தத்துவமாகும்.

நாம் கந்தன் சகோதரர்கள் என்றும், சூரபதுமனை வென்று சண்முகப் பெருமானிடத்து வேங்கைக் கொடியைப் பெற்ற வீரர்கள் என்றும், உமாதேவியின் திருக்கரத்தினின்று குந்தமென்னும் ஆயுதத்தைப் பெற்றவர்களென்றும் கூறப்படும் பெருமையைப் பெற்றிருந்தும் தற்போது அடிமை நிலைமையில் இருக்கின்றோமல்லவா? இராஜீயத் துறைகளிலேனும், ஜாதி சமூதாயத் துறைகளிலேனும், தொழில் முறைகளிலேனும் மற்ற ஜாதியார்களைப் போல முன்னேற்ற மடைந்தோமா? இல்லையே. இனி யேனும் இதுகாறும் உறங்கி யிருந்ததுபோ லிராமல் சகல துறைகளிலும் வல்லுனராய் முன்னேற்ற மடைய அறுமுகன் அருள்புரிவானாக.

இத்தகைய பெருமை வாய்ந்த கொடியுயர்த்தும் பணியை எனக்களித்து என்னைப் பெருமை படுத்திய நமது வரவேற்புச் சபையாருக்கு என்னுடைய மனமொழி மெய்களால் வந்தனத்தை மறுமுறையும் செலுத்தக் கடமைப்பட்டவனாக வுள்ளேன். எல்லாம் வல்ல நம் குலக்கடவுளாய முருகப் பெருமான் நமது கொடியினை உலக முழுவதும் பறக்கச் செய்து நம்மவர்களைக் கண் விழிக்கச் செய்யுமாறு அருள் புரிவானாக!

நலம்! நலம்!! நலம்!!!

---

உ

# கொடிக்கவி

நங்குலச் செங்கொடி பாரீர்—அதை
நாளும் உயர்த்தியே நாட்டிட வாரீர்! (நங்)

சோறுடைச் சோழ நன்னாட்டில்—என்றும்
சோர்விலா வண்மை கொள் சோதரர் வாரீர்!
வீறுடன் தமிழ்த்தாய் வளர்த்த—பாண்டி
வீர செங்குந்தரே விரைவினில் வாரீர்!

மலையரண் மல்கிய சேரர்—நாட்டு
மலைவிலா மாண்புடை மன்னரே வாரீர்!
கலைபயில் சான்றோர்கள் வாழும்—தொண்டைக்
கண்ணிய நாட்டில்வாழ் புண்ணியர் வாரீர்!

ஓரன்னை உந்தியில் வந்த—உயர்
உத்தம புத்திரர் ஒன்றாகச் சேரீர்!
பாரெங்கும் சோதர வாஞ்சை—எனும்
பண்புடைத் தருநன்கு பரவிச் செழித்தே

அன்பெனும் நறுமலர் பூக்க—தூய
அறிவெனுந் தீங்கனி அமிழ்திற் பழுக்க
அன்புடன் நங்குலத் தாயைப்—போற்றி
ஆருயிர்க் கொடியதன் அருகினிற் கூடீர்!



இந்திரப்பதி எட்டுங் கம்பம்—அதன்
எழிலான உச்சியில் ஏறிப் பறக்கும்
மந்திரக் கொடி மாண்பு கேளீர்!—அதில்
மணிச்சிற கடித்து மகிழ்ந்திடுஞ் சேவல்

அஞ்ஞானக் கொக்கறு கோவைப்—போற்றி
அழைத்திடுவீர் வினை அறுத்திட வென்னும்;
செஞ்ஞாயி றெனத்திகழ் வேங்கை—சோழர்
செருக்களம் வென்று சிறந்தமை கூறும்;

நடுவண் பகைவ ரிரத்தம்—தோய்ந்த
நாம நெடுங் குந்தம் நங்குலவீரர்
அடுதிறல் கொண்டறங் காத்து—நன்மை
அல்லவை அழித்திட்ட ஆண்மையே காட்டும்.

நாற்றிசை யாடிப் பறந்து—பெரு
நானில மெங்கணும் நம்சீர் பரப்பும்
ஏற்ற முடைய கொடியை—வானில்
ஏற்றியே காத்தென்றும் போற்றிடல் கடனே.

குந்தத்தைத் தோளினி லேந்திக்—குலக்
கொற்றத்தைத் தாழாது காத்திடுங் குறியாய்ச்
சொந்தச் சோதரன் தானைப் போற்றிப்—புகழ்
சோர்வின்றி ஏறிட ஆர்வமாய் ஏற்றும் (நங்)

ஜெ. தங்கவேல், பி. ஏ.

---

உ

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத் தலைவரும்
செங்குந்தர் கல்விநிதிக் காப்பாளர் சபைத் தலைவரும்
புதுவை அரசாங்க வரவு செலவிலாகாக உபதலைவருமான உயர் திருவாளர்

**ஆ. வே. முத்தைய முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கட்கு**

(Chevalier de la Legion D' Honneur)

அன்னார் ஆங்கீரஸ மாசி மாதம் 29—30 தேதிகளில் நடைபெற்ற
தென்னிந்திய செங்குந்தர் நான்காவது

**சமூக மகாநாட்டின் திறப்புவிழா வாற்றிய சமயம்**

வரவேற்புச் சபையார் வாசித்தளித்த

## வரவேற்பு நல்லுரை

சீரெலாம் பெற்றுச் சிறப்புறு செம்மலே!

பேரறிஞர்களைச் சாதாரண மக்களினின்றும் பிரித்துக் காட்டும் அருங் குணங்கள் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற தங்களைக் குலச்சோதரராக மட்டு மன்றித் தலைவராகவும் பெற்றுத் தங்களது சீரிய உபதேசங்கட்குப் பாத்திரராகியுள்ள எங்களது பாக்கியத்தினை எவ்வாறு அளவிடுவோம்! மாகநாட்டின் திறப்பு விழா ஆற்று முகத்தான் எங்களது மனக் கண்களைத் திறந்திடும் சீரிய பணியையும் ஆற்ற முன்வந்த தங்களது பேரன்புக்கு யாங்கள் நன்றி காண்கிலேம்.

மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!

கோதிலாக் குணக்குன்றாய் ஒளிர்ந்து இயற்பெயரைக் காரணப் பெயராக்கிக் கொண்ட தங்களது மேம்பாட்டினை எடுத்துரைக்கவும் வேண்டுமோ? தங்களது ஆன்ற அறிவையும் அளப்பிலா ஆற்றலையும், பரந்த நோக்கத்தையும் நியாய உணர்ச்சியையும் தெள்ளிதின் அறிந்தன்றோ பிரெஞ்சுக் குடியரசார் தங்கட்கு உயர்ந்த பதவியையும் பெரும் பட்டத்தையும் அளித்துள்ளார்கள்?

குலாபிமானக் குறியுடைக் குரிசிலே!

தங்களைக் காணும் அளவிலேயே எங்கள் மனத்திடைக் குலமுன்னேற்றத்திற்காகச் சலியாது உழைக்கவேண்டு மென்னும் உறுதி ஆழ வேரூன்றுகிறதெனின் தங்கள் குலாபிமானத்தை இயம்பவும் வேண்டுமோ? நங்குலத்தாய் பெற்றெடுத்த புத்திர ரத்தினமாகிய தங்களை யாங்கள் கண்டெடுத்தது முதல் தங்கள் பேரொளி எங்களைக் கவிந்துகொண்டு எங்கள் மாசகற்றி வருகின்றதன்றோ?

செங்குந்தச் சோதரன் சீரருள் பெற்றோய்!

சித்தத் தூய்மையினாலும் ஒழுக்க மேம்பாட்டாலும் தூய்மை யுருவான சத்தியநாதனது திருவருளையும் அதன் பயனாகக் குறையற்ற பெருவளங்கள் பலவற்றையும் பெற்றுள்ள தங்கட்கு இன்னும் பல பேறுகளையும் அவற்றைச் செவ்வனே யனுபவித்தற்கு வேண்டிய நீண்ட ஆயுளையும் நிர்மல தேகத்தையும் அருளுமாறு அவ்வண்ணலைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:
தங்கள்பால் தளரா அன்பு கொண்டுள்ள
தென்னிந்திய செங்குந்தர் நான்காவது
சமூக மாகநாட்டு வரவேற்புச் சபையார்.

திருவாரூர்,
12-3-33

---

உ

சமூக மகாநாட்டுத் திறப்புவிழா வாற்றிய உயர்திருவாளர்

## ஆ. வே. முத்தைய முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்கள்

(Chevalier de La legion D' Honneur)

# திறப்புரை

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிருந்
தம்முயிர்போ லெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார்
யாவர் அவருளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் எனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைவதாலோ.
(சுவாமி சிதம்பரம் இராமலிங்கம்.)

உயிர் உரிமை நேயர்களே!
அன்பு மிக்க சகோதரிகளே!
சகோதரர்களே!

தென்னிந்திய செங்குந்தர் நான்காவது மகாநாட்டைத் திறந்து வைக்கும் சடங்கை நிகழ்த்துவதற்குச் சடங்குகளில் பிரிய மில்லாதவென்னைக் குறிப்பிட்டழைத்தது எக்காரணம் பற்றியோ எனக்குப் புலப்படவில்லை—மகாநாட்டு வரவேற்புக் கழகத்தார்களே அதன் நோக்கத்தை அறிந்திருப்பார்கள்.

ஆனால், அவர்களுடைய அழைப்பை யான் ஏற்றுக்கொள்வதற்கும் காரணமிருக்க வேண்டுமல்லவோ? அந்தக் காரணம் எனக்கன்றோ தெரியும்? அதையே இப்போது வெளியிடுகிறேன்.

முதன் முதல் ஈரோட்டில் நம் மகாநாடு கூடியது. பின்னர், இரண்டாவது காஞ்சியிலும், மூன்றாவது சென்னையிலும் நிகழ்ந்த போது அவைகளுக்கு யான் வரமுடியாதிருந்ததை, வாராததை, ஆங்குக் குழுமியிருந்த நண்பர்கள் பலர், குறையாகவோ, குற்றமாகவோ கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குச் சமாதானம் சொல்லவும்;

அநேக விடங்களில், அநேக தடவைகளில், முக்கியமாக நமது 'மித்திர'னில், கடவுள் பற்று, சமயப்பற்று இவைகள் சம்பந்தமாக எனது சொந்த ஆராய்ச்சி அபிப்பிராயங்களை வெளியிட, அவைகளுக்குப் பல நண்பர்கள் விபரீதப் பொருள் கொண்டுள்ளார்கள். அன்னார்களுக்கும் ஏனையவர்களுக்கும் என்னுடைய நோக்கங்கள் இன்னவைகள் தான் என ஒருவாறு குறிப்பிட வேண்டுமல்லவோ? அதற்கும் இதுவே நல்ல தருணமென்பதாகக் கருதியே ஏந்திக்கொண்டேன்.

அன்றியும், பழைய நூல்களில் கண்டிருப்பதைக் கொஞ்சம் தெரிந்து ஆராய்ந்தபோது இவ்வாரூரில் நிகழ்ந்ததாய்ச் சொல்லி யிருக்கும் சில சம்பவங்கள் மனதில் ஒரு ஆழ்ந்த உணர்ச்சியையும் உண்டாக்கின.

அடியுந் தெரியாது முடியுந் தெரியாது என்று சொல்லப்பட்டும் கருதப்பட்டும் வருகின்ற ஒரு தனிப்பொருள், மானிடனாக வந்து, மனிதனே மனிதனுக்கு உறுதி அல்லது மனிதன் மனிதனுக்குத் தோழன் என்பதை விளக்கிக் காட்டுவான்போல அருந்தோழனாக விருந்தும், தோன்றாத் துணைவன் என்பதின்றித் தோன்றுந் துணைவனாகவே பக்கத்தில் நின்றும், தனது நண்பனுக்கு நேர்ந்த வாழ்க்கை யின்னல்கள் பலவற்றை நீக்கியுள்ளது, நீக்கியுள்ளதாகச் சொல்லப்பட்டிருப்பது, இவ்வூரில் அல்லவா வென்பதை உன்னுந்தோறும் உன்னுந்தோறும் பெருமித மகிழ்ச்சியுண்டாகின்றது.

இக்காரணம் பற்றியும் இது சமயம் இவ்வாரூருக்கு யானே வரவிருந்தபோது, வரவேற்புக் கழகத்தாரும் நண்பர்களும் என்னை யிங்கு வரும்படி கோரியது கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போலும், பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலுமாயிற்று.

எனவே, குலநண்பர்கள் அனைவருக்கும், முக்கியமாக இவ்வூர் நேயர்களுக்கும், பெரியோர்களுக்கும் அன்பார்ந்த நன்றி பாராட்டுகின்றேன்.

உடல்பற்று என்னிடம் மிகவும் உண்டு. தேகநிலையை அதிக மதிகமாகக் கவனித்துப் போற்றிவரும் எனக்கு, அந்நிலை சற்றுத் தளர்ந்தோ, அல்லது தேகம் நோய் வாய்ப்பட்டோ இருக்கின்ற சமயங்களில் படித்த பாடங்களை யெல்லாம் மறந்துவிட்டு, பொதுக் காரியங்களினின்றும் சற்று விலகியிருப்பது பழக்கமாய் விட்டது. இது சரியோ, பிழையோ வெனச் சந்தேகமாய் மெழுகிவிட யான் துணியவில்லை. தப்பைத் தப்பென்றே சொல்ல வேண்டும். உடல் மீதில் அதிக வாஞ்சை வைத்து அதன் நிலை யொன்றையே முக்கியமாகக் கவனித்துப் பொதுத் தொண்டு செய்யாம லிருப்பது தவறுதலேயாகும். இந்த முறையில் காஞ்சி மகாநாட்டாருக்கு யான் அபராதம் இயற்றியுள்ளவனாக இருக்கிறேன்.

இரண்டாவதாக, பொருளிலும் மதிப்பிலும் எனக்குப் பற்றில்லாமலில்லை. யானீடுபட்டுச் செய்துவரும் தொழில் முறையானது, (அரசாங்க வேலையாகையால்) ஒரு தடவையிலல்ல பல தடவைகளிலும், ஒரு வழியிலல்ல பல வழிகளிலும், எனது பொது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு; அவைகளுக்காக வெளி வேலை செய்வதற்கு இடைஞ்சலாகவே நின்று வருகிறது. இதனாலும் விசேஷ காலங்களில் குறிப்பிட்ட விழாக்களிலும் மகாநாடுகளிலும் சகோதர நேயர்களைக் கண்டு களிக்க முடியாமல் போய்க்கொண்டிருக்கிறது. அலுவலில் என்மீதுள்ள மதிப்பு எங்கே குறைந்துவிடுமோ? அலுவலுக்குத்தான் எங்கே இடையூறு விளையுமோ? வருமானப் பொருள் எங்கே குன்றிவிடுமோ? என்ற ஐயப்பாடுகள் மனதில் அடிக்கடி குடிபுகுந்துவிடுவதால், சிற்சில முக்கிய சமயங்களில் வெளியேறுவதற்கில்லாமற் போய்விடுகிறது. இந்த முறையிலேதான் சென்னை நண்பர்களுக்கு யான் அபராதம் இயற்றியுள்ளது.

இவ்வகையாக, உடல், பொருள், புகழ், இவைகளி லெனக்குள்ள மூடப்பற்றை, அதிகமான பற்றை, குறைக்கும், அகற்றும் ஆற்றலில்லாதவனாய் யானிழைத்த குற்றங்களை மன்னிக்கும்படி தங்களெல்லோரையும் வினயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இனி, கடவுளைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் யான் சொல்லி யிருப்பதை, எழுதி யிருப்பதை நண்பர்கள் நன்காராயும்படி அவர்களிடம் மன்றாடுகிறேன். யான் வெளியிட்டிருப்பதைப் பிறர் அப்படியே ஏந்திக் கொள்ளவேண்டு மென்பதல்ல எனது

கருத்து. ஆனால் அவைகளை அப்படியே தள்ளிவிடவேண்டு மென்பதுமல்ல. குற்றங் காணவேண்டு மென்ற முன்னெண்ணமின்றி நிதானமாக, ஆழ்ந்து ஆராய்ந்து பார்ப்பீர்களே யானால், நியாயத்திற்கும் ஒழுக்க முறைக்கும் அன்பு வழிக்கும் முரணுகவிராது எனது அபிப்பிராயம். பழக்க வழக்கங்களுக்கு விரோதமாக விருக்கலாம்; சாதி சமயப் போலி யபிமானங்களுக்கு எதிராகத் தோற்றலாம்; (போலி யபிமானமென்று வற்புறுத்திச் சொல்லுகிறேன், கவனிக்கவும்.) ஆனால் உண்மைக்கும் யுக்திக்கும் விரோதமாக விராது. பிறரை யேமாற்றவோ கெடுத்துவிடவோ எண்ணங் கொண்டதா யிராது. எனினும், நண்பர்கள்—எனது அரிய சகோதரர்கள் — தூக்கத்திலேயே யிருக்கும்படியாகவும் விடாது; ஆராய்ச்சிக்கு அவசியம் வேண்டிய சந்தேகங்களை எழுப்பிவிடும். என்னுடைய சிற்றறிவுக் கெட்டிய வரையில் நன்குணர்ந்து என்னையே யான் ஏமாற்றிக்கொள்ளாமல், வெளிப்படையாக யான் சொன்னதெல்லாம், சொல்லுவதெல்லாம், ஒரு பெரும் உண்மையை ஆதாரமாக வுடையதேயாகும். அதாவது:

பொதுவகையில் உயிர் வருக்கங்களெல்லாம்—சிறப்பு வகையில் மனித வருக்கம் முழுதும்—பெரியதோர் குடும்பமாகும். இந்தக் குடும்பத்தின் அங்கத்தினர் யாவரும் சகோதர ஒத்துரிமை யுடையவர்கள். அது மாத்திரமல்ல: ஒவ்வொருவரும் முழுமைக்கும் மற்றெல்லோருக்கும் உத்தரவாதமும் ஏற்றவர்களே.

இதுவே தான் ஹிந்து சமய நூல்களிலே துவைத அத்துவை முறைகளாக வாழ்க்கை யனுஷ்டானத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது என யானபிப்பிராயப்படுகிறேன்.

இந்த அடிப்படையானதோர் உண்மை உலகிடை இப்போதைய நிலையில் நன்குணரப்படுகின்றதில்லை. பக்கத்து வீட்டுக்காரன் செய்த—செய்யும்—குற்றத்திற்கு யானும் பொறுப்பாளிதா னென்றால் நாம் ஏந்திக்கொள்ளத் தயாராகவில்லை யல்லவோ? ஆனால் இந்தத் தத்துவத்தை, இந்த உண்மையை, மனித வாழ்க்கையில் அமைப்பதற்காகவே, தெரிந்தும், தெரியாமலும், பல பல வியக்கங்கள் வழிகளைத் தேடிக்கொண் டிருக்கின்றன. உலக சரிதையிலும் எத்தனையோ பெரியோர்கள் சமயங்களென்றும், சமய சீர்திருத்தங்களென்றும், அநேக விதங்களாக ஆராய்ந்து வெளியிட்டு, அதோடு நிற்காமல் அனுஷ்டித்துக் காட்டியும் போய்விட்டார்கள். ஆனால், ஆன்றோர்கள் காலத்திலேயும் சரி, பிறகும் சரி, அவ்வித ஏற்பாடுகளெல்லாம் சில காலமே நேர்மையாக நடந்தன. பிறகு வெகு விரைவில் மாறிவிட்டன.

எந்த வழியிற் சென்றால் உலகை முழுதும் நன்மை பெறும்? எந்த முறை அமுலில் வந்தால் உலகத்திலே தீமையென்பது அறவே மறைந்துவிடும்? என்ற பெருங் கேள்விகளிரண்டிற்கும் இவைகளை யாதாரமாய்க் கொண்டுள்ள, இவைகளை அடிப்படையாக வைத்துள்ள, இடைக்கேள்விகள் பலவற்றிற்கும், இன்றும் சமாதானம் தேடிக்கொண்டுதானிருக்கின்றோம். தேடி முடிவடைந்தோமோ? இல்லை. இன்னுமில்லை.

இப்போதைய நிலைமையோ, எங்குப் பார்த்தாலும் கிளர்ச்சியும், எதிர்ப்பும், குழப்பங்களுமாகத்தான் காணப்படுகிறது. எதைச் செய்வதென்று புரியவில்லை. அமைதி யென்பது அருமருந்தாய்விட்டது. தன் நலம், சுய நலம், தலைவிரித்தாடுகிறது. நவநாகரிகத்தைப் பற்றிச் சொன்னது நினைத்ததெல்லாம் மாறுகிறது. நாகரிகத்தால் நன்மை யடைந்துவிடலாம், அடைந்துவிட்டோம் என்று எண்ணியவர்கள், சொன்னவர்களே, இன்று எங்கும் நிகழும் நெருக்கடியைப் பார்த்து, இந்த நவநாகரிகந்தான் இப்போதைய கஷ்டநிலைக்குக் காரணமெனச் சொல்ல மெதுவாக ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்நிலைக்கு, இந்தக் குழப்ப நிலைக்கு, காரணந்தான் யாதோ? இவைகளை யெல்லாம் சற்று நிதானமாக நோக்குவதோடு நம்மையே நாமும் பரிசீலனை செய்து பார்த்தோமேயானால், நமது பொறுப்பும், நமது உத்தரவாதமும் புலப்படாமற் போகவில்லை. உலகிடை, சமூகத்திடை, நிகழும் கொடுமைகளுக்கு, குழப்பங்களுக்கு நாமும் பங்காளிகள்தான். நம்மிடத்திலே, நம் மனதிலே, ஒவ்வொருவருடைய மனதிலே, கொடுமையும் குழப்பமுமிருக்கிறபடியால்தான், உலகிலே இன்னலும் இக்கட்டுகளும் பெருகி நிற்கின்றன. இதை விட்டுவிட்டு, "உலகத்தை, சமூகங்களை நேர்மை செய்துவிடுவோம்" என்பதாகப் பற்பல வெற்று முயற்சிகள் செய்வதெல்லாம் நற்பலனை முழுதும் கொடுக்குமோ வென்பது சிந்திக்கவேண்டிய விஷயமே.



அதற்கு விரோதமாகத் தூயமனதோடும், தெளிந்த அறிவோடும் வாழ்க்கை நடத்துவோமே யானால், அம்மாதிரி வாழ்க்கை நடத்துபவர்களுக்கு வெளித் துன்பங்கள், இடைஞ்சல்களாக நிற்கவில்லை யென்பது பண்டைக் காலத்து அனுபவ மாத்திரமல்ல; இப்போதைய அனுபவமுமாகும், செய்து பார்த்தால். புத்தி தெளிவானது இயற்கையச்சத்தை விலக்குகிறது; மனத்தூய்மையானது தைரியமளிக்கிறது. நமக்கு வரும் இன்ப துன்பங்களுக்குக் காரணம், அவைகள் நம்மிடம் பொருந்துவதற்கும் நம்மிடமிருந்து நீங்குவதற்கும் காரணம், நமது மன நிலையே, நாமே யென்பதை, அதாவது நமது புத்தி தெளிவால், நமது முயற்சியால் அல்லது முயற்சிக்குக் குறைவா லென்பதை ஒருவாறு யூகிக்கலாம். ஆனால் யூகித்தால் போதுமோ? அதுபோலிருந்து அனுஷ்டித்துப் பார்க்க வேண்டும். அப்படி அனுஷ்டித்துப் பார்த்தாலன்றி அதன் உண்மை, அதன் நிச்சயம், வெளிப்படுகிறதில்லை.

அப்படிச் செய்து பார்க்கவோ நமக்கு நேரமில்லை. நமது யுகம், நமது உலகம், பரபரப்புடன் ஓடிக்கொண் டிருக்கின்றன. "கும்பவில் கோவிந்தா" வென்பதாக நாமும் நம்முடைய மூட்டை முடிச்சுகளை வலிய கஷ்டப்பட்டு இழுத்துக்கொண்டே பின்னே ஓடுகின்றோம். அன்றி யேன் ஓடுகிறோம், எங்கே போவதற்கு என்றால் ஒன்றும் தெரியவில்லை. இந்தக் கேள்விகளே நம்மனதி லுதிக்கிறதில்லை. உதிக்க வழியுமில்லை. இது விஷயமாக ஒரு சிறு கதை. அனேக பிரயாணிகளுடன் ஒருவன் அதியவசரமாக ரயிலிலேறி உட்கார்ந்துகொண்டு வண்டி புறப்படவில்லையே யென்று அவசரப்படுகிறான். அது சமயம் வண்டியிலிருந்தவர்களி லொருவன் இவனை நோக்கித் 'தாங்கள் எங்கே போக வேண்டும்?' என்று கேட்பின், என்ன பதில் வருமென்பதாக எதிர்பார்க்கிறீர்கள்? பதில் சொல்லுகிறவன், 'நீங்கள் வினவுகிறது சரிதான். ஆனால், நான் எங்கே போகிறேனென்பது மாத்திரம் எனக்குத் தெரியாது. அதைப் பற்றியே நான் நினைக்கவில்லை' யென்பதாகப் பதிலளிக்கிறான். இந்தப் பதிலைக் கொண்டு அன்னனை யெப்படி மதிக்கலாம்? ஏதோ மூளையில் சிறு துவாரம் விழுந்திருக்குமென்பதாகத்தானே? ஆனால் நாமோ? நமது வாழ்க்கையிலே எப்படி? அதே மாதிரிதான். எங்குப் போகிறோம், ஏன் ஓடுகிறோம், எதற்கு இந்தப் பரபரப்பு? என்ற கேள்விகள் ஏற்பட்டால் நமக்கும் அது தெரியாதுதான், தெரியவில்லை. ஒரு பெரும் மயக்கமானது நமது தலையைச் சுற்றுகிறது. என்ன மயக்கம்? "மற்றவர்கள் எப்படியானாலு மாகட்டும், எனக்குக் கிடைத்துவிட்டால் போதும்" என்ற மயக்கமே. இது முடியாத காரியம். நமக்கு நன்மை கிடைக்கவேண்டுமானால், நமது நலம்—நமது இன்பம்—இடையறாது நீடித்திருக்க வேண்டுமானால், பிறர்களும், உலகமும், எல்லோரும் இன்பமுற வேண்டும். அன்றேல் நமக்கு இன்பமில்லை. இன்பமுண்டென்றால் அது போலியே யாகும்.

பிறருடைய இன்னலும் துன்பமும் என்னுடையதுதா னென்ற தெளிவு உதிப்பதற்குச் சொந்த ஆராய்ச்சி வேண்டும். அவ்வாராய்ச்சிக்கு நேரமில்லை. இருக்கின்ற நமது நிலையே—எவ்வளவு சீர்கேடானதா யிருந்தாலும்—போதும்; முன்னே போனால் உள்ளதும் நழுவி விடுமோ என்னும் ஒரு இருளச்சம்—ஒரு பயம்—நம்மை மிரட்டுகிறது. இதையே, இந்த இருட்டையே, அச்சத்தையே, பல வேறுவிதமாக நூல்களில் சொல்லப்பட்டிருப்பதும்.

இந்த அச்சத்தைத் தவிர்ப்பதற்காகவே, தற்காலிகக் கருவிகளாக, வழிகளாக, பல பல சமயங்க ளெழுந்தன வென்று நினைக்கிறேன். ஆனால் அவைகளே, அந்தச் சமயங்களே, அந்த அச்சத்தை, மிரட்டலை, அதிகமாக மக்களிடை நிரப்பிவிட்டன. இது கண்கூடு; இதற்கென் செய்வது?

உடலுக்கு நலந்தரக்கூடியது — நலந்தர வேண்டியது—பால். அந்தப் பாலானது முறிந்து கெட்டுவிட்டது. இந்தக் கெட்டுப் போன பால் வேண்டாம்; கெடுதி செய்யுமென்று யான் சொன்னால், சொல்ல முன் வந்தால், எப்படியானாலும் பால் பால் தானே; அதைக் குற்றங் கூறலாமாவென்று நேயர்கள் சிலர் ஐயமுறுகின்றார்கள், பலர் சீற்றமுங் கொள்ளுகிறார்கள். இது நியாய முறையா? யோசித்துப் பாருங்கள்.

இன்னமும் சொல்லுகிறேன்: சமயப்பற்றானது சமூக ஒற்றுமையை, சமூக முன்னேற்றத்தை, வளர்த்தால்தான்—வளர்க்கும் வரையில்தான்—கொள்ளத்தக்கது. அன்றி அவ்வொற்றுமையைக் குறைத்துப் பிளவுகளை ஏற்படுத்தி வறுமையையும் கொடுமைகளையும்

உண்டுபண்ணும் போதுமா அதை ஆதரிக்க வேண்டும்? யோசியுங்கள்.

இதே முறையில்தான் கடவுளைப் பற்றியதும். கடவுளை நேரே கண்டவர்கள் பலரிருக்கலாம். என்னால் காணமுடியவில்லை. என்னுடைய கடவுள் ஏழைபங்காளனே.

கடவுளுக்கு ஏழைபங்காளனென்ற பெயரொன்று வைத்துத் துதிப்பது எதற்காக? தீனரட்சகா வென்று கூப்பிடுவது எற்றுக்கு? வறுமையிலே, இருட்டிலே, கிடந்து தவிக்கும் வாயில்லா மக்களிடம் தவிக்கும் உடலும் உயிருமல்லவோ கடவுள்? ஆகையால் அந்தச் சகோதரர்களுக்குற்ற குறைகளை நீக்குவதல்லவோ ஏழை பங்காளனை—தீனரட்சகனை—கடவுள்மீது பற்று வைப்பதும் பத்தி செய்வதும்? இம்மாதிரி பொருள் கொள்ளுகிறோமா? சொல்லுங்கள். அப்படிப் பொருள் கொண்டு அதுபோல அநுஷ்டிப்பதால் என்ன பாவம் விளைந்துவிடுகிறது? யோசியுங்கள்.

என்னபிப்பிராயங்க ளெல்லாம் இது போன்ற நோக்கத்தோடுள்ளவைகளே. வேறு விபரீதமாக உங்களுக்குப் பொருள் தோன்றுமேயானால் அது நான் சொலமாட்டாமையாலாகும், எனது சொல்லேழ்மையினாலுதித்ததேயாகும்.

இந்நோக்கங்களே பொது வியக்கங்களுக்குப் புத்துயிரளிக்கக் கூடியவையென மதித்திருக்கிறேன். பொது வியக்கங்களுக்கும் சரி, சமூக வியக்கங்களுக்கும் சரி, கூடிய வரையில் தெளிவு வேண்டும். அதற்குச் சமநிலையாயமைந்துள்ள அன்பும் அறிவும் அடிப்படை. ஒன்று மிகினும் குறையினும் கெடுதியே. அன்பு மிகினும் குறையினும் விபரீதமே. அது போலவே புத்தி கூர்மையும் மிகினும் குறையினும் கெடுதி யுண்டுபண்ணிவிடும். அன்பறிவுடன் ஆராய்ந்து தெளிந்து நிச்சயஞ் செய்ததை நடைமுறையில் கொண்டுவரும் ஆற்றலையும் சம்பாதிக்க வேண்டும். இங்கு முயற்சி மிக மிக அவசியமானது. முன் சொன்னபடி தெளிவடைய வேண்டுமானால் அவாவின்மையும் அவசியமெனத் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது.

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

இந்த அவாவின்மையைப்பற்றி யானொன்றுஞ் சொல்ல முன்வரவில்லை. அவாவின்றி மனிதன் எப்படி வினைசெய்ய முடியுமென்பது சிந்திக்க வேண்டிய பெரியதோர் கேள்வி.

ஆராவியற்கை யுடைய அவா காரணமாக நல்ல காரியங்கள் நிறைவேறுமல் பேச்சளவில் நின்று போகின்றன வென்பது மாத்திரந் தெரிகிறது; ஒவ்வொருவருடைய அனுபவமும் சொல்லுகிறது.

ஆனால், " அவாவின்மை "யால் பேராவியற்கை கிடைக்குமென்பது என் அனுபவத்தில் வரவில்லை. வாயளவாக அளக்க நாணுகிறேன். அந்நிலை எனக்குக் கிடைத்திருப்பின், யான் முன் செய்துகொண்ட அபராத விண்ணப்பங்களுக்கு இடமிருந்திராதல்லவோ? அவாக்கடலில் மூழ்கி நிற்கும் யான் அவாவின்மை யெனும் கடலுக்கு மேல் பரப்பிலிருக்குமொன்றை யெப்படி அறியமுடியும்? அனுபூதிமான்களாக உள்ள தங்களிடையே அவாவற்ற பேராவியற்கையர்களிருக்கலாம்.

இந்த என் சொந்த அபிப்பிராயங்களை வெளியிடுவது தாங்கள் அவைகளை—திரும்பவும் சொல்லுகிறேன்—அப்படியே ஏந்திக் கொள்வதற்கல்ல; தாங்கள் அவைகளை யாராய்ந்து நேர்மையுள்ளவைகளை மாத்திரம் கொள்வதற்கே யாம்.

என்னுடைய திறப்புரை நீண்டுவிட்டதற்கு மன்னிக்கவும். சமூக மகாநாட்டுத் தலைவருடைய பேருரை முதலியவைகளைக் கேட்பதற்குத் தங்களுக்கிருக்கும் ஆர்வத்தைவிட எனது ஆர்வங் குறைவாகவில்லை. ஆகையால் காலந்தாழ்த்தாது மகாநாடானது இனிது நடைபெற வேண்டுமென்ற பேரவாவுடன், இனிது நடைபெறுமென்ற நன்னம்பிக்கையுடன் சமூக மகாநாட்டினைத் திறந்து வைக்கின்றேன்.

எங்கும் என்றும் தங்குக மங்களம்!

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிருந்
தம்முயிர்போ லெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார்
யாவர் அவருளந்தான் சுத்த
சித்துருவா யெம்பெருமான் நடம்புரியு
மிடம் எனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென்
சிந்தைமிக விழைவதாலோ.

(சுவாமி சிதம்பரம் இராமலிங்கம்)



உ

சமூக மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர்

திருவாரூர் தி. நா. சபாபதி முதலியாரவர்கள்

# சொற்பெருக்கு

செங்குந்த மகாஜனப் பிரதிநிதிகளே!
ஸ்ரீமான்களே!! ஸ்ரீமாட்டிகளே!!!

வரவேற்புக் கழகத்தின் சார்பாகவும் தஞ்சை ஜில்லாச் செங்குந்த மகாஜனங்களின் சார்பாகவும் இன்று இங்குக் கூடும் நமது நான்காவது சமூக மகாநாட்டிற்கு உங்கள் அனைவரையும் மனமார்ந்த அன்போடு நான் வரவேற்கிறேன்.

வெகு தூரத்திலிருந்து வரும் சகோதரர்களுக்குப் பணச் செலவு, சுகக்குறைவு, காலக் கழிவு முதலியவை இரட்டிக்காமலிருக்கவேண்டுமென்று எண்ணியே, இமயம் முதல் குமரி வரையிலுள்ள இந்திய நாடே யன்றி வெளி நாடுகளிலுமிருந்து வரும் இந்து மகா ஜனங்கள் இதே ஜில்லாவிலுள்ள கும்பகோணத்தில் மாபெருந் திரளாகக் கூடும் மகாமக சமயத்தில் நமது மகாநாட்டையும் கூட்டவேண்டுமென்று ஒரே மாதத்திற்கு முன்னர்தான் தீர்மானித்தோம். காலம் மிகவுங் குறுகியிருப்பினும், உங்களனைவரையும் வரவேற்றுபசரித்து உங்களோடு அளவளாவ வேண்டும் என்ற பேரவாவானது எங்களை முன்னே உந்த, இம்மகாநாட்டினை அதி விரைவில் கூட்டியுள்ளோமாகையால் குறைகள் பல ஏற்படக்கூடும். குலாபிமானம் மிகுந்த நீங்களெல்லோரும் அவற்றைப் பொறுத்து, எங்கள் வரவேற்பினை அன்புடன் ஏற்று இக்கூட்டத்தைச் சிறப்புற நடத்தி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## திருவாரூர்ச் சிறப்பு

புண்ணிய பூமியெனப் பேரறிஞரால் போற்றப்பெறும் பாரதமாதாவின் திருமுகம்போல் விளங்குவதும், தலை சிறந்த புண்ணிய நதிகளில் ஒன்றாகிய பொன்னி நதி பரந்து பாய்வதால் பல்வளங்களும் எய்தி யுள்ளதும், சோறுடைத்தென ஔவைப் பிராட்டியால் சிறப்பித்துச் சொல்லப் பெற்றதும், சைவ சமயாசாரியர்களால் தேவாரத் திருப்பதிகங்கள் பாடப்பெற்ற சிவஸ்தலங்களும் ஆழ்வாராதியர் மங்களாசாஸனம் பெற்ற வைணவத் திருப்பதிகளும் நிரம்பியுள்ளதும், நமது குல முதல்வர்களாகிய நவவீராதியோர் முதல் முதல் முசுகுந்தச் சக்கரவர்த்திக்குப் படைத் துணைவராயிருந்து புகழ் பெற்றதும், நமது குலதிலகமாகிய கவிச் சக்கரவர்த்தியார் ஒட்டக்கூத்தர் அவதரித்துச் சோழர் அவைக்கொரு அமையா அணிகலனாயிருந்து மிளிர்ந்ததுமாகிய இச்சோழவள நாட்டின்கண் திலகம்போல் விளங்குவது இத்திவ்விய திருப்பதியாகிய திருவாரூரேயாம் என்பதை யாரே மறுக்க வல்லார்?

'திசை எட்டும் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே' என ஆளுடைய அடிகளும், 'சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது' எனச் சேக்கிழார் சுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளியதை நோக்க இவ்வாரூர் மிகமிகப் புராதனமான நகரங்களுள் ஒன்று என்பது தெற்றென விளங்குகிறது. இத்தலம் பிறக்க முத்தி தரும் பெருமை வாய்ந்தது என்பது தோன்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளால் 'திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கு மடியேன்' எனச் சிறப்பித்தோதப் பெற்றதும், பஞ்ச ஸ்தலங்களுள் பிருதிவி க்ஷேத்திரமாகக் கொண்டாடப் பெறுவதும், சப்த விடங்களுள் முதன்மை பெற்றுள்ளதும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் மணிமுத்தா நதியிலிட்ட பொன்னைப் பரவை நாச்சியாருக்கு எடுத்துக் கொடுத்த 'கமலாலயம்' என்னும் புண்ணிய தீர்த்தத்தை யுடையதும், நடுநிலைமை தவறாது நீதி செலுத்தி உலகப் பிரசித்தி பெற்ற மனுநீதிச் சோழனும் சைவத் திருமுறைகள் வகுத்த சோழ மன்னர்களும் விளங்கியதும், சோழர்கள் முடிதரித்தற்குரிய இராஜதானிகளுள் ஒன்றாயதும், ஆச்சார்ய சுவாமிகள் மூவராலும் பாடப்பெற்று 34 தேவாரப் பதிகங்களை யுடையதும், நமது சைவத்திற்கே கண்போன்று விளங்குவதாகிய பெரிய புராணத்திற்கு முதல் நூலாகிய திருத்தொண்டர்த் தொகை ஆரூரரால் செய்தருளப் பெற்றதும், நம்மை யாளுடைய தியாகேசப் பெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொருட்டு நள்ளிருளில் பரவை நாச்சியாரிடத்துத் தேவர்க்குமரிய தாமரை மலர் போன்ற தமது பொற்பாதங்களால் நடந்து அன்று தூது சென்றதனால் இன்றும் சிவமணங் கமழும் திருவீதிகளை யுடையதும், நாலா பக்கங்களிலும் எண்ணிறந்த புண்ணிய க்ஷேத்திரங்களை யுடையதும் மற்றும் பல்வேறு இயற்கை வளங்களும் அமையப் பெற்றுத் தலைசிறந்துள்ளதுமாகிய இத்திவ்விய நகரத்திற்கு நமது குல முன்னேற்றத்தை நாடிப் பெருந்திரளாகக் கூடியுள்ள உங்களனைவரையும் வரவேற்றுபசரிக்கும் மகத்தான புண்ணியம் கிடைக்கப் பெற்றமை கருதி நான் மிகவும் மகிழ்வெய்துகிறேன்.

## சமூக இயக்கம் அவசியமா?

எங்குப் பார்த்தாலும் தேசீயம், தேசீயம் என்னும் ஆரவாரம் பெரிதாயிருக்கும் இச்சமயத்தில் சமூக இயக்கம் அநாவசியமானது என்று கூறுவாருமுளர். அது உண்மை யுணராதார் கூற்றேயாகும். நம் தேசத்திலுள்ளது போன்ற ஜாதி வித்தியாசம் உலகத்தில் எத்தேசத்திலும் கிடை

யாது. உண்மையினைக் கூர்ந்து பாராதார் ஜாதி வித்தியாசங்கள் மேல் நாடுகளிலும் உண்டென்று வாதாடுவர். வித்தியாசங்கள் மேல் நாடுகளிலும் உண்டென்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இவ்விரண்டிற்கு முள்ள வித்தியாசத்தைக் கவனிக்கவேண்டும். மேல் நாடுகளில், மேல் வகுப்பினர், மத்திய வகுப்பினர், கீழ் வகுப்பினர் என்ற பாகுபாடுகள் உண்டு. இப்பிரிவுகள் யாவும் அவரவர்கள் அந்தஸ்தைப் பொறுத்தன. அங்கு மத்திய வகுப்பிலோ, கீழ் வகுப்பிலோ தோன்றியவர்கள் தாங்கள் பின்னர் தேடிக்கொள்ளும் கல்வி அந்தஸ்து முதலியவற்றால் மேல் வகுப்பினராக மாறுதற்கிடமுண்டு. 'எக்குடி பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியிற் கற்றோரை மேல் வருகென்பர்' என்ற உயரிய கொள்கை அந்நாடுகளில் கையாளப்பட்டு வருகிறது. நமது நாட்டிலோ, எத்துணை நற்குண நற்செயல்கள் உடையவனாயிருப்பினும் கீழ்க் குலத்திற் பிறந்தவன் கீழ்க் குலத்தவனே; எத்தகைய இழி குணங்கள் உடையவனாயிருப்பினும் மேற்குலத்தவன் மேற்குலத்தவனே. இங்ஙனம் வேறுபடும் மேல் நாட்டு வகுப்புக்களையும் நம் நாட்டு வகுப்புக்களையும் ஒன்றுபடுத்திக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்?

ஒரு மனிதனுடைய உடலை, அதன்கண்ணுள்ள பல அங்கங்களும் அவையவை அடையவேண்டிய வளர்ச்சி முதலியவற்றை அடைந்தாலன்றிப் பூரண வளர்ச்சியும், ஆரோக்கியமும் உடையதென்று கொள்ளமுடியாது. இதுவே நம் தேசத்திற்கும் பொருந்தும். பல வகையாலும் பிளவுபட்டிருக்கும் நம் நாட்டிலுள்ள பல இனத்தவர் சேர்ந்ததே இந்திய ஜன சமூகம் என்று சொல்லப்படுகிறது அவ்வாறு இந்திய ஜன சமூகத்திற்கு அங்கங்களாக அமைந்துள்ள பல்லினங்களும் முன்னேற்றமடைந்தாலன்றி நமது தேசம் முன்னேற்றமடைந்ததாகச் சொல்ல இயலாது. தேசீய உணர்ச்சிக்கு ஒற்றுமை இன்றியமையாதது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். கல்வி, செல்வம் முதலியவற்றால் முன்னேற்றமடைந்துள்ள பிரிவினர்க்கும், பின் நிற்கும் பிரிவினர்க்கும் சமத்துவ வுணர்ச்சி ஒருபோதும் உண்டாகாது. அஃதுண்டாகாதபோது ஒற்றுமை எங்ஙனமுண்டாம்? நம்மிடையே பல்லாண்டுகளாக இருந்து வரும் தேசீய இயக்கத்தால் யாதொரு புதிய உணர்ச்சியையும் நம்மவர்கள் பெற்றாரில்லை என்பதும், நமது சமூக இயக்கம் தோன்றிய பிறகே நாம் விழிப்படைந்து முன்னேற்ற உணர்ச்சி பெற்றோம் என்பதும் நாம் அனுபவத்திற் கண்ட உண்மையாகும். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் சீரடைந்தால் அக்குடும்பம் சீர்பெற்றதாகும். ஒரு சமூகத்தின் அங்கங்களாகிய ஒவ்வொரு குடும்பமும் மேன்மையுற்றால் அச்சமூகம் தானே மேன்மையுறும். அவ்வாறே அங்கங்களாகவுள்ள சமூகங்கள் முன்னேற்ற முற்றால் அங்கியாகிய தேசம் முன்னேற்ற முறுதல் சொல்லாமலே அமையும். ஆகவே, சமூக இயக்கம் தேசீய இயக்கமே யாகும். நம் நாட்டைப் பொறுத்த வரையில் சமூக முன்னேற்றமில்லையெனில் தேச முன்னேற்றமு மில்லை யாகும். இதனால் சமூக இயக்கம் தேசீய இயக்கத்திற்கு விரோதமானதல்லவென்பதும், தேசீய உணர்ச்சியைச் சுலபத்தில் உண்டாக்கும் மார்க்கம் இதுவே யென்பதும் பெறப்படுகிறது.

## நமது பண்டைப் பெருமை

பண்டைக் காலந்தொட்டு தமிழகத்தின்கண் வாழ்ந்து வரும் பல பிரிவினருள் செங்குந்தர்களாகிய நாமும் ஒரு பிரிவினராவோம். உலகத்தில் தருமத்தை நிலைநாட்டும் பொருட்டு அவதரித்தருளிய முருகவேளோடு தோன்றி வெற்றி பெற்றப் பின்னர் முசுகுந்தச் சக்கரவர்த்திக்குப் படைத்துணைவராக இருந்து தமிழ் நாட்டில் குடியேறிச் சுத்த வீரர்களாக விளங்கிய வீரவாகுதேவர் முதலிய நவவீரர்களும், அவர்கள் வழிவந்த வீரநாராயணர் முதலிய எண்ணிறந்த வீரர்களும், மற்றுமுள்ள பல பேரறிஞர்களும் நமது முன்னோர்களே என்பதைக் கந்தபுராணம், ஈட்டி எழுபது, செங்குந்தர் திருக்கை வழக்கம் முதலிய அரிய செந்தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம். நம் முன்னோர்களில் சோழ மன்னர்களின்கீழ்ப் படைத் தலைவர்களாகவும், குறுநில மன்னர்களாகவும், மதி யமைச்சர்களாகவும் திகழ்ந்தனர் பலர். சுமார் 900 ஆண்டுகளுக்கு முன் தொடர்ச்சியாக மூன்று சோழர்கள் காலத்தில் பிரதான மந்திரியாக விருந்து அரச அவைக்கோர் பேரணிகலனாக விளங்கிய கவிச் சக்கரவர்த்தி *ஒட்டக்கூத்தரது பெரும்புகழை அறியாதார் யாரேயுளர்.

சோழ ராஜ்ஜியம் க்ஷீணிக்க ஆரம்பித்த பிறகு சுயேச்சை வாழ்க்கையை விரும்பிய நமது முன்னோர்கள் நெசவுத் தொழிலை மேற்கொண்டனர். பல்லாண்டுகளுக்கு முன்னரே நாலா பக்கங்களிலும் பரவிக் குடியேற ஆரம்பித்த நமது சமூகத்தவர், ஒழுக்கம், பக்தி முதலியவை குன்றிச் சிதறிப் போகாத வண்ணம் பரதகண்டத்தை நான்கு திசை நாடுகளாகப் பிரித்து, ஒவ்வொரு திசை நாட்டையும் 18 கிளை நாடுகளாகப் பிரித்து, அவற்றின் கீழ்க் கிராமங்களை அமைத்து, இவை யாவற்றையும் ஒரு மகாநாட்டின் ஆட்சியில் வைத்து அவற்றிற்கு வேண்டிய சட்ட திட்டங்களையும் பொருத்தமாக ஏற்படுத்தி வைத்தனர். தற்காலத் தவரும் கண்டு ஆச்சரியப்படக் கூடிய இவ்வரிய நாட்டமைப்பை அமைத்த நமது முன்னோர் எத்துணை ராஜீய நிபுணராயிருக்க வேண்டுமென்பதை யோசியுங்கள். நமது முன்னோர்களது பல சிறப்பட்ட புகழினைத்தையும் ஈண்டு விரிக்கிற் பெருகும். செங்குந்தர் பிரபாவத்திரட்டு முதலியவற்றில் அதனைக் கண்டுகொள்க.

பண்டைப்புகழை எடுத்தோதுவதில் மாத்திரம் நாம் பின்வாங்குவதில்லை. ஆனால் அவற்றால் அடையவேண்டிய பயனை மாத்திரம் அடைய முயல்கிறதில்லை. முன்னோர்களது பெருமைகளை நூல்களில் அமைத்து வைப்பது வீண்பெருமை பேசிச் சோம்பித் திரிவதற்கல்ல; செயற்கரிய வீரச் செயல்களைச் செய்து கீர்த்தி பெற்ற முன்னோரது இரத்தம் நம்முடைய நரம்புகளிலும் ஓடிக்கொண்டிருக்கின்ற தாகையால் நமக்கும் அத்தகைய செயல்கள் அசாத்தியமானவை யல்ல என்பதை உணர்த்துதற் பொருட்டேயாம்.

## நமது தற்கால நிலை

இத்தகைய சீருஞ்சிறப்பு முற்றிருந்த நம்மவர்களது தற்கால நிலையை நோக்குமிடத்து அது மிகப் பரிதாபகரமாகவே இருக்கிறது. கல்வி, வியாபாரம், செல்வம் முதலிய பல துறைகளிலும் பின்னடைந்துள்ளோம். 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று' என்னும் மறைமொழியை அடியோடு மறந்தோம். இவ்வீழ்ச்சியினால் நமக்கே யன்றிக் குற்றமற்ற நமது முன்னோர்களுக்கும் இழிவை யுண்டாக்குகிறோம். இதற்கு முதன்மையான காரணம் உலகப் போக்கையும், காலப் போக்கையும் அறிந்து அவற்றிற்கேற்ப நமது தொழில் முதலியவற்றை மாற்றிக் கொள்ளாமையே யாம். நாளுக்கு நாள் உலகம் மாறிக்கொண்டே போகிறது. அதுவே அதன் இயல்பு. அத்தகைய வுலகத்திலுள்ள நாமும் அதற்கேற்ப அப்போதைக் கப்போது மாறிக்கொண்டிருந்தாலன்றி அதில் நாம் வாழ்தல் இயலாது. 'முற்காலத்துப் பெரியோர்களெல்லாம் வாழவில்லையா? நாம் அவர்களைவிட அறிவாளிகளா?' என்று வீணே வாதாடுவது அறியாமையாகும். நம்நாட்டிலுள்ள பல்லினத்தவரும்—இல்லை, உலகத்திலுள்ள எல்லா நாடுகளும்—முன்னேற்றப் பந்தயத்தில் முனைந்து போட்டி போட்டு அதிவேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் சமயத்தில் நாம் மாத்திரம் கண்மூடித்தனமாய்த் தாடி வைக்கலாமா கூடாதா? பெருந்தாலி கட்டுவதா சிறு தாலி கட்டுவதா? என்பவை போன்ற பயனற்ற விசாரணைகளில் சண்டையிட்டுக் கக்ஷிகள் ஏற்படுத்திக் கொண்டிருப்பது அறிவுடைமை யாகாது. நாம் மற்றவர்களோடு விரைந்து செல்லாதிருப்போமாயின் அவர்களால் மிதிக்கப்பட்டு முடிவில் நசித்துப்போவோ மென்பது திண்ணம்.

ஆகவே, நாம் இனியாவது கண் விழித்துப் பார்த்து உலகப்போக்கை யுணர்ந்து அதற்கேற்ப இடைவிடாது உழைத்துக் கூடிய சீக்கிரம் லக்ஷியத்தை அடைவோமாக!

## நமது சங்கமும் பத்திரிகையும்

நமது பரிதாபகரமான தற்கால நிலையைக் கண்டு சகிக்க மாட்டாத நங்குல அறிஞர்கள் சிலர் சென்னையில் நமது தலைச்சங்கத்தையும் ஆங்காங்குக் கிளைச்சங்கங்களையும் நிருவி, பிரசாரகர்களை ஆங்காங்கு அனுப்பியும், 'செங்குந்த மித்திரன்' என்னும் பத்திரிகையை வெளிப்படுத்தியும், நம்மிடையே நிறைந்துள்ள அந்தகாரத்தைப் போக்கி அறிவுச்சுடர் கொளுத்தி வருகிறார்கள் என்பதை நீங்களனைவரும் உணர்வீர்கள். இம்முயற்சிக்குக் குலாபிமானிகள் பலரும் உதவி புரிந்து வருகிறார்கள் என்பதையும் நாம் மறக்கலாகாது. நம்முடைய சங்கம் பத்திரிகைகளால் நாம் இதுவரையில் பெரும் பயனை யடைந்துள்ளோம். இவை தோன்றுவதற்கு முன் நம்மரபினர் எந்தெந்த இடங்களில் எந்தெந்த நிலையில் இருந்தார்கள் என்று தெரிந்துகொள்ளவும் சக்தியற்றவர்களாக விருந்தோம். இப்போது நாம் விழிப்படைந்திருக்கிறோம். நமது இயக்கம் ஆரம்பிப்பதன் முன்பு உயர்தர கல்வி கற்கும் நங்குல மாணவர்கள் அத்திபூத்தாற்போல் அரிதாயிருந்தனர். பட்டதாரிகளைத் தேடிப் பொறுக்க வேண்டியிருந்தது. இப்பொழுதோ, நூற்றுக்கணக்கான செங்குந்த மாணவர்கள் உயர்தர கல்வி கற்க ஆரம்பித்து விட்டார்கள்; பட்டதாரிகளும் வருஷா வருஷம் பெருகிக்கொண்டு வருகிறார்கள்.

பொதுஜன இயக்கங்களிலும் சேவையிலும் இதுவரையில் பெரும்பாலும் தலை காட்டாதிருந்த நம்மரபினர் தற்போது தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு, முனிசிபாலிடி முதலிய பொது ஸ்தாபனங்களில் அங்கத்தினராகவும், தலைவராகவும் ஆங்காங்கு இருந்துவரக் காண்கிறோம். இன்னும் பல வழிகளிலும் நாம் முன்னேறி வருகிறோம். அவையனைத்தையும் ஈண்டு விரிக்கிற் பெருகும்.

நாலைந்து ஆண்டுகளுக்குள்ளாகவே நாம் இத்தகைய பயனை அடையுமாறு செய்த சங்கத்தினிடத்தும் பத்திரிகையினிடத்தும் தற்போது நமக்கு ஊக்கங் குறைந்து வருவதாகத் தெரிகிறது. அதற்குக் காரணம் இச்சமயம் உலக முழுதையும் பாதித்து வரும் வியாபாரக் குறைவும், பணமுடையும்தான் என்பதையும் நாமறிவோம். ஆனாலும் நமது சமூகத்தைப் போன்ற பெருஞ் ஜனத்தொகையுடைய ஒரு சமூகத்திற்கு ஒரு மாதப் பத்திரிகையைச் சரிவர நடத்துவது அசாத்தியமானதல்ல. நம்மிடத்தில் குலாபிமானம் மாத்திரம் குறையாதிருக்குமாயின் பத்திரிகையின் சந்தாதாரர்கள் குறைவதற்கு இடமே யிராது. நமது மித்திரன் எக்காலத்திலும் நிலைபெற்று நடந்து வர வேண்டி ஆயுள் சந்தாதாரர்களையும், பாரம்பரைச் சந்தாதாரர்களையும் சேர்க்கத் தலைச்சங்கம் முயன்று வருகிறது. இவ்வெண்ணத்தை நிறைவேற்றக் குலாபிமானிகள் அன்பு கூர்ந்து முன் வந்து உதவி புரிவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. நம

* இப்புலவர் பெருமான் இயற்றிய செந்தமிழ்நூல்கள் எண்ணிறந்தவற்றுள் மிக அருமையானது 'தக்கயாகப் பரணி' என்னும் நூல். அது பொருத்தமான பழைய உரையுடன் ப்ரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாயர் சாமிநாத ஐயர் அவர்களால் சமீபத்தில் அச்சிட்டு வெளியாக்கப் பெற்றிருக்கிறது. அதனைப் படிப்போர் கவிச் சக்கரவர்த்தியாரது கல்வித்திறனையும், அருமை பெருமைகளையும் ஒருவாறு உணரலாம்.

சங்கமும் பத்திரிகையும் சிலருடைய ஊக்கத்தாலும் உழைப்பாலும் நடக்கக்கூடியவை யல்ல. ஆகையால் நம் சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தன்னுடைய சங்கம் தன்னுடைய பத்திரிகை என்று எண்ணி அவற்றை முன்னுக்குக் கொண்டு வர முயலவேண்டும்.

எனதரிய சகோதரர்களே! சகோதரிகளே! குலப்பெருமையைக் கூறும் ஒரு பிரபந்தத்தைப் பெற வேண்டி 1008 தலைகளை லக்ஷியஞ் செய்யாது அறுத்துக் கொடுத்தும் வல்லான் முதலிய துஷ்டர்களை அழித்து உலகத்தாருக்கு க்ஷேமமுண்டாக்க வேண்டித் தங்கள் உயிரையும் தியாகஞ் செய்தும் அவனியில் என்றும் அழியாப் புகழை நிலைநாட்டிய வீரசெங்குந்தர்களின் வழித் தோன்றிய உங்களுக்கு, அவ்வீரர்களின் இரத்தம் நரம்புகளில் ஓடிக்கொண்டிருக்கும் உங்களுக்கு, உங்கள் முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் ஒரு மாதப் பத்திரிகையின் பொருட்டுச் சொற்ப பொருள் தியாகஞ் செய்து அதனை நிலைநாட்டுவது ஒரு பெருங் காரியமாகாது. இன்றே, இப்போதே செங்குந்த மித்திரனுக்குப் பரம்பரைச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து பண்டைப் புகழை என்றைக்கும் நாட்ட முன் வாருங்கள்.

## செங்குந்தர் விடுதியும் கல்வி நிதியும்

தென்னிந்தியாவில் புராதனமாயுள்ள எந்த ஸ்தலத்திற்குச் சென்றாலும், நம்முடைய மடங்களையும், திருப்பணிகளையும், கட்டளைகளையும் இன்றும் காணலாம். இவையே யன்றி நாம் ஒவ்வொரு ஊரிலும் நூற்றுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் வருஷா வருஷம் பொருள் சேர்த்து ஆங்காங்குள்ள தேவாலயங்களுக்குச் செலவு செய்து வரவில்லையா? இவை யாவும் நமது தெய்வ பக்தியையும் தியாக சிந்தையையும் காட்டவில்லையா? ஆகையால் நம்மிடத்தில் பணமில்லை யென்று சொல்லுவது பொருந்தாது. மனமுண்டேல் பணமுண்டு. வேண்டியது தியாக சிந்தை யொன்றே. பாரின் வாழ்வு அநித்தியம்; பரமபதமே நித்தியம் என்று எண்ணி உலக வாழ்க்கையை அலக்ஷியஞ் செய்வது அறிவுடைமை யாகாது. வையத்து வாழ்வாங்கு வாழ்பவனே வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான், இந்நில வுலகத்தில் புகழோடும் சௌகர்யத்தோடும் வாழத் திறமை யற்றவன் மோக்ஷ உலகத்தை அடைய உரிமை யற்றவனாகிறான் என்பதே மேலோர் துணிபு. ஆகையால் உண்மையிலேயே மோக்ஷத்தை விரும்புவோமாயின் நாம் உலகத்தில் சௌகர்யத்தோடு வாழவேண்டிய ஏற்பாடுகளைச் சரிவரச் செய்துகொள்ளவேண்டும்.

பெரும்பாலும் வியாபாரத்தையும் கைத்தொழிலையும் மேற்கொண்டுள்ள நம்மவர்கள் தொழில், வியாபாரம், வழக்கு முதலிய பல வேலைகளை முன்னிட்டு நூற்றுக் கணக்கில் தினந்தோறும் சென்னைக்கு வந்து தங்கவேண்டி யிருக்கிறது. இரங்கூன் முதலிய இடங்களுக்குச் செல்ல வேண்டியவர்களும் கப்பலேற அங்கு வர நேர்கிறது. இத்தனைப் பேரும் தங்குவதற்குத் தமக்கென ஒரு விடுதி யின்மையால் படும் துன்பம் சிறிதல்ல. உயர்தர கல்வியை நாடிச் சென்னைக்கு வரும் நமது மாணவர்களுக்கும் ஒரு விடுதி யில்லாமலிருப்பது ஒரு குறையாக இருக்கிறது. இலக்ஷக் கணக்கான ஜனத் தொகையையும் அநேக செல்வச் சீமான்களையும் உடைய நம்மினத்தவர்க்குத் தங்கள் சொந்த உபயோகத்திற்காக ஒரு விடுதியை ஏற்படுத்துவது பெருங்காரியமாகாது. நமது விடுதிக்காகத் தற்போது சுமார் 1000 ரூபாய் வரை சேர்ந்திருக்கிறதென்பதை நமது மித்திரன் மூலம் அறிந்திருப்பீர்கள்.

இப்போது நமது கல்விநிதியிலுள்ள சொற்ப தொகையின் வருவாயைக் கொண்டு, பொருளுதவியை நாடி ஏராளமாக மனுக்கள் அனுப்பும் ஏழை மாணவர்களுக்குப் போதிய உபகாரம் செய்ய இயலவில்லை. 'சிற்றுயிர்க் குற்ற துணை கல்வியினாங்கில்லை' யாதலின் இது நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய தொன்றாம். ஆகையால், ஒவ்வொரு கிராமத்திலும் கல்யாணம் முதலிய விசேஷ காலங்களில் கோயில், மடம் ஆகியவற்றிற்கு நன்கொடை வழங்குவது போலவே நமது கல்விநிதிக்கும் செங்குந்தர் கட்டட நிதிக்கும் வழங்க ஏற்பாடு செய்தல் மிக அவசியமாகும். இதுவன்றி, கிராமங்கள் தோறும் வருஷா வருஷம் ஏராளமாக வரும் பொது வருவாயில் ஒரு சிறு பகுதியையாவது சில ஆண்டுகளுக்கு ஷை நிதிகளுக்கு அனுப்பி வைக்குமாறு ஏற்பாடு செய்வதும் உசிதமாகும். வியாபாரிகள் சென்னை பளையக்காட்டு கம்பெனியார் செய்வது போல் மகமை ஏற்பாடு செய்து வைப்பதும் ஷை நிதிகளின் பொருளைப் பெருக்குவதற்கான முறையாம்.

## கக்ஷிப் பிரதிகக்ஷிகள்

'ஒன்று பட்டா லுண்டு வாழ்வு' என்ற உயரிய கொள்கையை முற்றும் மறந்தவர்கள் நம்மவர்களே யாவர். அற்ப காரியங்களை முன்னிட்டுக் கக்ஷியிட்டு வீண் வழக்கிட்டு, ஒருவரை யொருவர் காட்டிக் கொடுத்து மதிப்பிழந்து, பொருள் நஷ்டப்பட்டு முடிவில் ஈன ஸ்திதியை யடைந்து பாழ்படுதல் நமக்கு இயல்பாக இருந்து வருகிறது. கக்ஷிகள் உண்டாகுங் காரணங்களையும், அவற்றினாலுண்டாகும் தீமைகளையும் ஈண்டு விரித்துரைத்தல் இயலாது. அவற்றை விஸ்தாரமாக அனுபவத்தில் அறியாத செங்குந்தர்கள் இராரென்றே எண்ணுகிறேன். முடிவாகப் பெரியதனக்காரர்களா யுள்ளவர்கள் பொதுஜன நன்மையைக் கோரி எதையும் கூடிய வரையில் 'மன்னித்து மறந்து விடுதல்' என்ற ஆயுதத்தை உபயோகித்துப் பெருநோக்கமுடையவர்களாய்க் கக்ஷி யென்னும் பகைவனைத் தலைகாட்டா வண்ணம் தகர்த்தெறிந்து நன்மை புரிவார்களென நம்புகிறேன். ஒற்றுமையினாலேதான் எல்லாவித சித்திகளையும் பெறமுடியும். தனக்குள்ளே பிரிந்துள்ள ஒரு வீடானது ஒரு



போதும் வாழாது என்பது மறுக்கமுடியாத உண்மை.

## நமது ஒற்றுமை

மேற்கூறிய கக்ஷிப் பிரதி கக்ஷிகளை ஒழிப்பதனால் நாம் ஒரு வகையான ஒற்றுமை யடைகிறோம். இனி வேறு வகையில் ஒற்றுமை யடையவேண்டிய முறைகளைக் கவனிப்போம். நமது சங்கமும் பத்திரிகையும் தோன்று முன், நம்மினத்தவர்கள் தமிழ் நாட்டிலும் வெளி நாடுகளிலும் எவ்வளவு தூரம் பரவிக் குடியேறி என்னிலையி லிருக்கின்றனர் என்பதை ஒரு சிறிதும் அறிந்துகொள்ளச் சக்தியற்றவர்களா யிருந்த தன்றிச் சகோதர பான்மையற்றவர்களாயு மிருந்தோம். தற்போதோ குடதிசை நாட்டவர் குணதிசை நாட்டவரையும், தென்குமரியி லுள்ளோர் வடவேங்கடத்தருகிலுள்ளவர்களையும் சகோதரர்களாகக் கருதி அன்பால் பிணிக்கப்பெற்றிருப்பதைப் பிரத்தியக்ஷத்தில் காண்கிறோம். இது நமது சங்கம், பத்திரிகை, மகாநாடுகள் ஆகியவற்றால் அடைந்துள்ள ஒற்றுமைக்குச் சாதகமாகிய பெரிய வெற்றி யல்லவா? அத்தகைய பத்திரிகை முதலியவற்றை நாம் ஆதரித்தல் நாம் ஒன்றுபடுவதற்கு இன்றியமையாத தல்லவா? செங்குந்த சகோதரர்களது மனத்தோடு மனத்தை மன்றப் பிணிக்கவல்ல வழி மற்றொன்றுமுண்டு. அதுவே ஒற்றுமை மணமாகும். ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம் பல பிரிவினராகப் பிரிந்து, கொள்ளல் கொடுத்தலின்றி இருந்து வருகிறோம். காலதேசங்களைப் பொறுத்துப் பிற்காலத்தில் ஏற்பட்ட இப்பிரிவுகள் நமது சமூக ஒற்றுமைக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கின்றபடியால் அவற்றை நாம் ஒற்றுமை மணத்தின் மூலமாக ஒழிக்க முயலவேண்டும். அப்போதே நாம் பூரண ஒற்றுமை பெற்றவர்களாவோம். நமது முதல் மகாநாட்டிற்குப் பிறகு நடந்துள்ள சில ஒற்றுமை மணங்களின் சம்பந்தமாக இரண்டொரு ஊர்களில் கலகங்களும், சண்டை சச்சரவுகளும் ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். மகாநாட்டில் கூடிய ஆயிரக்கணக்கான அறிஞரால் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப் பெற்ற ஒற்றுமைத் திருமணத்திற்கு இடரியற்ற முயல்வோர் அறியாமையை என்னென்று கூறுவது! இனியாவது அவர்கள் தாராள நோக்கங் கொண்டு இடர் செய்யாது 'நாடொப்பன செய்' என்ற அமுத மொழியை மனத்திலிருத்திப் பெரும்பாலோர் கொண்டுள்ள கொள்கைக்கு விரோதிகளாகா திருப்பார்களென நம்புகிறோம். ஒருகை விரலால் எண்ணக்கூடியபடி மிகச் சில ஒற்றுமை மணங்கள் நடந்துள்ளது போதாது; பெருவாரியாக நடைபெற வேண்டும்.

இலங்கையிலுள்ள செங்குந்தர்கள் தமிழ் நாட்டிலும், தென்னாட்டார் வடநாட்டிலும், வடநாட்டார் மேல் நாட்டாரோடும் பெண் கொள்ளல் கொடுத்தல் வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள் என்பது நாம் பூரண ஒற்றுமையை யடையுங் காலம் நெருங்கிவிட்டது என்பதைக் காட்டுகிறது.

## கல்வியும் கைத்தொழிலும்

இம்மை மறுமையாகிய இருமைக்கும் அவசியம் வேண்டப்படுவது கல்வியேயாகும். ஆகையால் ஒவ்வொரு செங்குந்தரும் (ஆண்பாலரும், பெண்பாலரும்) குறைந்தது ஆரம்ப கல்வியாவது கற்க வேண்டும். பின்னர் செல்வாக்குள்ள குடும்பத்துப் பிள்ளைகளும், கூர்ந்த புத்தியுள்ள பிள்ளைகளும் உயர்தர கல்வியை அடைய முயலவேண்டும், பெரும்பாலோர் அரசாங்க உத்தியோகத்தை நாடிப் படிக்காமல் போதிய அளவு படித்த பிறகு தொழிற் கல்வியில் இறங்க வேண்டும். வியாபாரம் வைத்தியம், சிற்பம், யந்திரக்கலை, கைத்தொழில் முதலிய பல துறைகளில் தேர்ச்சிபெற வேண்டும். நமக்குரியது நெசவுத் தொழிலே என்று கருதுதல் கூடாது. அவரவர் இயற்கை அறிவுக்குத்தக்க தொழிலை மேற்கொள்வதே நலம். நெசவுத் தொழிலையும் பல்வகையிலும் விருத்தி செய்ய வேண்டும். நெசவுக்காரர்கள் ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமாகத் தங்கள் தொழிலை நடத்துவது மிகுந்த பயனைத் தரும்.

## பிரதிநிதித்துவம்

மேலே காட்டியபடி நமது இயக்கத்தின் பயனாக தாலுக்கா ஜில்லா போர்டுகளிலும் முனிசிபாலிடி, யூனியன் பஞ்சாயத்துக் கோர்ட்டு முதலியவற்றிலும் தற்போது நாம் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறோமாயினும், சென்னை, டெல்லி சட்டசபைகளில் இது வரையில் தேர்தல் மூலமாகவாவது, நியமன மூலமாகவாவது நம்மில் ஒருவரும் பிரதிநிதியாக இருந்ததில்லை. நமக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் இல்லாமை இதற்கொரு காரணம். மற்றொன்று அரசாங்க விஷயங்களில் ஊக்கத்தோடு நுழையாமை அல்லது அசிரத்தை. சென்ற சட்டசபைத் தேர்தல் சமயத்தில் நமது தலைச்சங்கமும், கிளைச்சங்கங்களும், கிராமங்களும் பெருவாரியாக மனுக்கள் மூலகாகவும்; தந்திகள் மூலமாகவும் தீர்மானங்கள் மூலமாகவும் நம்மில் ஒரு கனவானைச் சட்டசபைக்கு நியமனஞ் செய்யும்படி அரசாங்கத்தாரையும் மந்திரிமார்களையும் கேட்டுக்கொண்டும் யாதொரு பலனையும் அடையாமற் போனோம். காரணம் என்ன? நம்மவர்களுக்குள்ளே சிலர், சங்கத்தாராலும் பொது ஜனங்களாலும் குறிக்கப்பெற்ற ஒருவருக்குப் போட்டியாகப் பிரயத்தனம் செய்ததும், ராஜ்ய கக்ஷிகளில் நமக்குச் செல்வாக்கின்மையுமேயாம். தமிழ்நாடு முழுதும் பரவியுள்ள நம்மவர்களது வோட்டுகள் அனைத்தையும் ஒரே வழியில் உபயோகிக்கும் கட்டுப்பாடும், ஒற்றுமையும் நம்மிடை யிருக்குமாயின் நாம் நியமன மூலமேயன்றித் தேர்தல் மூலமாகவும் வெற்றி பெற்றிருப்போ மென்பதில் ஐயமில்லை. கட்டுப்பாடும் அபிமானமும் இன்றிச் சிதைந்து கிடப்பதாலேயே நம்முடைய நிலைமையை அறிந்த மந்திரிக் கக்ஷியாரும் அரசாங்கத்தாரும் நம்மை அலக்ஷியம் செய்தார்கள். அவர்கள் மதிக்கத்தக்க ஆயுதங்களாகிய கட்டுப்பாடும் உலகானுபவமும் நம்மிடத்தில்

இருந்திருக்குமானால், தேர்தலுக்கு முந்தியே நமது தலைச் சங்கத்தையோ நம் சமூகத் தலைவர்களையோ ராஜீயக் கட்சிக்காரர்கள் உதவிக்காக அணுகியிருப்பார்கள். அப்போது நம்முடைய காரியமும் சுலபமாகச் சித்தி பெற்றிருக்கும். ஒற்றுமையாலுண்டாகும் பயனைக் கவனித்துப் பாருங்கள்.

பொது ஸ்தாபனங்களில் நாம் பிரதிநிதித்துவம் பெற முயல்வது பிறப்புரிமை யாகையால் தேர்தல்களில் நம்மவர்கள் நின்று வெற்றிபெற முயல வேண்டியது மிகவும் அவசியமாகும். அவற்றில் இடம் பெறாதவர்களுக்குப் பொதுஜன மதிப்பிராது; பொது ஜன மதிப்பில்லாதவர்களுக்குச் சட்டசபை முதலியவற்றில் நுழைய இடமிராது என்னும் உண்மையை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தேர்தல்களில் பொருள் செலவிடுதல் நல்லதல்ல. நம்மினத்தவர் வோட்டுகள் அதிகமாகவுள்ள இடங்களிலும் நமக்குச் செல்வாக்குள்ள இடங்களிலுமே நாம் தேர்தலுக்கு நிற்க வேண்டும். இதர சகோதர இனத்தவரை எவ்விதத்திலும் பகைவ ராக்கிக்கொள்ளலாகாது. செல்வாக்குள்ள இனத்தவரோடு கலந்துகொண்டு நம்மவர் வோட்டுகளை அவர்களுக்குக் கொடுத்தும் அவர்கள் வோட்டுகளை நாம் பெற்றும் கூடிய வரையில் செலவின்றியும் போட்டியின்றியும் வெற்றிபெற வேண்டும். நம்மினத்து அபேக்ஷகர்களுக்கு நமது சங்கத்தாரும் இனத்தவரும், கக்ஷி விரோதங்களிருப்பினும் அவற்றை மறந்து உடனிருந்து உழைக்க வேண்டும்.

### முடிவுரை

எனதன்பார்ந்த சகோதர சகோதரிகளே! நமது குலஞ்சீரடைதற்குரிய முறைகளை ஆலோசித்துத் தீர்மானிக்க வேண்டுமென்ற தூய எண்ணத்தோடு மாபெருங் கூட்டமாகக் கூடியுள்ள நீங்கள் அனைவரும் மேற்கண்ட விஷயங்களையும் மற்றும் பல கிளைச்சங்கப் பிரதிநிதிகளும் ஏனைய அறிஞர்களும் கொண்டுவரும் விஷயங்களையும் பொறுமையுடனிருந்து தீர்க்க ஆலோசித்துத் தக்க முடிவுக்கு வந்து இம்மகாநாட்டினை வெற்றிபெறச் செய்யுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இத்துணைப் பெருங் கூட்டமாகக் கூடி எங்களைக் கௌரவப்படுத்திய உங்கள் அனைவருக்கும் மறுமுறையும் எனது மனப்பூர்த்தியான வந்தனத்தையும் சந்தோஷத்தையும் தெரிவித்துக்கொண்டு எனது உரையைப் பூர்த்தி செய்துகொள்ளுகிறேன்.

---

# பரம்பரைப் பொக்கிஷம்!

## ஆஸ்தி யொரு புறம்!! தருமமொரு புறம்!!

அன்பு சான்ற அறிஞர்களே!
குந்தர் குலத் தோன்றல்களே!
குலாபிமானிகளே!

உண்மையிலேயே உங்கள் குடும்பத்துக்கு என்றுங் குறையாத பொக்கிஷத்தைத் தேடிவைக்க நீங்கள் விரும்புகின்றீர்களா? அப்படியாயின் இன்றே நமது குலச் செல்வனும் 'செங்குந்த மித்திர'னுக்குப் பரம்பரைச் சந்தாதாரராகச் சேருங்கள். இதுபற்றி உங்களிடம் வரும் தலைச்சங்கப் பிரசாரகர்களிடம் ரூ. 30/-செலுத்திவிட்டீர்களாயின் உங்கள் குடும்பத்தார் தலைமுறை தலைமுறையாகச் 'செங்குந்தமித்திர'னை வாசித்துவரலாம். அதனால் நங்குலம் இதுவரை அடைந்துள்ள சீர்திருத்தமும் நலன்களும் தாங்கள் அறியாதவை யல்லவே? அது எத்தனை ஏழை மாணவர்க்குக் கல்விக் கண் திறக்கின்றது? எத்தனை யாயிரம் மக்களிடை அறிவுச் சுடரை எழுப்புகின்றது? அத்தகைய குலத்தீபம் என்றும் மங்காத வழியினைத் தேடுவது அவசிய மல்லவா? அதற்காகச் சொற்ப தொகையைக் கொடுப்பது பெரும் புண்ணிய மல்லவா? அத்தகைய புண்ணியத்தினைச் சம்பாதிப்பது தங்களைப் போன்ற அறிஞர்கட்கும், குலாபிமானிகட்கும், செல்வச் சீமான்கட்கும் கடமை யல்லவா?

இங்ஙனம்: தங்களது ஆதரவில் முழு நம்பிக்கை கொண்டுள்ள
ம. சண்முகசுந்தர முதலியார், ஆசிரியர்

---

'செங்குந்த மித்திரன்' ஆசிரியரும்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் காரியதரிசியும்,
சென்னை பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியருமான உயர் திருவாளர்
ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி. அவர்கட்கு
அன்னார் ஆங்கீரஸஹு மாசி மாதம் 29—30 தேதிகளில் நடைபெற்ற
தென்னிந்திய செங்குந்தர் நான்காவது
சமூக மகாநாட்டுக்குத் தலைமை வகித்த சமயம்
வரவேற்புச் சபையார் உவந்தளித்த

# வரவேற்பு நல்லுரை

**செங்குந்த குலக்குன்றில் சேணுயர்ந்த செழுஞ்சுடரே!**

சேண் வரை வளர்ந்துயர்ந்த செங்குந்த குல மாமலையின் உச்சியிலே குலாபிமான நெய்யிட்டு ஏற்றப்பட்ட பெரு விளக்கமாய் நின்று அறிவுச் சுடரொளி பரப்பி அஞ்ஞான அந்தகார மகற்றிவரும் தங்களது திருநாமங் கேளாத செவியுண்டோ? தங்களது பேரறிவொளிப் பிழம்பில் திளைத்துக் களிக்காத தேகமுண்டோ? தங்களது தேக காந்தியினைக் கண்டு கண்ணியம் பெறாத உள்ளமுண்டோ? புனிதமான தங்களது திருவடி தீண்டிய 'செங்குந்தர் கோட்டம்' புனித மடைந்தது; அன்புக் கதிர் பரப்பும் தங்களது வாண்முகங் கண்ட எங்களது உள்ளத் தடாகங்களிலே அறிவுத் தாமரை அலர்ந்து மலர்ந்து அருமணம் வீசுகின்றது.

**அறிவெனும் மலைவளர் அருமருந்தனையாய்!**

தூய அறிவையே ஆன்மாவாகக் கொண்டு, அதனை வளர்க்கு முகத்தானும் அதன் கிரணங்களை அறிவவாக் கொண்ட மக்களிடையே பரப்பு முகத்தானும் செந்தமிழ்த் தேவியாம் சீரிளந் தாய்க்கும் அளப்பரும் வனப்புடை ஆங்கில அன்னைக்கும் என்றும் வாடா நாண்மலர் மாலைகள் சூட்டி மகிழும் தங்களை எங்கட்குத் தலைவராகவும் முன்னேற்ற வழிகாட்டியாகவும் வழங்கி யருளிய நங்குல நாயகனது அருட்டிறம் என்னே! தங்களைப் பெற்றெடுத்த செங்குந்த குலத் தாயின் திருவுதரத்தே தோன்றும் பாக்கியம் பெற்ற எங்களிடையே யன்றிப் பல் வேறு ஜாதியினரிடையும் தங்க ளுபதேசங்கள் கன்மங் களைந்து வருகின்றனவெனின் தங்களது அறிவின் பரப்புக்கோ ரெல்லையிட எளியேங்களால் இயலுமோ?

**குலப்பணி சூடிடுங் கோதிலாக் குருவே!**

எளியேங்களுக்கு மெய்ஞ்ஞானம் போதிக்க வந்த குருவாக விளங்குந் தங்களது குலாபிமானத்தினை விரித்துரைக்க யாங்கள் வல்லே மல்லேம். தாங்களும் நங்குல வள்ளலாரும் சேர்ந்து இட்ட விதையே, தாங்களும் வேறு பல அறிஞரும் தளராது வழங்கி வந்த ஊக்கமெனும் நீரையும் போதனை யெனும் நல்லெருவையும் ஆதாரமாகக் கொண்டு முயற்சிச் செடியாய்த் தளிர்த்து, உழைப்புப் பெருமரமாய் உயர்ந்தோங்கி, உலகமெங்கணும் குலாபிமானத் தென்றலைப் பரப்பி வருகின்றதென்பதையும், முன்னேற்றமெனும் அதன் தீங்கனியை நாடியே நங்குல மக்களனைவரும் உழைக்கின்றன ரென்பதையும் அறியா மாந்தர் செங்குந்த உலகத்தி லுளரோ?

**அருங்குண அமிழ்தே! அமிழ்துறழுஞ் சுவையே!**

சிறந்த உருவு, பரந்த உணர்வு, கனிந்த அன்பு, நிறைந்த ஒழுக்கம் ஆகிய அருங்குணக் கனிகள் பல சேர்ந்த சுவைக் கட்டியாகிய தங்களது தீஞ்சுவையினை அனுபவித்து வரும் நாங்கள் இன்னும் பன்னெடுநாள் அதனை இடையறாது அனுபவிக்குமாறு நங்குலச் சோதரப் பெருமானை நோக்கி, "தங்களது பேரருளால் எங்கட்குக் கிடைத்த பேராசிரியர்க்கு அருளுக வளருமாயுள்! அருளுக வலிய தேகம்! அருளுக வாழ்க்கை வெற்றி! அருளுக வள்ளல் நின்தாள்! அருளுக அப்பெருனர் அருங்குணம் யாவும் சேர்ந்த அரியபேருருக் கொண்டென்ன அமையருட்குறுமின் தாமே" என அன்புடன் இறைஞ்சி நிற்கின்றோம். நமது குலநலனை நோக்கித் தான் படைத்த சிறியச் செம்மலின் சிறப்புறு செயல்களைக் கண்டு சிந்தை களித்திருக்கும் நங்குல நாயகன் எங்களது வேண்டுகோட்கு எளிதே இரங்குவன் என்பதில் ஐயமுண்டோ?

இங்ஙனம்:
தங்கள்பால் என்றுந் தளரா அன்பும் நன்றியுங் கொண்டுள்ள
தென்னிந்திய செங்குந்தர் நான்காவது சமூக மகாநாட்டு வரவேற்புச் சபையார்.

# சமூக மகாநாட்டுத் தலைவர்

### திரு. ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள்

# சொற்பொழிவு

## நன்றியறிதல்

பெருமக்களே ! அன்பர்களே !!

ஆன்ற அறிவும், அளவிலா ஆற்றலும், அன்பு கனிந்து ததும்பும் ஆர்வமும் நிறைந்த முத்தைய முதல்வரும் சபாபதி வள்ளலாரும் இசைந்து வகித்து மேம்படுத்திய இச்சமூக மகாநாட்டுத் தலைமைப் பதவியை, இவ்வாண்டு, அறிவிலும் ஆற்றலிலும், அநுபவத்திலும் வயதிலும், செல்வத்திலும் செல்வாக்கிலும் சின்னஞ் சிறியனாகிய என்னை வகிக்கப் பணித்த வரவேற்பு அன்பர்களது அன்பின் பெருக்கை யான் என்னென்றுரைப்பேன்! நமது சங்கமும் மித்திரனும் தோன்றிய நாள்தொட்டு அவர்களோடு யான் இடையறாது பழக நேர்ந்ததா லுண்டான வாஞ்சை மிகுதியினாலோ, குலப்பணியில் ஈடுபட்டுக் குல முன்னேற்றத்திற்கான சில துறைகளில் யான் இதுவரை இயற்ற நேர்ந்த சொற்ப தொண்டினுக்கோர் அரிய பரிசாகவோ, இப்பதவியினை அவர்கள் எனக்களிக்கத் தீர்மானித்திருக்கலாம். அதற்காக நான் அவர்கள்பால் மிக்க நன்றியறித லுடையவனாக இருக்கிறேன். எனினும், உண்மையைக் கூறுமிடத்து, நாடகமேடையில் வந்தாடும் பாத்திரங்களைத் திரை மறைவில் நின்றுகொண்டு ஆட்டிவைக்கும் சூத்திரதாரியைப் போன்று, நமது சமூக முன்னேற்ற நாடகத்தின் முக்கிய பாத்திரங்களை ஊக்கித் தூண்டி உற்சாகப்படுத்திப் பண்ணுறுத்திக்கொண்டு வருபவர்கள் நமது சபாபதி வள்ளலாரை மணிவிளக்காகக் கொண்ட தஞ்சை ஜில்லா வாசிகளே எனல் எவ்வகையிலும் பொருந்தும். ஆகவே, சூத்திரதாரியின் ஆஞ்ஞைப்படி ஒழுக வேண்டியது அவர் தேர்ந்தெடுத்துப் பழக்கிய பாத்திரத்தின் கடமை யாதலால், அப்பாத்திரத்தின் நிலைமையிலுள்ள யானும் எனக்கிட்டுள்ள இப்பணியை ஏற்று, அதை என் ஆற்றலுக் கிசைந்த வகையிலும், சூத்திரதாரி—வரவேற்புக் கழகத் தலைவர்—எனது தோழர் சபாபதி வள்ளலாரது தூண்டுதலையும் துணையையும் அப்போதைக் கப்போது கொண்டும், இயற்ற முன் வருகின்றேன்.

## சமூக இயக்கமும் தேசீய உணர்ச்சியும்

ஜாதி பேதங்களை மறந்து இந்தியாவிலுள்ள பல கோடி மக்களும் ஒரே சமூகத்தவரென ஐக்கியப்பட வேண்டிய இக்காலத்தில், ஜாதிகளுக்குளுள்ள வேற்றுமைகளை எடுத்துக் காட்டி ஸ்திரப்படுத்தவல்ல தனித்தனி ஜாதிச் சங்கங்களும், ஜாதிப் பத்திரிகைகளும், ஜாதி மகாநாடுகளும் தேசீய உணர்ச்சிக்குப் பேரிடைஞ்சல்களாக நிற்பதோடு, பிற்போக்கான எண்ணங்களையும் பரப்பித் தேச முன்னேற்றத்தின் கதியைக் குறைக்கின்றன வென்னும் அபிப்பிராயமுள்ள பலர் யான் நமது சங்கத் தொண்டுகளில் ஈடுபடுவதைக் குறித்து என்னைப் பழிப்பதுண்டு. ஆயினும் யான் அதைப் பழிப்புக்கிடமான செயலாக மதிக்கவில்லை. பிரான்சிலும் ரஷ்யாவிலும் வகுப்பு வேறுபாடுகளைக் களைவதற்கான சட்ட திட்டங்கள் ஏற்பட்டு அவற்றின் குடிகளிடையே சமத்துவமும் சகோதரத்துவமும் தோன்றியது போன்று, நம்நாட்டிலும் ஜாதி வேறுபாடுகள் அறவே ஒழியச் சட்ட திட்டங்கள் ஏற்படும் நாள் வரையில், நமது தேச முன்னேற்றத்தின் கதியைத் துரிதப்படுத்தவும், பிற்போக்கான எண்ணங்களைக் களையவும், ஜாதி



பேதங்களை மங்கச்செய்து எல்லா ஜாதியினரும் ஒத்த உரிமைகளையும், ஒத்த அறிவினையும், ஒத்த இலக்ஷியங்களையும் பெற்றுத் தேசீய உணர்ச்சியில் மேம்படுதற்கு வேண்டிய ஐக்கிய பந்தங்களைப் பூட்டித் தரவும், பரந்த நோக்கங்களை இயக்குஞ் சக்திகளாகக் கொண்ட ஜாதிச் சங்கங்களும், ஜாதிப் பத்திரிகைகளும், ஜாதி மகாநாடுகளுமே பெருந் துணைக்கருவிகளாக இருக்கும் என்பதே எனது துணிபு.

உயர்ந்த இலக்ஷியங்களின் தூண்டுதலைப் பெற்று ஒத்து ஒழுகுதல் சாலவும் சிறந்ததே. ஆயினும், அவற்றின் சக்தியைப் பெற்று இயங்கவேண்டிய அங்கங்கள் பலதிறப்பட்ட ஆற்றல்களைக் கொண்டுள்ளவைகளாக இருக்கும் சமயத்தில், ஒத்த வன்மை யடையுமாறு அவைகளைப் பண்ணுறுத்தாமல், அவ்வுயர்ந்த இலக்ஷியங்களைத் தாங்கக் கட்டாயப்படுத்துவோமாயின், நேற்றுத்தான் வந்து சிப்பாய் வேலையில் அமர்ந்தவனை இன்றே அமராட ஆஞ்ஞாபிப்பதைப் போலாகும். அமர்க்களத்திற் செவ்வனே போராடி, வெற்றி முரசு முழக்கி, வீர சிங்கங்களென விம்மிதமுற்று நடக்க வல்ல போர்வீரர்கள் அமர்க்களத்துக்குப் போவதற்கு முன்பு எவ்வளவுக்கெவ்வளவு பண்ணுறுத்திப் பழக்கப்படுத்தப்படுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு வெற்றி பெறுவது உறுதியாதல் போல, தேசத்தின் அங்கங்களாகிய சமூகங்களனைத்தும் இத்தகைய ஜாதிக் கூட்டங்களாலும் இயக்கங்களாலும் பண்ணுறுத்தப்பெறின், தேச முன்னேற்றப் பெரும் பேற்றை அடைவதற்கு அவை விரைவில் வன்மையுறும் என்பதில் ஐயமுண்டோ?

## சமூக இயக்கங்களுக் கிருக்கவேண்டிய இலக்ஷியங்கள்

ஜாதி இயக்கங்கள் பரந்த நோக்கங்களைக் கொண்டவைகளா யிருத்தல் நாட்டு முன்னேற்றத்துக்கு இன்றியமையாத தென்பதை முன்னமே குறிப்பிட்டுள்ளேன். 'நாங்கள் மேல் ஜாதியார்: நீங்கள் கீழ் மக்கள்; நாங்கள் இத்தகைய பண்டைப் பெருமையினைப் பெற்றவர்கள்: நீங்கள் நேற்று முளைத்தவர்கள்; எங்களுக்கே எல்லாச் செல்வாக்கும் இதுவரை இருந்தது, இனியும் இருத்தல் வேண்டும்: இதுவரை இருந்தவிடமும் தெரியாதிருந்த உங்களுக்கு இனிமட்டுமென்ன செல்வாக்கு வேண்டும்?' என வம்பு வழக்கிட்டு வீண் விதண்டாவாதங்கள் தொடுத்து ஜாதிகளுக்கிடையே பகைமை, பொறாமை, அழும்பு, சுயநலம் முதலியவற்றைக் கிளப்பிவிட்டு, ஏழேழு தலைமுறைகளுக்கும் நீடித்து நிற்கும் ஜாதிப் போராட்டங்களையும் சச்சரவுகளையும் பிறப்பிப்பது எந்தச் சமூக இயக்கத்துக்கும் பெருமையைத் தருவதல்ல. அந்நெறியில் உழைக்க ஏதேனுமொரு ஜாதி யியக்கந் தோன்றுமேல், அதனால் அளவிட முடியாத இடையூறுகளும் இன்னல்களும் தோன்றுவது திண்ணமே. அவ்வாறின்றி, 'நாங்கள் உங்களுக்குத் தாழ்ந்தவராகோம்: நீங்களும் எங்களுக்குத் தாழ்ந்தவரென இகழோம்; எங்களுக்குப் புராணப் பெருமையோ, சரித்திரப் பெருமையோ, இவ்விரண்டினுக்கும் மேலான ஒழுக்கப் பெருமையோ இருக்குமேல், அதை எங்கள் மட்டும் எடுத்துக்காட்டாக வைத்துக்கொண்டு மேலும் மேலும் மேம்பாடடைய முயல்வது எமது நோக்கமாக இருக்குமே யொழிய, அதனால் கர்வங்கொண்டு மற்றையோரைப் பழிப்பதோ இழிவாக நடத்துவதோ எமது செயலாகாது: அத்தகைய பெருமை தமக்கிருப்பதாக மதித்து வேறு எவரேனும் எமது சுயமதிப்பைக் குறைக்க முன் வருவரேல், அதையும் நாங்கள் பொறோம்; நாட்டில் குடிகளனைவரும் ஒத்த உரிமையோடு துய்த்தின்புற வேண்டிய சுதந்திரங்களும், பதவிகளும், வசதிகளும் போதியவளவு நாங்களும் அடைந்து நலமுறவேண்டும்: நீங்களும் அவற்றை அடைவதை நாங்கள் தடுக்கப் போவதில்லை: இருவரும் அவற்றை அடைவதில் சகோதரரைப் போன்று தோளோடு தோள் நின்று ஒத்துழைக்க வேண்டிய சந்தர்ப்பமும் அவசியமும்

ஏற்படின். மிக்க மகிழ்ச்சியுடன் ஒத்துழைத்து அதனுல் எய்தக்கூடிய நட்பின் தொடர்பையும் சகோதரபாவத்தையும் இருபாலாரும் பொன்னே போற் போற்றி இன்புறுவோம்' எனத் தமது முன்னேற்றத்தினை நாடும் வகையில் மற்ற வகுப்பினர்க்கு ஊறு செய்யாமலும், அவர்களைத் தாழ்த்திக் கூருமலும், அவர்களும் தம்மைத் தாழ்த்திக் கூறச் சகியாமலும், சமயம் நேரும்போதெல்லாம் பல காரியங்களில் அவர்களோடு ஒத்துழைத்தும் நடந்தப் பெற்றுவரும் சமூக இயக்கங்களால் தேச நன்மைக்கும் நாட்டுக் குடிகளின் முன்னேற்றத்துக்கும் தடங்கல் ஏற்படும் என்று எவரோ கூறத் துணிவர்? இத்தகைய சீரிய இலக்ஷியங்களையும் நடுநோக்கினையுங் கொண்ட சமூக இயக்கங்கள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகத் தோன்றித் தொண்டாற்றி வருகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு துரிதமாக நமது தேச முன்னேற்றம் யாதொரு பங்கமுமின்றிச் சித்திபெறும் என்பதே அறிஞர்களது கொள்கையாகும்.

## நமது சமூக இயக்கம்

நமது சமூக இயக்கமும் இச்சிறந்த நெறியில் தொண்டாற்றி வருவதேயாம். அது தோன்றிய இவ்வேழு வருஷங்களுக்குள், அதற்கு முன்னும் பின்னும் தோன்றித் துலங்கிய எந்தச் சமூக இயக்கமும் சாதிக்காத பல அரிய பெரிய காரியங்களை அது சாதித்துள்ளது. அது நம்மவர் முதல் மகாநாட்டினை எவரும் பிரமித்து ஆச்சரியப்படக்கூடிய விமரிசைகளோடு ஈரோட்டில் நடத்தி நம்மவர் கண்ணியத்தினை உலகினுக்கு எடுத்துக் காட்டியது. அதன் பிறகு இரண்டு மகாநாடுகள் நடந்து இப்போது நான்காவது மகாநாடு கூடியிருக்கிறது. இவற்றுல் நம்மவரிடையே எத்துணை ஒற்றுமை யுணர்ச்சியும், எவ்வகைச் சீர்திருத்த முயற்சியும், எவ்வளவு முன்னேற்றக் கிளர்ச்சியும் தோன்றியுள்ளன வென்பது எவரும் அறிந்ததே.

## நமது இயக்கத்தின் எக்காளக்காரன் 'செங்குந்த மித்திரன்'

நமது இயக்கத்தின் எக்காளக்காரனுகிய 'செங்குந்த மித்திரன்' இந்த ஏழு வருஷ காலமாகப் புரிந்துவரும் தொண்டுகள் எட்டிலடங்குபவையா? மூலைமுடுக்குகளிலிருந்தவர்களையும் கிணற்றுத் தவளைகளாக இருந்தவர்களையும் தூண்டித் தட்டிவிட்டுக் குலமுன்னேற்றப் பந்தயத்தில் முதற் குதிரைகளாக வரவேண்டும் என்னும் ஆர்வத்தோடு கதிகொடு நடக்கச் செய்தவன் யார்? தென் ஆபிரிகா செங்குந்தர்களையும் இரங்கூன் சிங்கப்பூர் செங்குந்தர்களையும் யாழ்ப்பாணத்துச் செங்குந்தர்களையும் தொண்டைநாட்டுச் செங்குந்தர்களோடும் சோழநாட்டுச் செங்குந்தர்களோடும் பாண்டிநாட்டுச் செங்குந்தர்களோடும் சேரநாட்டுச் செங்குந்தர்களோடும் கொங்கு நாட்டுச் செங்குந்தர்களோடும் ஐக்கியப்படுத்தி, 'நாம் எல்லோரும் ஒரு மரபைச் சேர்ந்தவர்கள்; ஓரிடத்திலிருந்து பரவிப் பிரிந்தவர்கள்; ஒரு தாயின் மக்கள்' என்னும் உண்மையை யுணர்ந்து சகோதரபாவத்துடன் அந்நியோந்நியமாக நடந்துகொள்ளச் செய்தவன் யார்? கல்வி யறிவின்றிப் பேதைமையால் மருண்டு தெளிவும் தைரியமும் அற்றுக் கிடந்த நம்மவர் பலருக்கு, அஞ்ஞானத்தாலுண்டான இருட்டிரையை விலக்கி, உலகானுபவத்தையும், பொது அறிவையும், அவற்றுல் தோன்றும் தெளிவையும் தைரியத்தையும் ஊட்டியவன் யார்? 'தேர்தல்களில் வெற்றிபெறல் வேண்டும்; நகர பரிபாலன சபைகள் தாலுகா போர்டுகள் முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில் இடம்பெறல் வேண்டும்; நம்மவர்க்குச் செல்வாக்கு மிக வேண்டும்; நம்மவர் நாட்டுச் சேவையிலும் குலச் சேவையிலும் முனைந்து நிற்கவேண்டும்'—என்னும் ஆவல்களைக் கிளப்பி, அவற்றில் நம்மவர் பெரும்பாலாரைச் சித்திபெறவுஞ் செய்தவன் யார்? 'கட்சிகள் ஒழியவேண்டும்; ஒற்றுமை பெருகவேண்டும்; மௌடீகந் தொலைய வேண்டும்; நம்மவர் மேன்மை யடைய வேண்டும்' என்று மாதந்தோறும் எக்காளம் பிடித்துச் சின்ன மொலித்துச் சங்கநாதஞ் செய்துவருபவன் யார்? நமது குலமித்திரனே யன்றோ?



## நமது தலைச்சங்கம்

அவனை மாதந்தோறும் ஊர் ஊராகப் பயணப்படுத்தி யனுப்பும் பொறுப்பினை ஏற்றுள்ள நமது தலைச்சங்கமாகிய 'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஊக்க மிகுந்த உழைப்பினுக்குந்தான் ஒப்புண்டோ? நூற்றுக்கணக்கான கிளைச்சங்கங்களைத் தென்னிந்தியாவிலும் இந்தியாவிற்கு வெளியிலும் நிறுவி, அவற்றை யெல்லாம் ஓரியக்கத்தின் அங்கங்களாகப் பிணித்துக் கட்டி, சமூகப் பணியினைப் பிரசார வாயிலாகச் செய்து வரும் நமது தலைச்சங்கத்தைப் போன்று, எடுத்த காரியத்தில் முனைந்து ஒரே நிதானத்தோடு உழைக்கும் ஜாதிச் சங்கம் வேறொன்றுமில்லை யெனலாம். மித்திரனை நடத்துவதும் இச்சங்கமே; கிளைச்சங்கங்களை நிறுவுவதும் இச்சங்கமே; இடைவிடாத சீர்திருத்தப் பிரசாரஞ் செய்வது மிச்சங்கமே; மகாநாடுகளைக் கூட்டுவது மிச்சங்கமே; கல்விநிதியை நிறுவியது மிச்சங்கமே; அரசாங்கத்தினரோடு மன்றாடுவது மிச்சங்கமே; இச்சங்கமே நமது இயக்கத்தின் உயிர்நிலை. ஏழு வருஷங்களுக்கு முன் நம்மவரிடையே எவ்வளவு உறக்கமிருந்த தென்பதையும், அதற்குப்பின் இச்சங்கம் நிறுவப்பெற்ற நாள் தொட்டு எந்தகைய விழிப்பும் கிளர்ச்சியும் தோன்றி, எத்தனைத் துறைகளில் முன்னேற்ற ஆர்வமும் முயற்சியும் சித்தியும் தோன்றியுள்ளவை வென்பதையும், கூர்ந்து நிதானித்து நினைத்துப் பார்ப்போர்க்கு இச்சங்கத்தால் ஏற்பட்டுள்ள நன்மைகள் புலப்படாமலிரா.

## நமது கல்விநிதி

கல்விநிதியினைத் திரட்டி வைத்த பெருமை யொன்று மட்டுமே இதை என்றென்றும் நம்மவர் நன்றியறிதலுக்கும் நல்லெண்ணங்களுக்கும் பாத்திரமாக்கும். அறிவும் ஆற்றலும் படிப்பில் ஆர்வமு மிக்குள்ளவர்களா யிருந்தும், உயர்தரப் படிப்பின் வாயிலையும் எட்டிப் பார்ப்பதற்கு ஏதுவில்லாதிருந்த எத்தனை ஏழைச் செங்குந்த இளைஞர்கள் நமது கல்விநிதியினின்று உபகாரச் சம்பளம் பெற்றுக் கல்வி பயின்று மேன்மை யடைந்து வருகின்றனர்! நாளடைவில் அவர்களுள் ஒவ்வொருவரும் அறிவு விளக்கம் பெற்றுத் தங்களைச் சேர்ந்தவர்களிடையே அறிவுச் சுடர் கொளுத்தி வைப்பர் என்பது வெள்ளிடை விலங்கலன்றோ?

## இனிச் சாதிக்க வேண்டியவை

'இத்தனையுஞ் சாதித்துவிட்ட நமது இயக்கம் இனி என்ன செய்ய விருக்கின்றது?' எனப் பலர் வினவலாம். ஆயினும், 'இனி யொன்றும் செய்வதற்கில்லை; செய்ய வேண்டியவை யனைத்தும் செய்து முடித்துவிட்டோம்; நாம் இப்போது நமது இலக்ஷியங்களின் பரிபூரண சித்தியைப் பெற்று மேன்மை யடைந்துவிட்டோம்' என்று நாம் சொல்ல இயலுமா? இதுவரை நாம் சாதித்தவையால் நமது முன்னேற்ற இயக்கத்தின் அடிப்படையான அஸ்திவாரக் கற்களை மட்டும் நாட்டி வைத்துள்ளதாகச் சொல்லலாமே யொழிய, அதன்மீது கட்ட வேண்டிய கட்டடத்தையும் நாம் கட்டி முடித்துவிட்டதாகச் சொல்வதற்கில்லை. மேல் கட்டடம் இன்னும் எழும்ப வேண்டி யிருக்கிறது: அதற்குரிய அமைப்பாளர் வேண்டும்; அனுகரணங்கள் வேண்டும்; கருவிகள் வேண்டும்; உழைப்பாளர் வேண்டும்.

## சில மேலான இலக்ஷியங்கள்

அம் மேற்கட்டடம் எவ்வகையில் அமைந்தாற் பெற்றால் நம்மவர்க்கு நல முண்டாகும் என்னும் கேள்விக்குப் பதிலளிக்கு முகத்தான் எனக்கு முன் இந்த இடத்திலிருந்து தலைமைப் பேருரைகள் ஆற்றிய நமது குலப்பெரியார்கள், நம்மவர் அனைவரும் மனதில் என்றென்றும் பதிய வைத்துக்கொண் டொழுக வேண்டிய பல அருமையான இலக்ஷியங்களையும் படிப்பினைகளையும், தருமங்களையும் கடமைகளையும் எடுத்துக் காட்டியுள்ளனர். அவற்றை விட்டுப் புதிதாக யான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஒழுக்கமும் ஒற்றுமையும், கல்வியும் உலகானுபவமும், உழைப்பும் வன்மையும் முன்னேற அவாவும் எந்த மக்கட் கூட்டத்திலிருக்கும் இன்றியமையாதவையாம். ஒழுக்கந் தவறி, ஒற்றுமை யற்று, எழுத்து வாசனை சிறிதுமின்றி உலகானுபவ முதிராத பேதையராய்ச் சோம்பித் திறனற்றுத் திரிபவர் பகுத்தறிவில்லா விலங்குகளினுங் கடையராய் இழிவடைந் தொழிவர். அத்தகைய மக்கள், நவநவமான நாகரிக மேம்பாடுகளை யடைய உலகெங்கும் தற்போது நிகழ்ந்து வரும் முன்னேற்றப் போராட்டத்தின் முன்னணிகளில் நின்று முனைந்து ஜெயம்பெற ஆற்றலும் பெறார், அருகரும் ஆகார். ஆகவே, பெருமக்களே! அன்பர்களே! நமது சமூகம் முன்னேற வேண்டுமாயின்—நாகரிக மேம்பாடுகளை யடைந்து மக்கட் கூட்டத்தின் முன் வரிசைகளில் நிற்கவேண்டுமாயின்—ஒழுக்க முதல் வன்மையீறாக மேற்குறிப்பிட்டுள்ள இலக்ஷியங்களைக் கடைப்பிடித் தொழுக நம்மவர் ஒவ்வொருவரும் இடைவிடாது முயலல் வேண்டும்; அம்முயற்சியில் அவர்களுக்குத் தூண்டுதலையும் துலக்கத்தினையும், ஊக்கத்தையும் உற்சாகத்தையும், உண்மை அவாவினையும் ஆர்வத்தினையும் அளிக்க வல்ல முறைகளையும் முகாந்திரங்களையும் அப்போதைக் கப்போது கையாண்டு வருவதில் நமது குல அறிஞர்கள் கண்ணுங் கருத்துமா யிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சியும் இத்தகைய தூண்டுதலும் இல்லையாயின் எந்தச் சமூகமும் முன்னேறுதல் இயலாது.

## சில குறைபாடுகள்

'அறுமுகப் பெருமான் உடன் தோன்றல்களாகிய நவவீர சிகாமணிகளின் சந்ததிகளுக்கு ஒழுக்கத்தைப் பற்றியும் வன்மையைப் பற்றியும் மேற்கூறிய இதர இலக்ஷியங்களைப் பற்றியும் கூறுவது யாதுளது? அவை அவர்களது பரம்பரைப் பண்புகளாகவும் பிறவிக் குணங்களாகவும் அமைந்திருத்தல் வேண்டாவோ?' என்போருக்குப் பதிலாக நம்மவர்களின் தற்கால நிலைமையைத்தான் எடுத்துக் காட்டவேண்டும். சுயநலம், பொறாமை, அழும்பு, வீண்பெருமை, சுசியின்மை முதலிய தீக்குணங்கள் நம்மவர்களுள் சிலரிடமேனும் இருக்கும் வரையிலும்—கட்சிப் பிளவுகள், கட்சி வைராக்கியங்கள், கட்சி வழக்குகள் நம்மவர் கிராமங்களிலிருந்து தொலையும் வரையிலும்—நூற்றுக்கு எண்மரும் பதின்மருமே படித்தவர்களெனச் சொல்வதற்குப் பதிலாக நம்மவருள் நூற்றுக்கு நூறுபேர் படித்தவர்களெனச் சொல்லக்கூடிய நிலை வரும்வரையிலும்—உலக ஞானமின்றி, 'இராமனாண்டால் என்ன இராவணனாண்டால் என்ன' என்னும் மன நிலையோடு உலக வியவகாரங்களில் தலையிடாது, பச்சிலைகளை மென்று தின்று எச்சமிட்டு மாளும் பேதைப் புழுக்களைப் போன்றவர்கள் சிலரேனும் நம்மவருள் எங்கேனும் மூலைமுடுக்குகளில் இருந்து வரும் வரையிலும்—பல தொழில் துறைகளிலும் வியாபார முயற்சிகளிலும் புகுந்து மும்முரமாக உழைத்து வெற்றியும் செல்வமும் செல்வாக்கும் பெறக்கூடியவர்கள் பல்லாயிரக்கணக்காக நம்மவரிடையே தோன்றும் வரையிலும்—சட்டையிட்ட தொப்பிதாரியைக் கண்டோ, செந்தலைச் சேவகனைக் கண்டோ ஏழைகளை மிரட்டி அதிகாரம் பண்ணி வயிறு வளர்க்கும் அற்பர்களைக் கண்டோ நடுங்கி யொதுங்கிப் பதுங்கி வாழும் ஒருவனேனும் நம்மவருள் இருக்கும் வரையிலும்—நாம் மேற்கூறிய சிறந்த குணங்களை நம்மவரிடையே மேலும் மேலும் வளர்ப்பதற்கான பல வழிகளில் மிகவுந் தீவிரமாக உழைக்காமல், எல்லாவற்றையும் சாதித்துவிட்டதாக எண்ணிக் கை பொத்திச் செயலற்றிருக்கமுடியாது.



இவ்வழிகளிற் பலவற்றை, எனக்குமுன் இச்சமூக மகாநாட்டுத் தலைமையினை வகித்த பெரியார்களும், நம்மவர்களது வாலிபர் வர்த்தகர் மகாநாடுகளில் தலைமைபூண்ட அறிஞர்களும் விரிவாக எடுத்துக் கூறியிருக்கின்றனர்; இன்று இதோடு நடக்கவிருக்கும் வாலிபர் வர்த்தகர் மகாநாடுகளில் தலைமை வகிக்கப் போகும் எனது நண்பர்களும் அவற்றைப்பற்றிக் கூறுவர். ஆதலின், நான் அவைகளனைத்தினையுந் திருப்பிக் கூறி அன்பர்களைச் சலிக்க வைக்காது, நமது சமூக சீர்திருத்த முயற்சியில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய இரண்டொரு விஷயங்களை மட்டும் கூற விரும்புகிறேன்.

## கட்சிப் பிரிவுகள்

உலகெங்கும் தேசியக் கிளர்ச்சிகள் ஒரு புறமும் மக்கட் கூட்டங்களிடையே பரஸ்பர உணர்ச்சியினைப் பரப்புதற்கான இயக்கங்கள் மற்றொரு புறமும் தோன்றி உரம் பெற்று மக்களிடையே நாகரிக பந்தங்களைப் பலப்படுத்திக்கொண்டு வரும் இந்நாட்களில், நமது சமூகத்தினர் மட்டும், தெருக்கிரண்டு கட்சிகளாகப் பிளவுபட்டுத் தம்மில் ஒற்றுமை யின்றி, ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்துக்கொண்டு, மற்றவரை அழிப்பதோடு தாமும் நாசமுற்றுப் போவது எவ்வளவு அறிவீனம்! ஒரு கிராமத்தில் கட்சி யிருப்பதாகக் கேள்விப்பட்டால் அங்கே நம்மவர் இருப்பதாக உடனே தீர்மானித்துவிடலாம். நம்மவர் கட்சிகளைக் களைந்து ஒன்றுபட்டால், கச்சேரி நீதிபதிகளுக்கு வேலை குறைந்து, அதனால் துரைத்தனத்தார்க்குச் செலவு சுருங்கிக் குடிகளுக்கு வரிப்பளுவுஞ் சிறிது இறங்கும்; நியாயவாதிகளுக்கு வரும்படி குறையும்; எத்தனையோ கோயில்களும் மடாலயங்களும் குட்டிச்சுவர்களாக ஊரின் அழகைக் கெடுத்துக்கொண்டு நிற்காமல் மங்களகரமான பக்தி நிலயங்களாகவும் அருள் நிலயங்களாகவும், அறிவுக் கூடங்களாகவும் விருந்தில்லங்களாகவும் விளங்கும்; கட்சி வழக்குகளுக்கும், அவைகளைத் தூண்டிவிட்டு வயிறு வளர்க்கும் அயோக்கியர்கள் சாப்பிடுவதற்கும் வரி கொடுத்துக் கொடுத்து வறிஞர்களாகிய எத்தனையோ யோக்கியர்களின் குடும்பங்கள் சீர்பெற்றுச் செழுமையுறும். நாகரிக மிக்க மக்களுள், பெரும்பான்மையோரது அபிப்பிராயத்தை ஏந்தி, அவர்களுக்கு விட்டுக் கொடுத்துச் சிறுபான்மையோர் நடப்பது எங்குஞ் சகஜமாக இருக்கிறது; சீர்மை மிக்க துரைத்தனங்கள் நடப்பதும் இவ்வாறே. ஆனால், நம்மவருள்ளோ, சுயநலத்தை யொட்டியோ மூர்க்கத்தனத்தாலோ மௌடீகத்தாலோ எவனாவது ஒருவன் வம்பு பேச வருவானானால் அவனைத் தலைமையாகக் கொண்டு ஒரு கட்சி பிறந்துவிடுகிறது. பிறந்ததும், அது, தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் எனப் பிடிவாதங்கொண்டு, வருஷக் கணக்காகவும் தலைமுறைகள் கணக்காகவும் நீடித்து, வேறு சில குட்டிக் கட்சிகளையும் பெற்றெடுத்துத் துணைப் பலமும், தொகைப் பலமும், அறிவும் நடுநிலைமையு மற்ற முரட்டு மர்க்கடப் பிடியின் பலமுங்கொண்டு ஓங்கி, நாடு சிரிக்கவும் நம்மவர் நாணுறவும் வளர்கின்றது. அந்தோ! இந்த வெட்கக் கேட்டை நம்மவர் இன்னும் உணராதிருப்பது எத்துணைப் பரிதபிக்கத்தக்க விஷயம்! இந்தச் சீரழிக்கும் அவமானத்தைத் துடைத்து நம்மவரிடையே நல்லுணர்ச்சிகளையும் விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மையையும் ஒற்றுமை உணர்ச்சியையும் வளர்ப்பதற்கான வழிகளைத்

தேடுதல் கிராமாந்தரங்களிலுள்ள நம் மக்களது தலைவர்களின் அருங்கடமையன்றோ? கட்சிகளால் ஏற்படும் ஒற்றுமைக்குறைவு சமூக முன்னேற்ற முயற்சிக்கு எவ்வளவு இடைஞ்சலாக இருக்கிறது என்பது அம்முயற்சியில் ஈடுபடுவோர்க்கு விளங்காமலிராது. ஆகவே, இவ்விடைஞ்சலை அகற்றிய பிறகன்றோ அவர்களது முயற்சிகள் முழுப் பலனை அடையக்கூடும்?

## ஒற்றுமை விவாகங்கள்

ஒற்றுமைக்கு ஊறாக நிற்பவைகளை விலக்குவதோடு அதற்குத் துணையானவைகளைப் போற்றி வளர்ப்பதும் சமூக முன்னேற்றச் சீர்திருத்தங்களைச் செய்ய ஈடுபடும் குலாபிமானிகளின் கடமையாகும். இருப்புப் பாதை தந்தி தபால் மோடார்பஸ் வசதிகள் தோன்றுவதற்கு முன் அத்தகைய வசதிக்குறைவினால் கொள்ளல் கொடுத்தல் முதலியவைகளை யொட்டித் தோன்றிய வழக்க முறைகள் இன்றைக்கும் கையாளப்படல் வேண்டுமெனக் கூறல், ஆடை நெய்யக் கற்றுக்கொண்டதன்முன் எவ்வாறு மக்கள் நிர்வாணமாகவோ இலைகளையும் மரப்பட்டைகளையும் அணிந்துகொண்டோ திரிந்து வந்தார்களோ அவ்வாறே இன்றும் இருத்தல் வேண்டும் எனச் சொல்வது போன்றுளது. போக்கு வரவு வசதிகளற்ற காலத்தில் அவ்வசதிகளின்மையால் உள்ளூரிலேயே கொள்ளல் கொடுத்தல் வேண்டும் எனத் தோன்றிய வழக்கமே அவ்வசதிகள் பன்மடங்கு பெருகியுள்ள இந்நாட்களிலும் அனுசரிக்கப்பெறல் வேண்டுமெனல் எவ்வளவு பிற்போக்கான அபிப்பிராயம்! சொந்தத்திலேயே கொண்டு கொடுத்தல் குலவிருத்திக்கு நல்லதல்ல என்னும் உண்மையினை உயிர்நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மேதாவிகள் வற்புறுத்துகின்றனர். ஆரியர்கள் இவ்வுண்மையினை அனுசரித்தே ஒரே கோத்திரத்தில் கொண்டு கொடுப்பதில்லை. நம்மவருள்ளும் இவ்வுண்மையானது உணரப்படல் வேண்டும்—ஓரிடத்திலுள்ளோர்க்குத் தம்மைச் சேர்ந்தவர்களைத் தவிர மற்றையோரனைவரும் தாழ்ந்தவர்களே என்னும் அறிவற்ற, அன்பற்ற, ஆதாரமற்ற மூட அபிப்பிராயம் நம்மவர் ஒற்றுமைக்குப் பங்கம் விளைத்துக்கொண்டு வருவதை எல்லோரும் உணர்ந்து விலக்க வழிதேட வேண்டும்—என்னும் சீரிய நோக்கங்களை அடிப்படைகளாகக் கொண்டே சென்ற மூன்று மகாநாடுகளிலும் ஒற்றுமை விவாகங்களைப்பற்றித் தீர்மானங்கள் இயற்றி வைத்தோம். ஆயினும், அவற்றைப் பின்பற்றி நடந்தவர்கள் வெகு சிலரே. சீர்திருத்த முயற்சியில் ஒரு சமூகத்தினரை நல்லதை அங்கீகரிக்க வைப்பதில் எவ்வளவுக் கெவ்வளவு சிரமமும் தாமதமும் தோன்றுகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் பிற்போக்கானவர்கள் என்பது புலனாகாமற் போகாது. ஆகவே, இத்துறையில் நம்மவர்களுக்கு வழிகாட்டிகளாகப் பல பிரமுகர்கள் முன்வரல் வேண்டும். அவர்களது முன் மாதிரியால் ஏற்படும் அறிவு விளக்கமும் தைரியப்பெருக்கமுமே, நம்மவர் மனதில் ஆழ வேரூன்றியுள்ள பிற்போக்கான பழைய அபிப்பிராயங்களையும் பழக்க வழக்கங்களையும் களைந்தெறிந்து, முற்போக்கான எண்ணங்களையும் நோக்கங்களையுந் துளிர்க்கச் செய்து, அவற்றின் நிறைவேற்றத்தாலுண்டாகும் பெரும் பயனாகிய தீங்கனியையும் நல்குமெனத் திடமாகக் கூறலாம்.

## பெண்கள் நிலை

எந்தச் சீர்திருத்த நோக்கமும் முன்னேற்ற முயற்சியும் விரைவில் அங்கீகரிக்கப்பெற்று நிறைவேறுதற்கு நமது பெண் மக்கள் அவற்றின் அவசியத்தையும் அநுகூலங்களையும் அறிய வல்லவர்களா யிருந்தால்தான் துரிதமாக வழியேற்படும். நம்மினத்துப் பெண் மக்களுள் பெரும்பான்மையோருக்கு உலகஞானமென்பது ஒரு சிறிதுமில்லை; அதை அவர்களுக்கு ஊட்ட வழிதேட வேண்டுமென்



னும் ஆர்வமும் ஆண் மக்களிடையே இல்லை. எத்தனையோ தனிகர்கள்—செல்வாக்கு மிக்க பிரமுகர்கள்—தங்கள் வீட்டுப் பெண்களை வீட்டு வேலைகளைச் செய்து வரும் ஏவலாளர்களாய்ப் பழக்கி மகிழ்கிறார்களே யொழிய, அவர்களுக்குக் கல்வியறிவினையும், உலகஞானத்தையும், சீர்திருத்தங்களில் ஆர்வத்தினையும் புகுத்தி மேன்மை யடையச் செய்கிறார்களில்லை. இதனால் அவர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் நேரும் கஷ்ட நஷ்டங்கள் கணக்கிலடங்கா. இம்மகாநாட்டோடு பெண்மக்கள் மகாநாடொன்றினையுங்கூட்ட வேண்டுமென விரும்பிய அன்பர்களுக்கு வரவேற்புச் சபையினர் தமது ஜில்லாவில் அப்பொறுப்பினை ஏற்று நிர்வகிக்கக்கூடிய ஆற்றலுள்ள பெண்மணிகளில்லை என்று மனவருத்தத்துடன் அறிவித்துள்ளனர். இது எவ்வளவு ஏழ்மையான நிலை! இலக்ஷக்கணக்கான பணத்தினை முதலாக வைத்துச் சென்னை இராஜதானியிலும் வெளிநாடுகளிலும் பிரபல வியாபாரம் நடத்திக்கொண்டு செழுமைமிக்க தஞ்சை ஜில்லாவில் மிராசுதாரர்களா யுள்ளவர்கள் தங்கள் பெண்மணிகள் வெளியூர்களிலிருந்து ஒரு மகாநாட்டுக்கு வரும் பெண்மக்களை வரவேற்று உபசரிக்கு மாற்றலும் பெறாதவர்களா யிருக்கிறார்கள் எனப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவார்களானால், அதனினும் ஏழ்மை நிலையுண்டோ? பெண் கல்விக்குச் சகல வசதிகளும் ஏற்பட்டுள்ள இக்காலத்தும் இவ்வேழ்மைநிலை நீடித்திருக்குமேல் நமது குல முன்னேற்றக் கிளர்ச்சி வெறுங் கனவாகவே நிற்கும்.

## வாலிபர்

பெண்கள் துணையோடு வாலிபர்களது ஊக்கமும் எவ்வகை முன்னேற்ற இயக்கத்துக்கும் அத்தியாவசியமாகும். எம்முயற்சியிலும், வாலிப உற்சாகமும் வாலிப ஆர்வமும் ஊற்றெடுத்துப் பொங்கித் ததும்பி வழியுமானால், அதனால் திரண்டெழுந்து வரும் வெள்ளப் பெருக்கினைத் தடுத்து மடக்குவது இயலாது. அவ்வெள்ளத்துக்குத் தடையாக வழிமறித்து நிற்கும் அணைத்தும் அதன் வேகத்தால் உடைந்து சிதறும்; அதன் வழியைத் தூர்த்து நெடுநாட்களாகக் குவிந்து கிடக்கும் குப்பையும் செத்தையும் இருந்தவிடந் தெரியாது விலக்கப்பெறும்; ஆற்றிடையே செல்லும் பிரவாகத்துக்குப் போதிய இடமின்றிக் கரைகள் நெருங்கி நிற்குமேல், அவை மோதுண்டு தாக்கப்பட்டு உடைந்து சரியும். வாலிபர் சாதிக்க முடியாதது உலகில் எதுவுமில்லை எனலாம். எனவே, நமது குலமுன்னேற்றக் கிளர்ச்சியில் வாலிபர்கள் ஆற்றவல்ல பணிகள் பல விருக்கின்றன. அவற்றை யெல்லாம் கூறவேண்டிய பொறுப்பினை இன்று எனது நண்பர்—செந்தமிழ்ப் புலவர்—திருவாளர் பன்னிருகையார் ஏற்றுள்ளாராதலால், நான் அவைகளைக் குறிப்பிடுதலும் மிகையாகும். அப்பணிகளின் உண்மைத் தத்துவங்களை உணர்ந்து, அவற்றை ஒழுங்காக நடத்துவதற்கேற்ற கல்வி யறிவையும், மனோதிடத்தையும், உடல் வன்மையையும், பணிப் பயிற்சியையும், புதிய கருத்துக்களைக் கிரகித்து அவற்றின் அருமை பெருமைகளை உணரவல்ல ஆற்றலையும் மனோ விசாலத்தையும் நமது வாலிபர்கள் பெறுவதற்கான சௌகரியங்களை அவர்களுக்கு அமைத்துத் தரல் ஆன்றோர் கடன் என்பதை மட்டும் இங்கு வற்புறுத்த விரும்புகிறேன்.

## தொழில்

'வயிற்றுக்குக் கஞ்சியில்லை, ஊருக்கு உழைக்க வேண்டுமாம்!" என்னும் மெல்லிய குரலொன்று ஒரு மூலையிலிருந்து கேட்கிறது. சீர்திருத்தக்காரர்களும் முன்னேற்றத் தொண்டர்களும் இந்நிலையை மிக நுணுக்கமாக ஆராய்தல் வேண்டும்; ஆராய்வதோடு நில்லாது அதை மாற்றவல்ல வழிகளை உடனே தேடுதல் வேண்டும். நாகரிகத்தின் ஆரம்பத்தில் அவரவர்கள் செய்து வந்த தொழில்களை

பொட்டு வகுப்புக்களும் ஜாதிகளும் தோன்றின. அக்காலம் கைத்தொழில்களைக் கற்றுக் கொடுக்கப் பள்ளிக்கூடங்களில்லை. 'குலவித்தை கற்றது பாதி, கல்லாதது பாதி' எனவும், 'மகனறிவு தந்தையறிவு' எனவும், கைத்தொழில்களை மேற்கொண்ட குடும்பங்களில், வாழையடி வாழையாக, தலைமுறை தலைமுறைகளாக, அத்தொழிற்றிறன் விளங்கிக்கொண்டு வந்தது. அதனால், ஒவ்வொரு தொழிலும் ஒரு வகுப்பினராலேயே வளர்க்கப்பெற்று, அதில் அவர்களுக்கு யாதொரு போட்டியு மில்லா திருந்தது. நாளாக ஆக, ஜனத்தொகை மேலிட்டால், சில குடும்பங்களே செய்துவந்த தொழில் பல குடும்பத்தினராலும் பல வகுப்பினராலும் செய்யப்பட நேர்ந்ததோடு, கைத்திறனால் மட்டும் நடத்துவந்த தொழில்கள் இயந்திர உதவியால் நடைபெறவும் தொடங்கின. இதுவே நமது மூதாதையர் நெடுங்காலமாகச் செய்துவந்த நெசவுத் தொழிலில் நம்மவர்க்கு இப்போது ஊதியமில்லாமற் போனதற்கு முதன்மையான காரணம். இந்நிலையில் புதிய தொழிற்றுறைகளில் இறங்கிப் புதிய இலக்ஷியங்களையும், பயிற்சிகளையும், முறைகளையும் மேற்கொண்டு உழைத்து முன்னேறி வர முயலுதலே நம்மவர் உய்வதற்கு வழியாம். அவ்வழியைத் தேடாது, அல்லும் பகலும் ஓய்வு சாய்வின்றி நெய்தும் நாளுக்கு காலணா எஞ்சுவது அபூர்வமாயிருக்கின்றதே என்று தினமும் மனம் நொந்து, நெசவுத் தொழிலையே தமது வாழ்க்கைக் கடலைக் கடக்க ஒரு நிலையான தெப்பமாக வைத்துக்கொண்டு வறுமையுற்று, வாழ்க்கையில் சலிப்புண்டு துன்பமடைந்து வருவோர் செய்கை எட்டுப் பேர் ஏறிச் செல்லக்கூடிய படகில் எண்பது பேர் ஏறிச் செல்ல முயன்று படகினைக் கவிழ்த்துத் தாமும் வெள்ளத்தில் மூழ்கித் தவிப்போரது செய்கையை ஒக்கும்.

இவ்விஷயத்தைக் குறித்து எனது நண்பர் வர்த்தகர் மகாநாட்டுத் தலைவர், கோவைப் பிரமுகர், திருவாளர் செங்கோட்டையா முதலியார் அவர்கள் மிகவும் விரிவாகப் பேசப்போகிறார்களாகையால், இது சம்பந்தமான எனது கூற்றை இதோடு நிறுத்தி, நமது சமூகமானது எவ்வகையிலும் மேம்பாடுற, எல்லாப் பிணிகளுக்கும் அமிர்தமாய், எல்லா முயற்சிகளுக்கும் விளக்கொளியாய், எல்லாச் சித்திகளுக்கும் மகுடமாய் விளங்கவல்ல கல்வி யபிவிருத்தியின் அவசியத்தைக் குறித்துச் சில மொழிகள் கூறி எனது சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

## கல்வியும் பிரசாரமும்

எச்சமூகத்தில் கல்வி யறிவு மிக்கவர்கள் குறைந்துள்ளனரோ அச்சமூகம் பிற்போக்கானது என்பது எவரும் எங்கும் ஒப்புக்கொள்வதே யாம். ஐந்து இலக்ஷம் ஜனத்தொகை கொண்ட நம்மவரிடையே இது வரையில் ஐம்பது சர்வகலாசாலைப் பட்டதாரிகள் தாமும் தோன்றவில்லை யென்றால், நமது சமூகம் கல்வி யபிவிருத்தியில் எவ்வளவு பின்னடைந்திருக்கின்ற தென்பதைக் கூறவேண்டுமோ? கட்டாயப் படிப்பும் இலவசக் கல்வியும் பரவிவரும் இந்நாட்களிலும் நம்மவருள் நூற்றுக்கு ஏறெட்டு பேரே எழுத்து வாசனை யுள்ளவர்களாக இருப்பது என்ன விபரீதம்? கல்வியால் கண் திறக்கப்பெற்றவர்களன்றோ நல்லது பொல்லது எதுவெனப் பகுத்தறிந்து புத்திசாலித்தனமாய் எக்காரியத்தையும் செய்வதோடு பல சமயங்களில் தீர்க்க தரிசிகளாகவும் தோன்றித் தம்மைச் சேர்ந்தவர்களை முன்னேற்றிச் செல்ல வல்லவராவர்? எனவே, எவ்வளவுக் கெவ்வளவு விரைவாக உலக அறிவு நிறைந்த கல்விமான்களுடைய தொகை நம்மினத்தவரிடையே பெருகிக்கொண்டு வருகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு துரிதமாக நம்மவர் முன்னேற்றக் கட்டமும் பல அடுக்குகள் கொண்டு மேலெழும்பும். இதன் உண்மையை யுணர்ந்தே நமது தலைச்சங்கத்தினரும் பாமரரிடையே உலக அறிவையும்



கல்வியில் ஊக்கமும் ஊட்ட நமது 'மித்திர'னை நடத்துவதோடு, ஊரூராகக் கிளைச் சங்கங்கள் நிறுவிப் பிரசாரம் செய்யக் கல்விமான்களை அனுப்பியும், புத்திசாலிகளான ஏழை மாணாக்கர்களுக்கு உயர்தரப் படிப்பு பயில ஒத்தாசை யளிக்கக் கல்வி நிதியை ஏற்படுத்தியும், அப்போதைக்கப்போது நம்மவர் அபிப்பிராயங்களை உருவாக்கி வெளியிட மகாநாடுகள் கூட்டியும் குலமுன்னேற்றத் தொண்டினை ஒருவாறாக இயற்றி வருகின்றனர்.

## கல்விப் பெருக்குக்கும் பிரசாரத்துக்கும் ஒத்தாசை வேண்டும்

ஆயினும், அவர்கள் தொண்டினுக்கு எவ்வளவு ஒத்தாசையும் உற்சாகமும் கிடைக்கிற தென்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் உண்மைக் குலாபிமானிகளின் மனம் குன்றும். வருஷக் கணக்காக 'மித்திர'னை வாங்கிக்கொண்டு வந்துவிட்டுப் பணமனுப்பாத அன்பர்கள் பெருந் தொகையினராக இருப்பாரானால் அப்பத்திரிகை எவ்வாறு நடைபெறும்? கல்விநிதிக்கு மகமைப் பணமனுப்புவதாகவும் நன்கொடை அளிப்பதாகவும் வாக்கும் கையொப்பமு மிட்டுவிட்டு, அவ்வாக்கினையும் கையொப்பத்தினையும், ஞாபக மூட்டப்பெற்றும், நிறைவேற்றாது அன்பர்கள் வாளா விருப்பார்களானால் நிதியின் தருமகைங்கரியம் எவ்வாறு முழுப்பலனுடன் கைகூடும்? நாடெங்கும் காணப்பெறும் தொழிலின் ஒடுக்கமும் வியாபாரத்தின் சீர்மாறுட்டமும் உழைப்போர்க்கு மனச்சோர்வினைத் தரக்கூடிய இந்நிலைக்கு முக்கிய காரணங்களாக இருக்கலாம். எனினும், இவ்வறுமை நிலையிலேகூட எத்தனைக் கிராமங்களில் பொதுப் பணங்கள் கேட்பாரின்றிக் குவிந்து கிடக்கின்றனவென்பதையும், கட்சி வழக்குகளை நடத்துவதற்கு எத்தனைப் புதிய வரிகள் பலவிடங்களிலும் வசூலிக்கப் பெறுகின்றன என்பதையும் நினைவூட்டிப் பார்ப்போமாயின், குலமுன்னேற்ற மென்னும் நல்ல விஷயத்துக்குத்தானா நாட்டு வறுமை காரணமாகக் கூறப்பெறல் வேண்டும் என்னும் கவலை தோன்றுகிறது. ஊர்ப் பொதுப் பணங்களிலிருந்து கிராமத்துக்கு முப்பது ரூபாய் வீதம் ஆயிரங் கிராமங்கள் நமது மித்திரனுக்குப் பரம்பரைச் சந்தா அனுப்பி ஒவ்வொன்றும் ஒரு பிரதியினை மாதந்தோறும் வாங்கி வருவதென்னும் திட்டம் ஏற்படுமானால், நமது 'மித்திரன்' என்றும் சிரஞ்சீவியா யிருந்து, மிக உற்சாகத்துடனும் மிடுக்குடனும் பல அரிய விஷயங்களைத் தாங்கித் தவணை தப்பாது வெளி வந்து, நம் குலத்தவரிடையே என்றும் அவியாத ஞான விளக்கை யேற்றி வைத்துச் சாசுவதமாக அருந்தொண்டாற்றி வருவான். குடும்பத்துக்கொரு ரூபாயாக வரி விதித்துக் கொண்டு நம்மவர் கிராமங்களிலுள்ளோர் அனைவரும் அதனை ஒரே முறையாக வசூலித்துத் திரட்டி நமது தலைச் சங்கத்துக்கு அனுப்பி வைப்பார்களானால் ஒரு லக்ஷம் ரூபாய்க்கு மேலான மதிப்புக்கொண்ட பெருநிதி யொன்று சேர்ந்துவிடும். அதோடு அவர்கள் ஆங்காங்கே சிறு சிறு தொகைகளாகச் சேர்ந்து எவர்க்கும் உபயோகப்படாமல் தங்கி நிற்கும் பொதுப் பணங்களையும் திரட்டிக் கூட்டி அனுப்பலாம். இத்தகைய பெருநிதி யொன்றினைக் கொண்டு, மீண்டும் எக்காலத்தும் நம்மவர்களைப் பணத்துக்குத் தொந்தரவு செய்யாது, படிப்போர்க்கு உபகாரச் சம்பளங்கள் தாராளமாக வழங்கியும், அரிய விஷயங்களை விளக்கும் இலவசத் துண்டு பிரசுரங்கள், இயங்கும் படக்காட்சிகள், நல்ல உபந்நியாசங்கள், பொருட்காட்சிகள், மகாநாடுகள் முதலியவை மூலம் பாமரரது பொது அறிவை வளர்த்தும், வாழ்க்கை இலக்ஷியங்களை விசாலப்படுத்தியும், இன்னோரன்ன அருந்தொண்டுக ளாற்றியும் நமது குல முன்னேற்ற வேலையைத் தீவிர கதியுடன் செய்துகொண்டு போகலாம். முதலைத் தொடாமல் வட்டிப் பணத்தைக் கொண்டே இவ்வளவையும் செய்யலாம். இவ்வாறு பத்து வருஷ காலம் வரைசெய்து, அதன்

முடிவில் நாம் சிறிது பின் நோக்கிப் பார்ப்போமாயின், நாம் சாதித்துள்ள வேலையையும் அதன் பலனையுங் கண்டு நாமே வியப்படைய வேண்டிவரும்.

பெருமக்களே! அன்பர்களே!! நான் உங்களை முடிவில் மன்றாடிக் கேட்டுக்கொள்வது இது ஒன்றேயாம்: இதுவே எனது நெடுநாளைய மனோபீஷ்டம்: ஏனெனில், இதுவே நமது முன்னேற்றக் கட்டடத்திற்கு என்றுங் குறையாத முதலாக வல்லது. குடும்பத்துக் கொரு ரூபாயாகச் சேர்க்கவல்ல இந்நிதியினையும், ஊர்ப்பொதுப் பணங்களிலிருந்து வழங்கவல்ல 'மித்திரன்' பரம்பரைச் சந்தாக்களையும் நமது தலைச் சங்கத்துக்குத் திரட்டித் தாருங்கள். திரட்டித்தரும் அந்நொடியிலிருந்தே நம்மவர் முன்னேற்றக் கட்டடம் அழகும் அழுத்தமும், உரமும் உயரமும் பெற்று எழுமென்று யான் உறுதி கூறுகிறேன். உழைக்க விருப்பமும், நற்காரியங்களை இயற்றும் ஆற்றலும், போதிய நிலையான வருவாயும் இருக்குமேல் இவ்வுலகில் சாதிக்க முடியாததொன் றுளதோ?

---

உ

திருப்பத்தூர் தாலுக்கா போர்டு தலைவரும்,
வட ஆற்காடு ஜில்லா போர்டு அங்கத்தினரும்,
திருப்பத்தூர் நகரபரிபாலன சபை அங்கத்தினருமான

**உயர்திரு. கா. அ. சண்முக முதலியாரவர்கட்கு**

அன்னார் ஆங்கீரஸ மாசி மாதம் 29—30 தேதிகளில் நடைபெற்ற
தென்னிந்திய செங்குந்தர் நான்காவது

**வர்த்தகர் மகாநாட்டுத் திறப்புவிழா ஆற்றிய சமயம்**

வரவேற்புச் சபையார் வாசித்தளித்த

# வரவேற்பு நல்லுரை

**அறிவே உருவானாய் அன்பே உயிரானாய்!**

மக்கட்கெல்லாம் இன்றியமையாதனவும் மக்களது வாழ்வை மேன்மைப்படுத்துவனவுமாகிய அறிவும் அன்பும் ஒருங்கே திரண்டு ஒருரு வெடுத்தென்ன ஒளிரும் தங்களிடம் எளியேங்கள் அறிவு துலக்க வல்லார் யாரே? உலகப்போக் குணராது பின்னணியில் தயங்கிக் கிடக்கும் எங்கட்கு நல்வழி காட்டுமுகத்தான் எங்கள் அறிவுக் கண்களைத் திறக்கும் வகையிலே எங்களது மகாநாட்டினைத் திறந்து வைக்க இசைந்தமைக்கு யாங்கள் நன்றி காண்கிலேம்.

**வாணிபம் பேணி வளம்பெறு மணியே!**

பலத்த போட்டியாலும் கால மாறுதலாலும் நாளுக்கு நாள் தேய்ந்துகொண்டே வரும் நமது புராதன கைத்தொழிலினையே முதலைப் பிடியாய்ப் பிடித்து வறுமையோடு வாதாடிக்கொண்டிருக்கும் நங்குல மக்களது மனத்தில், கால வகையினானே ஜீவனோபாயத்தையும் வாழ்க்கையையும் மாற்றிக்கொண்டா லொழிய எவரும் உலகப் போட்டியிலே கலந்துகொள்ளத் தகுதியற்றவராவர் என்பதைச் செய்கையான் நிலைநாட்டியுள்ள தங்களது உபதேசங்கள் ஆழப்பதிந்து அரும்பணி யாற்றுமென்பதில் ஐயமென்னே?

**பொதுநலப் பணியே பூணெனப் பூண்டோய்!**

பொதுநலனுக் கடுத்ததே தன்னலன், சுயநலம் பொதுநல உழைப்புக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதே, பாடுபட்டுத் தேடும் பொருளும் அவசியமானபோதெல்லாம் பொது நலத்துக்காக வழங்கப்பட வேண்டியதே என்னும் சீரிய கருத்தோடு, வியாபாரத் தொல்லைகள் ஒருபுற மிருக்க, பொது நலச் சேவையிலே முனைந்து நின்று, உள்ளூராட்சிச் சபைகளிலே முதன்மை ஸ்தானம் வகித்துத் தமதாட்சிக்குட்பட்ட மக்களுக்கெல்லாம் பெருநன்



மைகள் புரிந்து வருவதுடன், மக்கள் கற்பென்னுந் திண்மையையும் காதலென்னும் இல்லறச் சாதகத்தையும் நேரிதின் உணர்ந்து நலமெய்தவும், தமிழ்த் தாய் உள்ளங் குளிர்ந்து 'என்னே என் ஆருயிர் மகன்றன் அறிவு' எனப் போற்றவும் 'நளாயனி வெண்பா' வெனும் நயமிகுந்த நூலினை இயற்றி, வகை தெரியாதார் எளிதில் வகை தெளியுமாறு என்றைக்கும் வழிகாட்டும் ஒரு சுடரொளித் தீபத்தை வழங்கியுள்ள எங்கள் ஆருயிர்த் தலைவர்க்கு, சாந்த சீலருக்கு, சற்குண மாமணிக்குச் சுகவாழ்வும் பேராயுளும் அருளுமாறு நங்குல முதல்வனை இறைஞ்சுதல் எங்கள் கடனே யன்றோ?

இங்ஙனம்:
தங்கள்பால் தளரா அன்பு கொண்டுள்ள
**தென்னிந்திய செங்குந்தர் நான்காவது**
**வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புச் சபையார்.**

---

உ

வர்த்தகர் மகாநாட்டைத் திறந்துவைத்த திருப்பத்தூர்

**திரு. கா. அ. சண்முக முதலியார் அவர்கள்**

# திறப்புரை

பூமகள் நோக்கமும், நாமகள் அருளும் பொலிந்து மல்கிய எனது தொல்குலப் பெரியீர்! எனது அன்புமிக்க அன்னைமீர்! எனது உடன்பிறந்த அரிய மைந்தன்மீர்! மங்கைமீர்காள்! "நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என்றாங்கு, நமது குல முன்னேற்றத்திற்கு உழைக்க முன்வந்த உள்ளக் கிடக்கையை வெளியாக்கி அன்பு ததும்புகின்ற உங்கள் திருமுக மண்டலங்களைப் பார்க்கப் பார்க்க எனது உள்ளம் களிதுளங்குகின்றது. நங் குல தெய்வமாகிய அறுமுகப்பெருமானை அகத்தகத் தமர்த்திய உங்கள் திருமுன்னர் எனது கரங்கள் சிரமேற் குவிகின்றன. நம்குல மூதாதையர் வலாசுரனை வென்று அவ்வென்றியை இந்திரற்களித்து இந்திரனால் பரிசுபெற்றுக்கொணர்ந்த தியாகராசப்பெருமான் திருக்கோயில் கொண்டருளிச் சிறந்துவிளங்கும் இத்திருவாரூரில் இப்பேரவையின்கண் எழுந்தருளியிருக்கும் நம் செங்குந்த வர்த்தகர் மகாநாட்டைத் திறந்து வைக்கும் பெரும் பேற்றைப் பெற்றமைக்காக மிகமிக மகிழ்ச்சி யடைகின்றேன்.

நமது செங்குந்த சமூகத்தின்கண் என்னைவிட வயதிலும், கல்வியறிவிலும், சமூகத் தொண்டியற்றும் ஊக்கத்திலும், அதனை ஆற்றும் ஆற்றலிலும், வர்த்தக முறையிலும் பன்மடங்கு சிறந்த திருவாளர்கள் பல்லோரிருக்க இம்மகாநாட்டைத் திறந்து வைக்கும் பேற்றை அடியேனுக்கு அளித்தமை என்னுடைய பெற்றோர்கள் செய்த புண்ணியப் பேற்றாலோ, தாங்கள் என்மீதுகொண்ட அன்பின் பெருக்காலோ, யான் ஆற்றிவரும் சமூகத்தொண்டு போதியதன்றெனக்கருதி இனிப் போதிய தொண்டாற்றும் வண்ணம் எனக்கு ஊக்கங்கொடுக்கவோ யாதென உணரகில்லேன். யாதாயினும் சமூகப் பெரியார்கள் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண் டொழுகக் கடமைப்பட்டுள்ளேனாகையாலும், நம் சமூகவர்த்தகத் திருவாளர்கள் குழுவிற் கலந்து உறவாடவும், வியாபாரப் பெருக்கிற்கு வேண்டிய புதிய வழிகளையும் சாதனங்களையும் யான் உணர்ந்து மேனிலைக்கு வரவும் எனக்குத் துணைசெய்யுமாகையாலும் இம்மகாநாட்டைத் திறந்துவைக்கப் பேருவகையோடு ஒப்புக்கொண்டுள்ளேன்.

உலகமக்கள் வாழ்க்கை நடாத்தற்காகச் செய்யும் தொழில்கள் பலவற்றுள், பொதுவாக யாவர்க்கும் மானங்காத்தற்கு உடையும், உயிர்காத்தற்கு உண்டியும் வேண்டியன. இவ்விரண்டிற்கும் நெய்தற்றொழிலும் உழுதற்றொழிலும் இன்றியமையாதனவாகும். எக்காலத்தும் நிலைநிற்பதும், ஏனைய தொழில்களுக்கெல்லாம் தலைசிறந்து விளங்குவதும், யாரும் போற்றத்தக்கதுமான நெய்தற்றொழிலை மேற்கொண்டு நிலவவைத்த நம் குல மூதாதையர்களின் மூதறிவை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். எத்தகைய தொழிலும் அவரவர்கள் கற்ற கல்வியறிவினதளவாய்ச் சிறந்து விளங்கும். தொழில்கள் கைத்தொழில், உழவுத் தொழில் என்பனவற்றுளடங்கும். ஒவ்வொரு தொழிலும் வர்த்தகத்தின் வாயிலாகத்தான் பயனை அடையக்கூடும். ஆகவே எல்லாத்தொழில்களுக்கும் ஆதாரமாய் முன்னின்று வளர்த்துக் காப்பது வர்த்தகத்தொழிலேயாகும். நம் சமூகத்தினர் பல்வேறு தொழில்களையும், வர்த்தகங்களையும் மேற்கொண் டொழுகுகின்றன ரென்றாலும், பெரும்பாலோர் நெய்தற்றொழிலையும் அந்நெய்தற்றொழிலுக்குக் காரணமும் காரியமுமாகிய நூல், ஜவுளி ஆகிய வர்த்தகத்தொழில்களையுமே மிகுதியும் மேற்கொண்டொழுகுகின்றனர்.

நெய்தற்றொழிலைச் செய்யும் நம் சமூகத்தினரில் பல்லோர் மிக்க ஏழைகளாகவும் இருக்கின்றனர்.

தற்போது இரண்டு மூன்று ஆண்டுகளாக அந்நிய நாட்டு ஆடைகளோடும், சுதேச ஆலைத் துணிகளோடும் போட்டிபோட முடியாமல் வர்த்தகம் சீர்கெட்டுத் தொழிலுங் குன்றி அதனால் நம்சமூகத்தினர் மிகவும் தத்தளித்துக்கொண்டிருக்கின்றனர். இக்குறைபாடுகள் அறவே நீங்கும்படி ஆங்காங்கு உள்ள நம் சமூகச் செல்வவந்தர்கள் குலத்தார்க்குச் செய்யும் தொண்டே நம் குமரகுருபரற்குச் செய்யும் தொண்டாமென்பதைக் கடைப்பிடித்துத் தாங்கள் எவ்வித தொழில்களை அல்லது வர்த்தகங்களைச் செய்தாலும் தங்கள் தங்கள் நகரங்களில் அல்லது கிராமங்களிலுள்ள நமது குல ஏழைமக்களைத் தங்கள் தங்கள் குடும்பத்தினராகப் பாவித்துத் தொழிலும் வாழ்க்கையும் சிறப்புறுமாறு ஆண்மக்களும் பெண்மக்களும் கல்விகற்கவேண்டிய வகை செய்து, கூட்டுறவுத் தொழிற் சாலைகள் வர்த்தக சாலைகள் ஏற்படுத்தி, தொழிலையும் வர்த்தகத்தையும் புதுப்பித்து, வழிகாட்டி ஆதரவளித்து மேன்மையடையவேண்டுமென்று நமது திருமகள் மருகனை, உமையவள் புதல்வனை, வள்ளி தெய்வயானை மணவாளனைப் பன்முறை துதிசெய்து இவ்வவையின் கண்ணுள்ள பெரியார்கட்கு மீண்டும் எனது வணக்கம் உரித்தாக்கி மிக்க மகிழ்ச்சியோடு இம்மகாநாட்டைத் திறந்துவைக்கின்றேன்.

12—3—1933
திருவாரூர்

இங்ஙனம்,
கா. அ. சண்முக முதலியார்.

---

உ

வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் திருநாகேஸ்வரம்

V. M. N. பொன்னம்பல முதலியாரவர்கள்

# சொற்பெருக்கு

[விலக்க முடியாத அசந்தர்ப்பம் காரணமாகத் திரு. பொன்னம்பல முதலியார் மகாநாட்டுக்கு வரத் தடைப்பட்டதால் இச் சொற்பெருக்கினை மன்னார்குடி நகரபரிபாலன சபை அங்கத்தினர் திரு. பெரி. ரு. நடராஜ முதலியாரவர்கள் ஆற்றினார்கள்.]

அன்பு கனிந்த பிரதிநிதிகளே!
சகோதரர்களே!! சகோதரிகளே!!!

திருவாரூரெனும் இத்திவ்விய திருப்பதியில் செங்குந்தர் கோட்டையெனச் சிறப்புறு மிவ்விடத்தில் எங்கள் அழைப்பிற் கிணங்கி நமது நான்காவது வர்த்தகர் மகாநாட்டைக் கௌரவிக்கவும், வர்த்தக முன்னேற்றத்திற்கான பல விஷயங்களையும் ஆய்ந்து முடிவு செய்யவுங் கருதி, பெருந்திரளாக, மிக்க ஆர்வத்தோடு வந்து குழுமியுள்ள உங்களனைவரையும் வரவேற்புச் சபையினரின் சார்பாகவும் தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜனங்களின் சார்பாகவும் உள்ளம் நிறைந்த அன்போடு நான் வரவேற்கின்றேன். உங்கள் வரவு நம் சமூகத்திடையே புத்துணர்வளித்துப் புன்மை போக்கும் நல்வரவாகுக!

உலக முழுவதும் வர்த்தக மந்தத்தால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் இக்காலத்தில், வர்த்தக வீழ்ச்சியின் பயனாய் ஏற்பட்டுள்ள பொருளாதாரக் கஷ்டத்தில் சிக்கிக்கொண்டு உலக மக்களெலாம் பெருங்கவலையில் வாழ்ந்துள்ள இந்நாளில், தொழிலாளிகள் வருமானங் குன்றி வருந்தி நிற்கும் இச்சமயத்தில், நெசவுத் தொழில் நிலை குலைந்து தட்டுக்கெட்டு நிற்கும் இவ்வேளையில், வர்த்தகர் மகாநாட்டைக் கூட்டவேண்டியது மிகவும் அவசியமன்றோ? நமது குலத்தவர்களில் நூற்றுக்கு எழுபது பேர்கள் நெசவுத் தொழிலால் வரும் ஊதியத்தில் உயிர் வாழ்பவர்கள். 15 பேர்கள் வர்த்தகத்தின் வருவாய் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள். எஞ்சியுள்ள பதினைந்து பேர்களே உழவினையும், உத்தியோகத்தினையும் நம்பி இருப்பவர்கள். உலகப் பொருளாதாரக் கஷ்டத்தினாலும், வியாபார வீழ்ச்சியினாலும் நமது சமூக மக்களில் 100-க்கு 85 பேர்களாகிய நெசவாளிகளும் வியாபாரிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டு என்று மடையாத கஷ்ட நிலை எய்தியுள்ளனரெனக் கூறுதல் மிகையாகாது. இத்தகைய சமயத்தில் வர்த்தகத்தில் சிறந்த அநுபவமும், நுட்ப அறிவும், நிறைந்த யூகமுமுடையார் பலர் ஒன்று கூடி, 'நமது கஷ்ட நிவர்த்திக்கு வழி யாது? நெசவுத்தொழில் பாதுகாக்கப்படுவ தெவ்வாறு? கைத்தறியினால் நெய்யப்படும் ஆடைகளுக்கு எல்லா 'மார்க்கட்டு'களிலும் நல்ல மதிப்பும் கிராக்கியும் உண்டாகுமாறு செய்வதெங்ஙனம்?' என்ற விஷயங்களை ஆழ்ந்து யோசித்துத் தக்க முடிவு காண வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமுமான காரியமல்லவா? பெரும்பாலோர் கஷ்டத்திலேயே மூழ்கிக்கிடக்கும் இச்சமயத்திலும் நாம் உறங்கிக்கிடப்பது நியாயமாகுமா?



வாளாவிருத்தல் பெருங்கேடு விளைவிக்குமெனக் கருதியே, கடந்த இரு மகாநாடுகளில் வர்த்தகர் மகாநாட்டைக் கூட்டாமலிருக்கவும் இம் மகாநாட்டில் அதனையுங் கூட்டத் துணிந்தோம். இளமை முதலாகவே வர்த்தகத்தில் பழகி, வர்த்தக யுக்திகளெலாம் வாய்ந்து, மேனாட்டார் போன்று மிகச் சிறந்த முறையில் வியாபாரத்தை நடத்தி, பஞ்சாலை, நூலாலை, பெட்ரோல் கம்பெனி முதலிய பெரிய கம்பெனிகளின் ஏஜன்சியைப் பெற்று, ஒரே சமயத்தில் ஏறக்குறைய இருபது ஊர்களில் வியாபாரம் நடத்தி, அதனால் பெருஞ் செல்வந் தேடி, தற்காலத்தில் நமது சமூகத்தினருக்குள்ளே செல்வச் சீமானாய் விளங்கும் கோவை திருமிகு V. S. செங்கோட்டையா முதலியாரவர்கள் இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க நேர்ந்தது நமது நற்காலமேயாகும். அன்னார் தலைமையின் கீழ்க் கூடியுள்ள நாம் நமது தொழில் மேனிலையுறுதற்கேற்ற மார்க்கங்களையும், பலவித வியாபாரங்களைப் பலரும் கையாண்டு சிறப்புறுதற்கேற்ற உபாயங்களையும், கைத்தறியினால் நெய்யப்படும் துணிகளுக்கு நன்மதிப் பேற்படத் தக்க முறைகளையும் ஆய்ந்து நமது கஷ்ட நிவர்த்திக்கு வழிகாணக்கூடுமென்றே நம்புகின்றேன்.

## நெசவுத் தொழில் வீழ்ச்சி

நெசவுத் தொழில் நாளுக்கு நாள் க்ஷீணித்துப் போவதற்கு முக்கியமாக நான்கு காரணங்கள் இருக்கின்றன. அந்நிய ஆடைகளின் போட்டியைச் சமாளித்து நிற்கத்தக்க பாதுகாப்பு நமது தொழிலுக்கு இல்லாமையும், இந்திய ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுந் துணிகள் நியாயமான விலைக்கு விற்கத்தக்க ஒழுங்கின்மையும், நமது ஆடைகளிடத்து நமக்குப் பற்றின்றி அந்நிய ஆடைகளிடத்து நாம் கொண்டுள்ள மோகமும், அரசாங்கத்தின் கவனிப் பின்மையுமே நெசவுத் தொழில் வீழ்ச்சிக்குக் காரணங்களாகும்.

பல்லாயிர வாண்டுகட்கு முன் நமது நாட்டில் நெசவுத் தொழிலுக்கிருந்த மதிப்பென்ன? நமது நாட்டில் நெய்யப்பட்ட ஒரு கெஜம் டாக்கா மஸ்லின் ஒரு பவுனுக்கு மேற்பட்ட விலைக்கு இங்கிலாந்தில் விற்கப்படவில்லையா? பட்டினும், மயிரினும், பருத்தி நூலினும் சிறந்த ஆடைகள் நெய்து எல்லா தேசங்கட்கும் ஈந்து வந்த இந்தியா தேசம் தற்போது நெசவுத் தொழிலைப் புறக்கணித்து வருவதற்குக் காரணமென்ன? இந்திய மாதாவின் புத்திரர்களில் நெசவுத் தொழிலினருக்கே பண்டு மதிப்பும் மாண்பும் இருந்தது. அரசர்கள் இவ்வாடைகளையே உடுத்து வந்தனராகையால் நெசவுத் தொழிலை ஆதரித்து வளர்க்கவேண்டுமென்ற எண்ணம் அரசர்கட்கு ஏற்படவும், அரசர்களுக்கேற்ற ஆடைகளை நெய்து தரவேண்டுமென முயன்று தொழில் அபிவிருத்தியில் கவனஞ் செலுத்துதற்குரிய நிலை நெசவாளிகட் கேற்படவும் ஓர் சிறந்த சந்தர்ப்பம் அக்காலத்தி லிருந்தது. அதனால் நெசவுத் தொழில் வெகு விரைவாக முன்னேற்றமடைந்தது. புலவர்களெல்லாம் தமது சங்க இலக்கியங்களிலே நெசவாளிகளைப் போற்றிப் புகழ்ந்தனர். உழவிற் கடுத்தபடியாகக் கைத்தொழிலையே சிறப்பித்துள்ளனர்.

'பட்டினும், மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்'

* * *

'உழவு தொழிலே வரைவு வாணிபம்
வித்தை சிற்பமென் றித்திறத் தறுதொழில்
கற்குந ருடையது கரும பூமி'

என்ற சங்க இலக்கியங்கள் இங்குக் கூர்ந்து நோக்கத்தக்கன. பட்டினாலும் மயிரினாலும் பருத்தி நூலினாலும் நெசவுத் தொழில் புரியும் நுட்ப அறிவினையுடைய நெசவாளிகள் என்றும், உழவும், தொழிலும், வரைவும், வாணிபமும், வித்தையும், சிற்பமும் கற்பவர் கருணையாற் நமது பூமி என்றும் இவ்விலக்கியங்களில் கூறப்பட்டிருப்பது நன்கு கவனிக்கத்தக்கது. உழவிற்கு அடுத்தபடியாகக் கைத்தொழிலே கூறப்பெற்றுள்ளது. வாணிபம் நான்காவதாக இடம் பெற்றிருக்கிறது. கைத்தொழில் சிறப்பெய்தா நாட்டில் வாணிபம் வளம் பெறுவதில்லை. வாணிப வளம்பெறா நாடு செல்வத்தில் சீரழிந்து பலவித துன்பங்களை அநுபவிக்க வேண்டியதே. எனவே, ஒரு சமூகமோ, ஒரு நாடோ முன்னேறுவது அதனின் கைத்தொழி லபிவிருத்தியினைப் பொறுத்து நிற்கின்றதென்பது வெளிப்படை. மகா யுத்தத்திற்கு முன் ஜப்பான் தேசத்தின் பொருளாதார நிலை என்ன? தற்போது அத்தேசத்திலுள்ள செல்வச் செழிப்பின் நிலை என்ன? யுத்த காலத்தில் ஜப்பான் தேசத்தின்

கைத்தொழில் மகோன்னத நிலையடைய ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்ததாகலின் இந்நாளில் அது ஒரு செல்வம் கொழித்த நாடாகத் திகழ்ந்து வல்லரசுகளின் சர்வதேச சங்கத்தையும் பகிஷ்கரிக்கத் தக்க ஆற்றலும் பலமும் பெற்று விளங்குகின்றது.

சோவியத் ரஷ்யாவைப் பாருங்கள். அங்குச் சமீப காலத்தில் கணக்கற்ற தொழிற்சாலைகள் ஏற்பட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழித்தன. அந்நிய நாட்டினருக்கும் ரஷ்யா தேசமானது வேலை வழங்கச் சித்தமாக இருக்கின்றது. அந்நாட்டிற்குச் சென்று சமீபத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்துவிட்டு வந்த ஒருவர், அந்நாட்டில் ஒருவன் இடறி விழுந்தால் தொழிற்சாலையிலேயே விழவேண்டுமெனக் கூறுவாராயின் அங்குத் தொழிற்சாலையின் பெருக்கம் எவ்வளவென யோசித்துப் பாருங்கள். சைனா தேசமும் ஜப்பான் தேசமும் அடிக்கடி பூகம்பங்களாலும் அக்கினி மலைகளாலும் கோடிக்கணக்கான பொருள் நஷ்டமடைந்து வந்தாலும் அதனால் ஒரு சிறிதும் கஷ்டமுறாம லிருப்பதற்குக் காரணம் அந்நாட்டுத் தொழில் முறைகளால் வரும் ஊதியமேயாகும். சைனாவில் விளையாட்டுச் சாமான்கள் செய்வதில் ஆர்வமும் ஊக்கமுமுடையார் அதிகம். எனவே சீன அரசாங்கம் அத்தொழிலுக்கு வேண்டிய எல்லா வகையான உதவிகளையும் புரிந்து அதை விருத்தி செய்து நாட்டுக்குச் செழுமை தருகின்றது. பம்பாய், சென்னை முதலிய பெரிய நகரங்களில் சீன தேசத்து விளையாட்டுச் சாமான்களை விற்பதற்கென்றே தனியாகச் **சைனா பஜார்** என்ற கடை வீதி ஏற்பட்டிருப்பதைப் பாருங்கள். ஜப்பான் தேசத்தில் உற்பத்தியாகாத பொருளுமுண்டோ? வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் அந்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன. அந்நாட்டில் கண்டோர் கண்களைக் கவரத்தக்க விசித்திர வேலைப்பாடமைந்த பாய்கள் நெய்பவர்கள் அநேகர் உள்ளனர். எனவே ஜப்பான் அரசாங்கம் ஏனைத்தொழில்களுக்குச் சாதாரண உதவிகளளித்துவிட்டுப் பாய்த் தொழிலுக்கு மட்டும் விசேஷ ஏற்பாடுகள் செய்து அதனை வளர்த்து வருகின்றது. அதற்கெனத் தனி உத்தியோகஸ்தர்கள் ஏற்படுத்தித் தரமல்லாதவைகளை வெளியில் செல்லவொட்டாதபடி தடுத்தும், அழகுடையவைகட்கு வெகுமதி வழங்கியும் அத்தொழிலைக் கௌரவித்து வருகின்றது. ஆண்டுதோறும் ஜப்பானிலிருந்து வெளி நாடுகட்குப் பாய்கள்மட்டும் 10 லட்ச ரூபாய்க்கு ஏற்றுமதியாகின்றன வெனின் அந்நாட்டுத் தொழில் மேன்மையைச் சொல்லவேண்டுமோ?

நம் நாட்டில் நிகழ்வதென்ன? ஒரு ஊரில் உற்பத்தியாகும் ஆடைகளையோ, பாய்களையோ, மற்றுஞ் சில சாமான்களையோ அந்த ஊர் வாசிகளே வாங்கக் கூசுகின்றனரென்றால் அவை வெளி நாடுகட்கு ஏற்றுமதியாவதெங்ஙனம்? நமது ஆடைகளிடத்து நமக்கு நிறைந்த பற்று இருக்கவேண்டியது மிக அவசியமாகும். நாம் வாங்குந் துணி ஒவ்வொன்றும் நம்நாட்டுத் துணியாக இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டியது நெசவுத் தொழிலையுடைய சமூகமாகிய நமது சமூகத்தினரின் முக்கிய கடமையாகும். நமது தேசத்தில் 100-க்கு 40-பேர்கள் வரை நெசவுத் தொழில் புரிபவர்களாதலால், அத்தொழிலுக்குப் பாதுகாப்பும் விசேஷ உதவியும் அளிக்க வேண்டியது நமது அரசாங்கத்தின் கடமையாகும். முதலாவதாக நான் முன்னே கூறியபடி அரசாங்கத்தினர் அந்நியப் போட்டிகளைச் சமாளிக்கத்தக்க பாதுகாப்புக்களை இத்தொழிலுக்கு அளிக்கவேண்டும். அளவு கடந்த ஜப்பான் துணிகளின் இறக்குமதியைத் தடுப்பதற்காகச் சென்ற ஆகஸ்டு மாதம் விதித்த விசேஷத் தீர்வையைச் சிறிது உயர்த்த வேண்டியதும் அவசியமாகும். தற்போது விதிக்கப்பட்டுள்ள விசேஷத் தீர்வையால் ஜப்பான் ஆடைகளின் இறக்குமதி போதுமானபடி தடுக்கப்படவில்லை. இரண்டாவதாக இந்திய ஆலைகள் தமக்குள் ஏற்படும் போட்டியினால் ஆலைச்சரக்குகளைக் குறைந்த விலைக்கு விற்காமல் நியாயமான விலைக்கு விற்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மூன்றாவதாகக் கைத்தறியில் உற்பத்தி செய்யப்பெறும் துணிகளைப் பார்வையிட்டுத் தரம் பிரிக்கவும், உள்ளங் கவரத்தக்க வகையில் உயர்ந்த ஆடைகள் நெய்வதற்கேற்ற மார்க்கங்களைக் கற்பிக்கவும், ஆலைத் துணிகளைப் போல் மேற் பூச்சுகளுடன் (finishing) கைத்தறித் துணிகளும் பளபளப்பான முறையில் வெளிவரத்தக்க வழிகளைச் செய்யவும், ஒவ்வொரு மார்க்கட்டிலும் செலவாகத்தக்க நவநவமான அழகிய மாதிரிகளைத் தயாரித்து அதற்கேற்ற ஆடைகளை உற்பத்தி செய்யவும் மற்றும் கைத்தறிகளின் வளர்ச்சிக்கும் அவற்றில் உற்பத்தியாகும் ஆடைகளின் மேன்



மைக்குமான எல்லாத் துறைகளிலும் நெசவாளிகட்குச் சரியான மார்க்கங்களைக் கண்டுபிடித்து உணர்த்தவும் ஜில்லா வாரியாகத் தனி உத்தியோகஸ்தர்கள் நியமிக்கவேண்டும். தற்போது அரசாங்கத்தார் நடத்தி வரும் போதனா முறை நெசவுச்சாலைகள் (Textile Institutes) நெசவுத் தொழிலாளிகட்கு எந்த வகையில் உபயோகப்படுகின்றனவெனத் தெரியவில்லை. அங்குக் கற்பிக்கப்படும் நெசவுத் தொழில், பயிற்சி பெற்றோர் அந்தப் போதனா சாலையைவிட்டு வெளி வந்ததும் உத்தியோகத்தைத் தேடி யலையவேண்டியதாக இருக்கிறதே யொழிய தினசரி வாழ்க்கையில் பயன் தருவதாகவோ, அனைவரும் கையாண்டு தொழிலை மேம்படுத்துவதற் குரியதாகவோ இல்லையென்பது எனதபிப்பிராயம். அன்றியும், அங்குக் கற்பிக்கப்படுவதற் கேற்பத் தமது வீட்டிலும் நெசவுத் தொழில் செய்வதற்குக் கிராமங்களில் அரசாங்கத்தார் என்ன வசதியளித்துள்ளனர்? போதனா முறை நெசவுச் சாலைகள் பெரும்பாலும் நெசவாளிகட்குப் பயன்தரவில்லை. ஆங்கிலம் படித்தவர்களே அச்சாலைகளில் சேர்க்கப் பெறுவதால் நெசவுத் தொழிலாளிகளல்லாத பிற சமூகத்தவர்களே அதிகமாகப் பயின்று வருகின்றனர். அத்தகையோர் பின்பு உத்தியோகந் தேடுவது தவிர வேறு என்ன செய்ய முடியும்? எனவே, சாதாரண நெசவாளிகட்குப் பயன்படும் வகையில் அச்சாலைகளின் சட்டதிட்டங்களைத் திருத்தியமைக்குமாறு நாம் அரசாங்கத்தினரை வற்புறுத்தவேண்டும்.

## நமது கடமை

எல்லாக் காரியங்கட்கும் நாம் அரசாங்கத்தினரை நம்புதலுங் கூடாது. அவர்கட்கு, உயர்ந்த உத்தியோகஸ்தர்கட்கு ஆயிரக் கணக்காய்ச் சம்பளத்தை வாரி இறைக்கப் போதிய பணம் இருக்குமே யொழிய ஏழைகட்குப் பயன்படுத்தும் முறையில் ஒரு சிறிய தொகையினைச் செலவிடுதற்கும் பணம் இருப்பது கஷ்டமே. ஆகையால் நாமும் நமது சொந்தத்தில் இத்தகைய முயற்சிகட்கு ஊர்ப் பொதுப் பணங்களைச் செலவிடத் தயாராக இருக்கவேண்டும். ஊர்ப்பணங்களைத் தொழில் வளர்சசிக்கு உபயோகப்படுத்துங் குணம் நம்மவர்களுக்கு அறவே கிடையாது. இனியும் அது இல்லையாயின் கைத்தொழிலுக்குப் போராபத்து நேருமென்பதை நீங்கள் உணரவேண்டும். ஒவ்வொரு ஊரிலுமுள்ள பொது நிதியின் பெரும் பகுதியினை நமது தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சியிலும், தொழிலுக்கு வேண்டிய சாமான்களைப் பொதுவில் உபயோகிக்க வாங்கிவைத்தலிலும், தொழிலுக்கேற்ற வசதிகளைச் செய்து தருதலிலும், சாய வேலை முதலிய கற்றுக்கொள்வதிலுமே செலவிட வேண்டும். அன்றியும் தறிச் சாமான்களை மொத்தமாகத் தருவித்தோ அல்லது செய்தோ குறைந்த விலைக்கு விற்கவும், ஆடைகள் பகட்டாயும் நயமாயும், பிறர் திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாயும் நெய்யும்படியான மார்க்கங்களை அனைவர்க்கும் இலவசமாய்க் கற்பிக்கவும், நெய்த ஆடைகளைச் சேகரித்து வெளியிடங்கட்குக் கொண்டு போய் உயர்விலைக்கு விற்கவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கே பெரும்பாலும் உபயோகிக்கவேண்டும். இஃதன்றிச் சில கிராமங்கள் ஒன்று சேர்ந்து ஒரு சிறு நிதி திரட்டி அந்நிதியின் செலவில் இரண்டொருவரை வெளிநாடுகட் கனுப்பி நெசவு, சாயமேற்று, அச்சடித்தல் ஆதியவற்றில் தேர்ச்சிபெறச் செய்து எல்லாக்கிராமங்களிலும் பிரசாரம் செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டும். வருடத்திற் கோர் முறை குறிப்பிட்ட ஒரு நாளை நெசவாளி தினம் (weavers day) என்று பெயரிட்டு அந்த நாளில் ஒவ்வொரு கிராமத்திலும் புதுமுறையில் நெய்யப்பட்ட சிறந்த ஆடைகட்கும், சொந்த முயற்சியில் அபிவிருத்தி செய்துள்ள தறிகட்கும் பரிசுகள் வழங்கி, மேன்மேலும் உற்சாகமும் ஊக்கமுமளிக்க வேண்டும். இத்தகைய பலவழிகளிலும் தொழிலைச் சீர்திருத்துவதற்காக முயற்சி எடுத்தாலொழிய நெய்தற் றொழில் வெகு விரைவில் வருமானமற்ற வீண் தொழிலாகிவிடுமென்பது நிச்சயம். இது வன்றியும், சாதாரண ஆரம்ப பள்ளிக்கூடங்களில் கல்வி மட்டும் போதிப்பதில் பயனில்லை. நான்காவது வகுப்புக்குமேல் பாய்த்தொழில், தச்சு வேலை, எனாமல் பெய்ன்டிங் முதலிய உயர்ந்த வர்ணவேலைகள், சித்திரம், கெடிகாரம் முதலியவற்றின் ரிபேர் வேலைகள், பொம்மைகள் செய்தலாதிய பலவகைத் தொழிலும் கற்பிக்கும்படி அரசாங்கத்தினரையும், தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு முனிசிபாலிடிகளையும் வற்புறுத்திக் கேட்கவேண்டும். இத்தொழில்களைப் பழகுவதில் நம் சமூக இளைஞர்கள் முன்னணியில் நிற்குமாறு தூண்டவேண்டும். 'செய்யுந் தொழிலை யெல்லாம் சீர்தூக்கிப்

பார்க்கின் செய்யுந் தொழிலுக்கு திகிலில்லை என்ற பழைய வேதாந்தம் பேசிக்கொண்டிராமல் செய்தற் றொழில் எல்லாச் சமூகத்தவரா லும் கையாளப்படுகிறது போன்ற பல வகைத் தொழிலையும் நாம் பழகவேண்டியது இக் காலப் போக்கிற்கு இன்றியமையாததாகும்.

## கூட்டுக் கம்பெனிகள்

ஒவ்வொரு ஊரிலும் செல்வந்த வியாபாரி கள் பலர் இருக்கின்றனர். ஆனால் இவர்களுக் குள் போட்டி ஏற்பட்டு அதனால் விலை குறைத்து விற்றுப் பெரு நஷ்டமடைவதும், மனத்தாங்கலும் விரோதமும் வளர்வதும் சகஜமாகிவிட்டது. இவை நிவர்த்திக்கப்பட வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு ஊரிலுமுள்ள நமது சமூக வர்த்தகர்களனை வரும் தனிமையாயிருப்பினும், கூட்டாக இருப்பினும், ஜவுளியாக இருப்பினும், ஓர் லிமிடெட் கம்பெனியாக்கி ஒவ்வொன்றும் அக்கம்பெனியின் பிரிவுகளாக இருக்கும்படிச் செய்து எல்லாச் சாமான்களையும் உற்பத்திச் சாலைகளிலிருந்து நேராகத் தருவித்து விற் பது பெரும் பயன் தருமென எண்ணுகிறேன். இப்படிச் செய்வதால் வியாபாரத்தால் ஏற் படும் மனஸ்தாபங்கள் ஒழிவதோடு, வாட கைக்கும் சிப்பந்தி செலவுகட்கும் தனித்தனி ஒவ்வொருவருக்கும் நேரும் செலவில் பெரும் பாகம் மிச்சமாகும். பலர் பங்குதாரராகச் சேர்வாராயின் பலர்க்கும் பொறுப்பு ஒருங்கே ஏற்பட்டு அதனால் வியாபார விருத்தி விரை வில் ஏற்படும். அதை விட்டுக் 'கொள்ளைக்குப் போனாலும் கூட்டு உதவாது' என்ற ஆபாசப் பழமொழியை இன்றுஞ் சிலர் கூறிவருவது விந்தையாக இருக்கின்றது.

## வியாபாரமும் விளம்பரமும்

வியாபார விருத்திக்கு முக்கியமாய் வேண் டப்படுவது விளம்பரஞ் செய்தலேயாகும். மேல் நாட்டு வியாபாரிகள் ஒரு கம்பெனி யைத் தொடங்குவாராயின் அதற்காக வைத் துள்ள முதற்பணத்தில் நான்கில் ஒரு பங் கினை விளம்பரத்திற்கென்றே ஒதுக்கி வைப் பர். பின்பும் ஆண்டுதோறும் கிடைக்கும் வரு மானத்தில் ஒருபாகம் விளம்பரத்திற்காக ஒதுக்கி வைப்பர். ஏன்? நீங்கள் கும்ப கோணத்தில் நடைபெறும் கண் காட்சிக்குச் சென்றிருந்தால் அங்கு வைக்கப்பட்டுள்ள கடைகளில் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் விளம்பரத் தாள்கள் ஒரு பெரிய மூட்டையாகக் குவிந்து விடுவதைப் பார்க்க லாம். ஆனால் நம்மவர்கள் சொற்ப வியா பாரஞ் செய்வதால் விளம்பரத்திற் பணஞ் செலவிட முடிவதில்லை. கூட்டுக் கம்பெனி யாக இருந்தால் விளம்பரமூலம் வியாபாரத் தை விருத்தி செய்வதற்கும் சௌகரியமாக இருக்கும்.

## வியாபாரிகட்குரிய குணங்கள்

பொதுவாகவே இந்திய வியாபாரிகள் மீது ஓர் பழி சுமத்தப்படுவதுண்டு. இந்தியர்கள் உண்மையான விலையைச் சொல்வதும், ஓரே விலையினைக் கூறுவதும் கிடையாதென அனை வரும் கூறுகின்றனர். உலகத்தில் பலரும் கூறுகின்ற பொய்மையும் ஜவுளிக்கடைப் பொய்க்குக் காலணா கூடாதெனுங் கருத் தமைந்த செய்யுளொன்று தனிப்பாடலில் விளங்குகின்றது. இப்பழியினைப் போக்கிக் கொள்ளவேண்டும். கறார் விலை (fixed price) இன்றி பேரம் பேசுவதால் விற்பவருக்கும் வாங்குபவருக்கும் பெருந் தொல்லைகள் ஏற் படுகின்றன. பேரஞ் சொல்லாவிட்டால் வியாபாரம் நடப்பதில்லை எனச் சிலர் கூறு கின்றனர். அது பொருந்தாது. வெள்ளையர் கம்பெனிகளில் போட்ட விலை கொடுத்துச் சாமான்களை வாங்குவோர் நம்மிடம் உண்மை யும் கட்டுப்பாடு மிருந்தால் வாங்கமாட்டார் களா? வர்த்தகர்களுக்கு முக்கியமாக நாண யம், நேர்மை, முயற்சி, சுறுசுறுப்பு, மதிநுட் பம், யூகம், ஒற்றுமை, உறுதி முதலிய குணங்களெல்லாம் ஒருங்கே அமையப் பெற்று வர்த்தகஞ் செய்ய வருவோரது உள்ளங்குளிர இனிமையாக உரையாடுந் திறமையும் பொருந் தியிருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்த அருங்குணங்களெல்லாம் வாய்ந்து வர்த்தகத்தில் சிறப்பெய்தி நம்மவர்களனை வரும் மேன்மையுற வேண்டுமென்பதும் நெச வுத் தொழிலும் லாபந்தரத் தக்க வகையில் நடைபெற வேண்டுமென்பதும் எனது அவா. இதற்கு எல்லாம் வல்ல இளவலாம் முருகப் பெருமான் திருவருள் பாலிப்பாராக!

எங்கள் அழைப்பிற் கிணங்கிக் கஷ்டங்களை பொருட்படுத்தாது விஜயம் செய்த உங்களனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து என்னுரையை இத் துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.


சுபம்! சுபம்!! சுபம்!!!





வர்த்தகர் மகாநாட்டுத் தலைவர்
உயர்திரு. V. S. செங்கோட்டையா
முதலியாரவர்கள், கோவை.



வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர்
உயர்திரு. பெரி. ரு. நடராஜ முதலியாரவர்கள்,
மன்னார்குடி.



வாலிபர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர், உயர்திரு. ஸ்ரீ. விநாயகமூர்த்தி முதலியாரவர்கள், மஞ்சகட்டுக்கொல்லை.



வாலிபர் மகாநாட்டுத் தலைவர் உயர்திரு. C. பன்னிருகைப் பெருமாள் முதலியாரவர்கள், பி. ஏ., பி. எல். திருவிதாங்கூர்.



வாலிபர் மகாநாட்டுத் திறப்புவிழா வாற்றிய பெரியார் உயர்திரு. பாவா. C. கோபாலஸ்வாமி முதலியாரவர்கள், திருவாரூர்.



உ

கோவை ஜில்லா பிரபல வியாபாரியான உயர்திருவாளர்

**வா. செ. செங்கோட்டையா முதலியாரவர்கட்கு**

அன்னார் ஆங்கிரஸஹூ மாசி மாதம் 29—30 தேதிகளில் நடைபெற்ற
தென்னிந்திய செங்குந்தர் நான்காவது

**வர்த்தகர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த சமயம்**

வரவேற்புச் சபையார் உவந்தளித்த

# வரவேற்பு நல்லுரை

**செந்தாமரைத் திருவின் செல்வனெனத் திகழ்மணியே!**

வறுமைப் பிணியின் வாய்ப்பட்டு வருந்திக்கொண்டிருக்கும் சமூகத்திலே தோன்றியும் திருமகளின் அருள்நோக்கிற் கிலக்காகி, இம்மைப் பேறுகளுக்கெல்லாம் இன்றியமையாத உபகரணமா யிருப்பது மட்டுமன்றிச் செவ்வனே கையாளப்படின் மறுமை நலன்களுக்கும் சாதகமாகக்கூடிய செல்வத்திற்கு உறைவிடமாய்த் திகழ்வது தங்கள் திறமையினையன்றோ விளக்குகின்றது? நங்குலத்தவர் வறுமையினின்றும் விடுபட்டுச் சுகவாழ்வுறுதற்கேற்ற வழிகளைப் போதிப்பதற்கு, அவ்வழிகளை அனுபவத்தானே கண்டறிந்த தங்களினும் தகுதி யுடையார் யாரே?

**தொழில் முறையதனைத் துலக்கிய பெரியோய்!**

மனோ வேகத்தையும் பழிக்கவல்ல வேகத்தில் மாறிக்கொண்டிருக்கும் உலகப் போக்கினை ஏறெடுத்தும் பாராது திரேதா யுகத்துக் கைத்தறியிலேயே ஊடாடிக்கொண்டு, 'எங்கள் பாட்டனும் முப்பாட்டனும் நெய்தது முரட்டுக் குட்டைதான்' என வீராப்பு பேசும் ஏழை மக்களுக்கு, தைரியத்தோடும் திறமையோடும் பிரபலமான வியாபாரத் துறையில் இறங்கி, இடைவிடா முயற்சியின் காரணமாக ஐஸ்வரிய தேவதையின் கடாக்ஷம் பெற்று நூற்றுக்கணக்கான ஏழைமக்களுக்கு ஜீவனோபாயம் தரவல்ல உன்னத நிலைக்கு உயர்ந்த ஒரு பெருந் தொழிலினை நாட்டியுள்ள தங்களது காட்சி கண் திறக்காதோ?

**வரைவிலா வண்மைகோள் வளம்பெறு மணியே!**

அரிய முயற்சியான் ஈட்டும் பொருளிற் பெரும்பகுதியைச் சுற்றத்தாரே யனைய குல மக்கட்கு மட்டுமன்றி, குலாபிமானத்தையுங் கடந்த தேசாபிமானப் பெரு நோக்கத்தோடு பொதுவிலே நம் தாய்நாட்டு மக்கட்கும் வரையாது வழங்கி, 'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்' என்னும் முதுமொழியைச் 'செல்வர்க் கழகு செகமெலாந் தாங்குதல்' என மாற்றியமைத்துள்ள தங்கள் வள்ளன்மை என்னே!

**செங்குந்த குலவணியிற் சோபிக்கும் செழுமணியே!**

போற்றற்குரிய திறமையும், திறமையாற் றேடிய செல்வப் பெருவாழ்வும், வாழ்வுக்கேற்ற வண்மையும், வண்மையாதிய அருங்குணங்களாற் பொது மக்களிடையே சம்பாதித்த பெரும் புகழொளியும் கொண்டு மிளிரும் தங்களை, பேரறிவாளராகிய திவ்விய மணிகள் குயிற்றித் திகழும் நங்குலப் பதக்கத்திலே சுடர்விட்டொளிரும் ஒரு செழுமணியாகப் போற்றுகின்றோ மென்பதிலும், அத்தகைய சுடர்மணி இன்னும் பன்னெடு நாள் அழகுடன் திகழவும், அதன் ஒண்மை நாளுக்கு நாள் ஓங்கவும் அருள்புரியுமாறு நங்குல நாயகனை இறைஞ்சுகின்றோ மென்பதிலும் வியப்பென்னே?

இங்ஙனம்:
தங்கள் அன்புக்குப் பாத்திரர்களான

**தென்னிந்திய செங்குந்தர் நான்காவது**
**வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புச் சபையார்.**

திருவாரூர்
12-3-33

உ

வர்த்தகர் மகாநாட்டில் தலைமை வகித்த
கோவை பிரபல பஞ்சு வியாபாரியும் பல மில்லுகளின் ஏஜண்டுமான
உயர் திருவாளர்

# V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள்

# சொற்பொழிவு

*அறிவிற் சிறந்த சீமாட்டிகளே!*
*பெரியோர்களே!!*
*சகோதரப் பிரதிநிதிகளே!!!*

திவ்ய க்ஷேத்திரமான திருவாரூரில் நடைபெறுகிற நமது மரபினர் வர்த்தகர் மகாநாட்டில் தலைமை வகிக்கும்படி என்னை அழைத்த உபசரணைக் கமிட்டியாருக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். இவ்வித மகாநாட்டில் தலைமை வகிக்கக் கூடிய அனுபவமுள்ள கனவான்கள் நம் மரபில் அநேகர் இருந்தும் எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்கு நன்றி பாராட்டுகிறேன். இப்பதவியை நான் ஏற்றுக்கொண்டதன் காரணம் நான் இதற்குமுற்றிலும் அருகதையுடையவன் என்பதால் அல்ல. தமிழ் உலகின் பற்பல ஊர்களிலிருந்து இவ்விடம் விஜயம் செய்திருக்கும் பெரியோர்களைத் தரிசித்து அவர்களுடன் அளவளாவும் பாக்கியத்தை அடைய வேண்டும் என்கிற அவா மிகுதியினாலேயே இப்பதவியை ஏற்றுக்கொண்டேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இம் மகாநாட்டின் நடவடிக்கைகள் இனிது முடிய இவ்விடம் கூடியிருக்கும் எல்லோரும் எனக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

## நமது நோக்கம்

நமது மரபினர்கள் வர்த்தகத் துறையில் அபிவிருத்தி அடைவதற்கு ஏற்ற மார்க்கங்கள் எவை, நமது சமூகத்தைச் சேர்ந்த வியாபாரிகளுக்குக் கிடைக்கக்கூடிய லாபம் நம்மைச் சேர்ந்த ஏழைச் சகோதரர்களுக்கும் பயன்படும்படி செய்வதற்கு என்ன உபாயங்கள் தேவை— என்பன போன்ற விஷயங்களைத் தீர்க்கமாக ஆலோசித்து அதை ஒட்டிய தீர்மானங்களைத் தக்கபடி அமுலுக்குக் கொண்டுவரும் வகையில் எப்படி நமது சங்கத்தைப் பலப்படுத்தலாம் என்பதுதான் இம்மகாநாட்டின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டு மென்பது எனது கோரிக்கை. இது விஷயமாகச் சபையோர்களுடைய அபிப்பிராயங்களைத் தாராளமாய் வெளியிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சிறப்புடன் வாழ்ந்த நமது முன்னோர்களும் தற்காலத்தில் மேதாவிகளான பிற நாட்டினர்களும் நம் நாட்டு வியாபார சிகாமணிகளும் நமது தேசபக்தர்களும் நமக்கு வழி காட்டிகளாய் இருக்கிறார்கள். நாம் ஏற்றுக்கொண்ட கைங்கரியம் திருப்திகரமான முறையில் பூர்த்தி அடைய மேற் கூறியவர்களின் உன்னதமான லக்ஷியங்களை மனதிலிறுத்தி, நம்மால் கூடியவரை அவர்கள் வழியைப் பின்பற்ற முயலவேண்டும்

## வர்த்தக இந்தியா

சத்தியமே நித்தியம் என்பது எக்காலத்தும் எல்லா நாட்டினர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டதோருண்மை. சத்திய காமன் உண்மையைப் பேசியதினால் பிரம்ம ஞானத்தை அடைவதற்கு அருகதை யுடையவனென மதித்து மகரிஷி ஒருவர் அவனைத் தம் சீடராய் ஏற்றுக்கொண்ட மாண்பைப் பற்றி உபநிடதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகிறேன். "தங்கள் ராஜ்யத்தில் வர்த்தகம் நடத்துபவர்கள் சத்யவான்களா யிருக்கிறார்களா?" என்று நாரதர் தர்மராஜனைக் கேட்டாராம். "நூலும் தறிகளும் கொடுத்து உதவுவதோடு நெசவுக்காரர்களுடைய குடும்பத்தாருக்கு நாலைந்து மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களும் கொடுத்து உதவி வருகிறீர்களா? இதுபோல இதர தொழிலாளர்களையும் அரசாங்கம் காப்பாற்றிவருகிறதா" என்கிற கேள்விகளையும் நாரதர் கேட்டதாக மஹா பாரதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பூர்வ இந்தியாவிலே வர்த்தகர்களையும் தொழிலாளர்களையும் பாதுகாப்பது அரசாங்கத்தாரின் கடமையாக இருந்ததென்பது இதனால் விளங்குகிறதல்லவா? இவ்வித சௌகரியங்கள் நம் முன்னோர்களுக்கு ஏற்பட்டிருந்ததால்தான், தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் நெசவுத் தொழிலைக் கைக்கொள்ளவும் அழியாப் புகழ்பெற்ற திருக்குறளை உலகத்திற்குக் கொடுத்துதவவும் சாத்தியமாய் இருந்தது. இது ஒரு தனிப்பட்ட உதாரணம் அல்ல. பழைய தமிழ் நூல்களை இயற்றிப் பெயர்பெற்ற ஆசிரியர்கள் இது போலவே வர்த்தகத்தில் அமர்ந்திருந்ததாய் ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் வர்த்தகத்தில் கவனத்தைச் செலுத்துவதும் கலைகள் வளர்ச்சியில் நேரத்தைச் செலவிடுவதும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட காரியங்கள் அல்ல என்பது இந்தச் சம்பவங்களிலிருந்து நன்றாய் விளங்குகின்றது. இக் காலத்திய வர்த்தகர்களுக்கு இது ஒரு சிறந்த படிப்பினையாகும்.

இந்துக்களுக்குப் பொதுவாகக் கடவுள், மோக்ஷம், மறுஜென்மம் ஆகிய விஷயங்களில் தான் மனம் நாடுகின்றது; இல்லறவாழ்க்கைக்குத்தேவையான அம்சங்களில் விசேஷ கவனம் செலுத்துகிறதில்லை என்று ஒரு சாரார் நினைப்பது ஆதாரமற்ற அபிப்பிராயம் என்பதைச் சரித்திரக்காரர்கள் தற்காலத்தில் எடுத்துக் காட்டுகிறார்கள். இகபர சுகங்களை நன்றாய்ப் பாவித்துக் குடும்ப வாழ்க்கையை நமது முன்னோர்கள் நடத்தினார்கள் என்பதற்கு,



*"அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க்*
*கிவ்வுலக மில்லா கியாங்கு"*

என்ற திருக்குறளே தக்க சான்றாகும். "திரைகடலோடியும் திரவியந் தேடு" என்பது ஔவைப் பிராட்டியின் முது மொழி. பொருள் சேகரிப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் அவசிய மில்லையென்பது இதன் கருத்து அல்ல. உண்பதும், உடுத்துவதும், சுகப்படுவதும் மனித வாழ்க்கையின் முழு லக்ஷணங்களல்ல. தனத்தைச் சேகரித்த வரையில் அவரவர் குடும்பத்தினருக்கும் சுற்றத்தார்களுக்கும், ஏழைகளுக்கும் அதை உபயோகப்படுத்துவதுதான் பெரிய மனிதர்கள் செய்ய வேண்டிய சிறந்த சேவை. இவ்வழியைப் பின்பற்றும் பெரியோர்கள் எந்தச் சமூகத்தில் நிறையத் தோன்றுகிறார்களோ அந்தச் சமூகந்தான் உலகத்தின் மதிப்பிற் குரிய சமூகமாய் என்றும் விளங்கும் என்பதை யாவரும் ஞாபகத்திலிருத்த வேண்டும்.

## பிற நாடுகள்

வியாபாரத் துறையில் விசேஷ அபிவிருத்தி அடைந்திருக்கும் அமெரிக்காவை ஓர் உதாரணமாக எடுத்துக்கொண்டால் அந்த நாட்டில் அநேக கோடீஸ்வரர்களும், தர்மிஷ்டர்களும் இருப்பதாகத் தெரிகிறது. போர்டு (Ford) என்கிற பெரியார் தமது மோட்டார் கம்பெனியின் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நவீன முறையில் தொழில் கற்றுக் கொடுப்பதுடன் அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தவர்களுக்கும் தேவையான கல்வி வசதி, சுகாதார வசதி, போக்குவரவு வசதி ஆகிய இவைகளைத் தாராள சிந்தையுடன் ஏற்படுத்தியும் வருகிறார். இது போலவே ராக்பெல்லர் என்ற பெரியாரும் ஏழை மக்களுக்கு உதவக்கூடிய பற்பல வழிகளில் தமது செல்வத்தை உபயோகித்து வருகிறார். உலகப் பிரசித்தி பெற்ற ராக்பெல்லர் சங்கத்தின் சுகாதார இலாகாவின் பிரதிநிதியாகச் சில தினங்களுக்கு முன் கன்னி பியர்ட் அவர்களும் அவர் சகோதரியும் கோயமுத்தூர் நகரத்தையும் கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்ந்த சிசு தர்ம சாலைகளையும் பார்வையிட்டார்கள். பொதுவாய்ச் சுகாதாரத்தையும், சிறப்பாய்ச் சிசு பரிபாலன வசதிகளையும் ஆதரிப்பதற்காக அமெரிக்காவுக்கு மட்டுமல்ல இந்தியா தேசம் உள்பட உலகெங்கும் ஒருங்கே பிரயோஜனம் அடையும்படி ராக்பெல்லர் சங்கத்தார் கோடிக்கணக்கான பவுன்களைச் செலவிட்டு வருகிறார்கள். இங்கிலாந்திலிருந்து இரண்டு உதாரணங்களை எடுத்துக்கொள்ளுவோம். கோக்கோத்தூள் விற்பனை செய்யும் கேட்பரி (Cadburys) கம்பெனியாரும் சோப் உற்பத்தி செய்யும் சன்லைட் கம்பெனியாரும் அவர்கள் லாபத்திலிருந்து அநேக ஆயிரம் பவுன்களை ஒதுக்கி வைத்து அவரது தொழிலாளர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காகச் செலவிட்டதால் நவீன வியாபார உலகத்தில் பேரும் புகழும் பெற்றிருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் இது சமயத்தில் நான் குறிப்பிடவேண்டிய அவசிய மென்ன? செல்வமென்பது அவரவர்களுக்கு மட்டு மல்லாமல் ஏழை மக்களுக்கும் பொது நன்மைகளுக்கும் பயன்படும்படி கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு சாதனம் என்றும், உலோப புத்தி கொண்டு இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் இழந்துவிடுவது மடமையாகும் என்னும் விளக்கும் பொருட்டேதான்.

## தேச பக்தர்கள்

நமது தேசத்தின் வர்த்தகம் விருத்தி அடைவதற்கு அரும்பாடு பட்டவர்களில் தலை சிறந்து விளங்குபவர் டாடா குடும்பத்தினர். இந்தியா முழுதுக்கும் முதன் முதலாகப் பஞ்சு இயந்திர சாலையை நாகப்பூரில் ஸ்தாபித்த பெருமை காலஞ்சென்ற சர். ஜெம்ஷட்ஜீ நசர்வான்ஜீ டாடா என்கிற பெரியாரைச் சேர்ந்தது. மேற்குத் தொடர் மலையில் உள்ள பிரம்மாண்டமான நீர் வீழ்ச்சியிலிருந்து மின்சார சக்தியை எடுத்துத் தந்திக் கம்பங்கள் மூலம் பம்பாய் நகரத்திற்குக் கொண்டு போய் அவ்விடமுள்ள இயந்திரசாலைகளுக்கும், டிராம் வண்டிகளுக்கும், ரயில் வண்டிகளுக்கும் சரசமான விலைக்கு விற்று லாபம் அடைய முடியும் என்கிற மகத்தான எண்ணம் அப் பெரியார் மனதில் தோன்றி அவர் குடும்பத்தாரின் இணையற்ற சக்தியால் அப்படியே சாதிக்க, அக்காரியம் இன்றைக்குச் சர்வ சாதாரணமானதொரு காரியமாய் நடைபெற்று வருகிறது. அவரும் அவரது சத்புத்திரர்களும் வட இந்தியாவிலுள்ள ஒரு மலைப்பிரதேசத்தை நவீன நகரமாக்கி அவ்விடமுள்ள மகத்தான எஃகு சாலையிலிருந்து உற்பத்தியாகும் சாமான்களை இந்தியா முழுவதும் சரசமான விலைக்கு விற்கக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். ஜெம்ஷட்பூர் அல்லது டாடா நகர் என்று விளங்கும் இடத்தில் வசிக்கும் தொழிலாளர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும், நிபுணர்களுக்கும் ஏராளமான ரூபாய் செலவில் நவீன வசதிகள் சேகரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பெங்களூரில் ஏற்பட்டிருக்கும் டாடா ஆராய்ச்சிச் சாலையும் அன்னிய நாடுகளுக்குப் போய் உயர்தரக் கல்வி கற்றுவரும் இந்திய மாணவர்களுக்குப் பொருளுதவி செய்யும் முறையும் அப் பிரபல குடும்பத்தாரின் தாராள குணத்தைக் காட்டுகிறது. இந்தியாவிற்குள் தபால்களை ஆகாய விமானங்கள் மூலமாக எடுத்துச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை வெகு சமீப காலத்தில் இப்பெயர் பெற்ற டாடா கம்பெனியார் பூர்த்தி செய்திருக்கிறார்கள். இவ்வளவு அற்புதமான காரியங்களைச் செய்து அழியாப் புகழ்பெற்ற இக்குடும்பத்தினர் பார்சி வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதும் பார்சி வகுப்பினர் இந்தியாவிலுள்ள சிறுபான்மைத் தொகுதியினர்களுள் ஒரு சிறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதும் யாவரும் அறிந்த விஷயம். அப்படியிருந்தும் பெரும்பான்மைக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு சிலர் கூட சாதிக்க முடியாத காரியங்களை யெல்லாம்

இவர்கள் சாதித்து விட்டார்கள் என்பதை ஆலோசிக்கும் பொழுது புத்திமான் பலவான் என்கிற உண்மை வெளிப்படுகிறது. இந்த உண்மையைச் சற்று நமது மரபினர் சகலரும் ஆற அமர ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது போலவே தமிழ் நாட்டில் பெருமை வாய்ந்த நகரத்தார் மரபின் முன்னேற்றத்தைப்பற்றிச் சற்றுக்கவனிப்போம். அவர்களும் ஒரு சிறுபான்மைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தான். ஆனால் திரைகடலோடியும் திரவியம் தேடும் சக்தியைக் கொண்டவர்கள். கடவுள் பக்தி, தர்மசிந்தை, திட நம்பிக்கை, விடாமுயற்சி, மனோபலம், புத்தி கூர்மை ஆகிய அரும்பெருங் குணங்களைக்கொண்டு வியாபார உலகில் அவர்கள் தேசமெங்கும் புகழ்பெற்றிருக்கிறார்கள். சத்திரங்கள், கோயில்கள் கட்டுதல், புதுப்பித்தல் போன்ற பழைய மாதிரி தர்மங்களுக்குப் பதிலாக நவீன உலகப் போக்கை அனுசரித்துக் கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் தங்கள் ஐசுவரியத்தைத் தற்காலத்தில் செலவிட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் அம்மரபினரில் தலைசிறந்து விளங்குபவர் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர்களாவர் என்று சொல்லவும் வேண்டுமோ? சிதம்பரத்தில் ஏற்பட்டுள்ள சர்வ கலாசாலையானது அவரது நிகரற்ற ஈகைக் குணத்தையும் பரந்த ஞானத்தையும் காட்டுகிறது. அவர் போன்ற பெரியோர்களின் உதாரணம் செல்வம் படைத்த சீமான்களுக்கெல்லாம் குன்றின்மேல் தீபம் போல் விளங்குமென நம்புகின்றேன்.

### சர் ராபர்ட் ஸ்டேன்ஸ்

என் சொந்த அனுபவத்தைப் பொறுத்தும் இச்சந்தர்ப்பத்தில் சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உலகானுபவம் படைத்தவரும் வியாபாரத் திறமை நிறைந்தவருமான சர் ராபர்ட் ஸ்டேன்ஸ் அவர்களுடைய வாழ்க்கையின் புனிதத்தைப்பற்றி எவ்வளவு சொன்னாலும் தகும். சென்ற சுமார் இருபத்தைந்து வருஷங்களாகக் கோயமுத்தூரிலுள்ள ஸ்டேன்ஸ் கம்பெனியாரிடம் வியாபாரம் நடத்தி வருகிறேன். ஆரம்ப முதல் அவர்களிடமிருந்து ஒரு முக்கிய தத்துவத்தை நான் உணர்ந்து நடப்பது சாத்தியமாயிருக்கிறது. அதாவது நாணயக் குறைவான வியாபாரம் ஒருக்காலும் பயன்படாதென்பதாகும். தக்க லாபமடையச் சத்தியம் தவறி நடப்பது யுக்தமல்ல; அவசியமுமில்லை. ஒரு வியாபாரிக்கு நாணயமே பிரதான லக்ஷணம். மனத்தூய்மையும், தெய்வ பக்தியும், ஜீவகாருண்யமும் நிறைந்தவராகிய சர் ராபர்ட் ஸடேன்ஸ் அவர்களுடைய வாழ்க்கை முறையைக் கவனிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது எனது பாக்கியமென்றே நம்புகிறேன். ஆங்கில வியாபாரிகளில் ஒருவராக இருந்தும் ஐரோப்பிய பிள்ளைகளுக்குக் கல்வி வசதி ஏற்படுத்திக்கொடுப்பதில் மனமுவந்தது போலவே இந்திய மாணவர்களுக்கும் கல்வி வசதிக்கு வேண்டிய உதவியை அவர் தாராளமாய்ச் செய்து வருகிறார். அவரும் அவரது குடும்பத்தினர்களும் இந்தியாவையே தங்களுடைய சாஸ்வத இருப்பிடமாக வைத்துக்கொண்டு இந்தியாவும் இங்கிலாந்தும் ஒருங்கே பயன் அடையும் வழியில் இரு தேசத்தினரும் ஒன்றுகூடிப் பொதுவாக வியாபாரத்தை நடத்துவது சாத்தியம் என்பதை ரூபித்துக்காட்டியிருக்கிறார்கள்.

### பொது

புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வரும் தருவாயில் இந்திய வியாபாரிகளுடைய நிலைமை என்னவென்று கவனித்தால், முன்னிருந்ததைவிட அவர்களுடைய பொறுப்பு அதிகரிப்பதற்குத் தகுந்த அளவில் அனுகூலமும் எதிர்பார்க்கக் கூடியதாய் இருக்கிறது. இப்புதிய யுகத்திலே இந்தியாவிலும் பிற நாடுகளிலும் ஏற்பட்டுள்ள சகல பிரச்சினைகளையும் நமது வியாபாரத்தலைவர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. பழய கிராம வழக்கப்படிப் பண்டங்களைக் கொடுத்துப் பண்டங்களை மாற்றும் காலம் போய் அகிலதேச அளவில் தற்கால வியாபாரம் நடந்தேற வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் பஞ்சு வர்த்தகம், நூல் வர்த்தகம், நெசவுக்காரர்களின் பொருளாதார நிலைமை ஆகிய விஷயங்கள் மிக்க சிக்கலடைந்து பெரிய பெரிய நிபுணர்களுக்கும் அனுபவசாலிகளுக்கும் எளிதில் புலனாகக்கூடிய நிலைமையில் இல்லாமலிருக்கின்றன. இதல்லாமல் இந்தியாவிலும் இதர நாகரிக தேசங்களிலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கவனிக்கும்போதும் கோடிக்கணக்கான மக்கள் இந்தியாவிலும் பிறநாடுகளிலும் வேலையில்லாமல் திண்டாடுவதைக் கவனிக்கும்போதும் வியாபாரிகள் ஒன்றுகூடி விமோசனம் தேடுவதில் தங்கள் முழுப் பலத்தையும் கவனத்தையும் செலுத்த வேண்டியது அத்தியாவசியமானது என்பது வெளிப்படை. ஆதலால் ஆற்றலும் அறிவுமுள்ள நம்மரபைச் சார்ந்த வியாபாரத் தலைவர்கள் தக்க பரிகாரங்களைத் தேடவேண்டும். நம்மைப்போல வியாபார சௌகரியங்களை அனுபவிக்க முடியாத நமது மரபினர்களுக்குக் கூடுமான உதவியை நமது சங்கத்தின் மூலம் செய்து கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம். வியாபாரிகள் தொன்றுதொட்டு வழக்கத்தில் வைத்திருக்கும் "மகிமை" என்ற வசூல் முறையானது சுலபமான வழியில் பெரிய தருமகாரியங்களைச் சாதிப்பதற்கு ஒரு சிறந்த சாதனமென்றே கருதுகின்றேன். அதை ஏட்டு மகிமையாய் நிற்கவிடாமல் சீர்பெறக் கண்காணித்து ஏழ்மை நிலைமையிலிருக்கும் தகுதியுள்ள மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துத் தொழிற்கல்வி, வியாபாரக் கல்வி, ஆகிய துறைகளில் தற்காலம் ஏற்பட்டுள்ள வசதிகளைத்தும் இதன் மூலம் எளிதில் கிடைக்கும்படி செய்ய வேண்டும். கூட்டுறவு முறையில் பாங்கிகளும் வியாபாரங்களும் நடத்துவதில் உள்ள நன்மைகளை ஆராய வேண்டும். காலப்போக்கை அனுசரித்துப் புதிய புதிய துறைகளில் வியாபாரம் செய்யக்கூடிய



ஊக்கமும் தைரியமும் சக்தியும் நமது வாலிபர்களுக்கேற்படக்கூடிய வழிகளில் கல்வி புகட்ட வேண்டும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல
கால வகையினானே"

காலம் மிக வேகமாயும் மாறுதலடைந்துகொண்டும் போகிறது. ஜாதிக்கேற்ற தொழில் என்பதோ அல்லது ஒரு தொழிலுக்குள்ள ஜாதி என்ற குருட்டுச் சித்தாந்தமோ கிடையாது. ஆதலால் காலத்திற்கேற்றவாறு நம்முடைய ஆசாபாசங்களையும் லக்ஷியங்களையும் மாற்றிக்கொள்ளுவதே சிறந்த மார்க்கம். அப்போதுதான் இந்தப் போட்டி உலகத்தில் அவர்கள் வருங்காலத்தில் தலையெடுக்கவும் அவர்கள் சுற்றத்தாருக்கு வர்த்தக முறையில் உதவி செய்யவும் சாத்தியப்படும். ஒற்றுமை, பரஸ்பர உதவி, ஏழைகளுக்கு ஊழியம் என்பதே நமது லக்ஷியமாயிருத்தல் வேண்டும். வர்த்தகத்தில் அமரும் வாலிபர்களுக்குக் கவி சுப்பிரமணிய பாரதி பாடிய சுவை நிரம்பிய பாட்டுகளைச் சொல்லித் தங்களிடம் பணிவுடன் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

"முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே
மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற் கரையிலே.
காசி நகர்ப்புலவர் பேசு முறைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்க மளிப்போம்.
பட்டினி லாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக் கவை கொடுப்போம்."

சகோதர சகோதரிகளே!

தாங்கள் இதுகாறும் இவ்வளவு அன்புடனும் அமைதியுடனும் என்னுடைய வார்த்தைகளுக்கு செவி சாய்த்தது பற்றியும் இந்த மகாநாட்டுத் தலைமைக்கு என்னைக் கோரியது பற்றியும் மறுமுறையும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சுபம்! சுபம்! சுபம்!

---

உ

ஆங்கீரஸஹூ மாசி மாதம் 29—30 தேதிகளில் நடைபெற்ற
தென்னிந்திய செங்குந்தர் நான்காவது
வாலிபர் மகாநாட்டுத் திறப்புவிழா வாற்றிய
திருவாரூர் நகர பரிபாலன சபைத் தலைவர் உயர் திருவாளர்
பாவா சி. கோபாலசாமி முதலியாரவர்கட்கு
அச்சமயம் வரவேற்புச் சபையார் வாசித்தளித்த

## வரவேற்பு நல்லுரை

வளம்பெறுங் குடிவரு வாலிபச் சிங்கமே!

செல்வத் திருமகள் விரும்பி யுறையும் செந்தாமரையேயென வளம்பல செறிந்து, பொது மக்களது பெருமதிப்பும் சமஸ்தானத்தோடு நெருங்கிய உறவுங் கொண்டு விளங்கிய பெருங்குடியிலே தோன்றி அத்தகைய பெரிய அந்தஸ்தினைக் கைநெகிழ விடாது திறமையோடு காப்பாற்றி வருவதோடு, வாலிப மென்பது இளவயதல்ல, தளராத் திடமே, திறமையே என்னும் அரிய உண்மையினை நிலைநாட்டுவது போல வாலிப மிடுக்கெலங் கொண்டு ஒளிரும் தங்களை வாலிபர்களாகிய எங்களது மகாநாட்டினைத் திறந்து வைப்பதற்குத் தேர்ந்தெடுத்த எங்கள் தலைவர்களது கூரிய மதியென்னே! குளவி தன்னிற மாக்குவதுபோல் தங்களது பலாட்டிய உள்ளம் எங்கள் உள்ளங்களிலேயும் வன்மையை எழுப்புகின்றது; தங்களது காந்த தேகம் எங்கட்கும் என்றும் தளரா வாலிபம் வழங்குகின்றது.

ஜாதிச் சமயச் சழக்கெலாங் கடந்தோய்!

பல்வேறு ஜாதிகளும் சமயங்களும் மலிந்து கிடக்கும் ஜாதிச் சமயக் காட்சிச்சாலை போன்ற நமது பாதகண்டத்திலே, வகுப்போடு வகுப்பும் சமயத்தோடு சமயமும் பிரிவினை பாராட்டி வீணே சச்சரவு செய்துவரும் தென்னிந்தியாவிலே ஜாதிப் பிரிவினைகளெல்லாம்

அர்த்தமற்றவை, ஆவறவை ஒழித்துச் சமரசத்தையும் சமத்துவத்தையும் பரப்புவதே தேச சேவைக்கு முதற்படியாகும் என்னும் தூய உணர்ச்சியோடு எல்லா ஜாதியினர்க்காகவும் எல்லா சமயத்தினர்க்காகவும் பேதமின்றி உழைத்து வருவதால் எல்லா வகுப்பினரும் போற்றிப் பாராட்டும் தாங்கள், முன்னேற்ற ஏணியின் தாழ்ந்த படியிலே நின்றுகொண்டு மற்ற ஜாதியினரோடு சமன் கொள்ளுதற்காக முயன்றுகொண்டிருக்கும் எங்களுக்கு வழிகாட்ட வந்தது எங்கள் நற்றவப் பயனே யன்றோ?

போது மக்கள் வாழ்த்தினைப் பூண்டிடு போற்றினேய்!

எல்லா மக்களும் கோரும் தங்கள் நன்மையினை, தங்களது பரிவுக்கும் அன்புக்கும் அபிமானத்துக்கும் ஆதரவுக்கும் பாத்திரர்களாக உள்ள நாங்களும் முழுமனதோடு கோரி, அதனைத் தாராளமாகத் தங்கட்கு வழங்கியருளுமாறு கருணைநிதியினைப் போற்றுவதுடன், தங்களைப் போன்று நாங்களும் உருவிலேயும் உணர்விலேயும் வாலிபச் சிங்கங்களாய்த் திகழ்வோமென்னும் எங்கள் திடமான சபதத்தையே தங்கட்குக் கைம்மாறாகச் செலுத்துகின்றோம்.

இங்ஙனம்

தங்கள்பால் என்றுந் தளரா அன்புகொண்டுள்ள

தென்னிந்திய செங்குந்தர் நான்காவது

வாலிபர் மகாநாட்டு வரவேற்புச் சபையார்.

---

**Speech delivered by**

***Mr. Bava C. Gopalasami Mudaliar Avl.,***

(Chairman, Municipal Council, Tiruvarur)

IN OPENING

**THE FOURTH YOUTHS' CONFERENCE**

OF THE

**SOUTH INDIAN SENGUNDARS**

***HELD AT TIRUVARUR***

**ON 12th AND 13th MARCH, 1933.**

### Delegates and Members of the Youths' Conference,

It gives me very great pleasure to be privileged to open this Youths' conference. I shall consider it a special privilege to do so, and any remarks that I may make in the course of my addressing you, I hope, will be taken in the right spirit and especially on an occasion like this and in the present state of our transition. You all know and all of us are most anxiously and eagerly expecting the publication of the "WHITE PAPER" in the course of the next week which to us the elders here, is the site of the promised land for which our patriots have been working very hard for the past half a century.

வாலிபர் மகாநாட்டுத் திறப்பு விழாவாற்றிய

திருவாரூர் நகரபரிபாலன சபைத்தலைவர்

உயர்திரு. பாவா C. கோபாலசாமி

முதலியாரவர்கள்

## சொற்பெருக்கு

வாலிபர் மகாநாட்டுப் பிரதிநிதிகளே

அங்கத்தினர்களே!

இந்த வாலிபர் மகாநாட்டினைத் திறந்து வைக்கும் பாக்கியம் பெற்றமைக்காக யான் பெரிதும் மகிழ்கின்றேன். இப்பணியை யாற்றுவதை யொரு பெருங் கௌரவமாக யான் பாராட்டுவதோடு, இத்தகைய சந்தர்ப்பத்தில், அதிலும், மாறிக்கொண்டிருக்கும் நமது தற்போதைய நிலையில், எனது திறப்புரையில் யான் கூறும் விஷயங்கள் செவ்வனே பொருள் கொள்ளப்படுமெனவும் நம்புகின்றேன். கடந்த அரை நூற்றாண்டாக நமது தேசாபிமானிகள் கடிதே உழைத்ததன் பயனாக நமக்குக் கிடைக்கும் உரிமைகள் யாவை யென்பதை விளக்கும் 'வெள்ளைக் காகிதம்' என்னும் சர்க்கார் அறிக்கை அடுத்த வாரத்தில் வெளியாகப் போவதை நீங்களனைவரும் அறிவீர்கள்; அதனை நாம் மிகமிக ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்?



To you, the Youths of this country, it has been given to enjoy the benefits thereof, and work it out for the advantage of our country. It teems with opportunities of nationalisation of our Government. The nationalisation of the Government involves and includes within itself *inter alia* the nationalisation of education, industries and other economic possibilities of the country which go to increase the natural prospertity of the country. In this connection, I should like to say a word first on education, because that is the subject with which the youths are most concerned. It is an interesting fact upon which you have to be congratulated that famous poet—Ottakuthar hailed from your own community and he was also the prime minister of the successive reigning Kings of the times he was living in the 12th century A. D. Traditions also have it that your community had contributed no mean quota to the militia of the Chola kindom, and last but not the least you had also contributed to the development of the material and economic resources of the country, by the members of your community taking up to the weaving industry and manufacture of clothes. Therefore it is abundantly manifest that in the future nationalisation of the country which is fast approaching, you must take your proper share and part towards its successful working.

It is a notorious fact that education as at present imparted under the present system is not at all sufficient to meet the needs of the country and has only resulted, in the words of that great scientist and patriot Sir P. C. Ray, "in the mass production of graduates." Analysed carefully, the present university education, besides largely contributing to the members of unemployed, has practically disabled the University alumni from being useful in various spheres. In the scheme of national education, the syllabus must be so framed as to make him stand on his own legs without waiting for Government service. National education ought not to be narrow in its outlook. I should like it to be distinctly understood that in referring to national education, my object is, not to subordinate the study of English to that of vernaculars of the country. The defect in the present system has been to give prominence to English much to the to the neglet and detriment of the languages of the country. So, nationalisation of education must not be framed as to be subversive of the present system, or as if it were retaliative. It is my considered view that the study of the

அதனை நமது தேசத்துக்கு நன்மை பயக்குமாறு பயன்படுத்தி அதனாலேற்படும் பயன்களை யனுபவிக்கும் பாக்கியம் இத்தேசத்து வாலிபர்களாகிய உங்களுக்கு உண்டு. நமது துரைத்தனத்தைத் தேசிய துரைத்தனமாக்குதற்கேற்ற சந்தர்ப்பங்களை அது அளிக்குமென எண்ணுகிறேன். துரைத்தனத்தைத் தேசியப்படுத்துவதில் தேசத்தின் கல்வியையும், தொழில்களையும் இதர முன்னேற்றத் துறைகளையும் தேசியப்படுத்துவது அடங்கும். இந்தச் சந்தர்ப்பத்தில், வாலிபர்கள் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய கல்வியைப்பற்றிச் சிறிது கூற விரும்புகிறேன். பெரும்புகழ் படைத்த கவியரசர் ஒட்டக்கூத்தர் உங்கள் குலத்திலே அவதரித்து, 12-ஆம் நூற்றாண்டில் மூன்று மன்னர்க்குப் பிரதம மந்திரியாயிருந்தது மிகவும் பாராட்டத் தக்கதாகும். உங்கள் குலம் சோழ அரசாங்கத்தின் சைனியத்திற்கு ஒரு பெரும்பகுதியை வழங்கியதோடு நெய்தற் றொழிலை மேற்கொண்டதால் தேசத்தின் பொருள் வளர்ச்சிக்கும் இதர முன்னேற்றத்திற்கும் பெருந்துணை புரிந்ததென்பது வழக்காறுகளில் அறியக்கிடக்கின்றது. ஆகவே, சமீபத்திலேயே நாம் அடையப்போகும் தேசிய அரசாங்கத்தில் நீங்கள் தகுந்த அந்தஸ்தினை வகித்துத் தகுந்த முறையிலே அதன் சித்திக்காக உழைக்க வேண்டுமென்பது கூறாமலே விளங்கும்.

தற்காலத்திலே தற்போதைய முறையிலே போதிக்கப்படும் கல்வி தேசத்தின் குறைகளைப் பூர்த்தி செய்ய உதவாதென்பதும், நமது பேரறிஞரும் விஞ்ஞான நிபுணரும், தேசபக்தருமான சர் பி. சி. ரே அவர்கள் கூறியது போன்று தற்போதைய கல்வி பட்டதாரிகளையே மலியச் செய்கிறதென்பதும் வெளிப்படையாகும். ஆராய்ந்து பார்க்கின் தற்காலத்திய சர்வ கலாசாலைகளால் போதிக்கப்படுங் கல்வி வேலையில்லாத் திண்டாட்டத்தை வளர்த்து வருவதோடு அதிற் பயிலும் மக்களையும் பல துறைகளிற் பயனற்றவர்களாக்குகிறதென்பது விளங்கும். ஆகவே, இனி வரக்கூடிய சீர்திருத்தத்திலே கல்வி பயில்வோன் சர்க்கார் சேவையை நாடிக் காத்துக் கிடக்காமல் சுயாதாரத்தில் வாழக்கூடியபடி பாடதிட்டங்களை மாற்றியமைத்தல் மிக அவசியமாகும். தேசியக் கல்வி குறுகிய நோக்கிய முடையதா யிருத்தல் கூடாது. தேசியக் கல்வி என்பதால் ஆங்கிலத்தைச் சுதேச பாஷைகளுக்கு இரண்டாந்தரமாக்கி அதன் மதிப்பைக் குறைக்கவேண்டுமென்பது எனது நோக்கமல்ல. தற்போதைய முறையில் தேச பாஷைகளெல்லாம் புறக்கணிக்கப்பட்டு ஆங்கிலமே உச்சநிலையி லேற்றப்பட்டிருக்கிறதென்பதே குறைபாடாகும். அதனால் இனி ஏற்பட வேண்டிய முறை தற்போதைய முறையை அடியோடு கவிழ்த்துவிடுவதா யிருத்தல் கூடாது. இனி வரக்கூடிய எத்தகைய முறையிலும், ஆங்கிலத்தோடு சமமான மதிப்பைச் சுதேச பாஷைகட்குக் கொடுக்கலாமே யொழிய, இன்னும் சிறிது காலம் வரை, ஆங்கிலத்தை அடியோடு ஒழிக்க முடியாதென்பது எனது அபிப்பிராயமாகும்

English language could not be displaced for some considerable time in any scheme of national education that may be adopted, though an equal conspicuos place may be given to the vernaculars of this country. In the federal constitution that is contemplated, English language must be a vehicle of communication among the composing units. The present educational policy which based upon the education despatch of Lord Macaulay, was framed solely with a view to impart a knowledge of English language to the Indians to enable them to be useful to the English merchants and their Government in this country, with such changes as have been necessitated by the changes in the administration of this country that have been adopted from time to time. It cannot, therefore, be expected to have been framed to suit the needs and aspirations of the people of this country. Now the opportunity has come or is about to come. It behoves you to take time by forelock when the opportunity offers itself, to cast it in such a way as to be beneficial to the nation. This is neither the occasion, place, nor for me to go into the details of the changes that have to be wrought in framing a national scheme of education. Experts there are-patriots who have grown grey in the service of the country whose part it would be to forge it. I cannot leave the subject of education without referring to the subject of discipline, which must form an integral part of the educational scheme. You are all young, and it is necessary, therefore, that before you become useful and good citizens, you must be well-desciplined and be able to appreciate the value and importance of obedience to the constituted authority and team work, for they are the implications of democracy. While every member is entitled to form his own opinion on any given subject, he is bound and equally expected to refer to the opinions of every other member, and especially to those of persons, who by common consent are supposed to have devoted time and thought to such questions in the larger interests of the Country and her people. What is more essential you must be bound by the opinion of the majority, however contrary to your own it might be. Nay, you must accept it, adopt it and work it, as if it were your own opinion. I have already said that you have been in the military, and so it may not be out of place for me to suggest to you the need to recall the spirit of military discipline that lurks latent in your community.

யோசனையிலிருக்கும் ஐக்கிய அரசாங்கத்தில் அதன் அங்கங்களுக்குள் அபிப்பிராயங்கள் கலப்பதற்கு ஆங்கிலமே தக்க கருவியாக இருக்கும். மெகாலே பிரபுவின் முயற்சியை அடிப்படையாகக் கொண்ட தற்போதைய கல்வி முறையானது ஆங்கில வர்த்தகர்களுக்கும் இந்நாட்டிலுள்ள ஆங்கில அரசாட்சிக்கும் உதவிபுரியுமாறு இந்தியர்க்கு ஆங்கில பாஷையைப் போதிக்கும் நோக்கத்தோடே அமைக்கப்பட்டதாகும். அந்த முறையில், அப்போதைக்கப்போது இராஜீய நிர்வாகத்திலேற்படும் மாறுதல்களுக்கேற்ப அவசியமெனத் தோன்றிய சில மாறுமல்கள் மட்டும் செய்யப்பட்டன. ஆகவே, இம்முறையானது இந்நாட்டு மக்களது அவசியங்களையும் எண்ணங்களையும் நிறைவேற்றக் கூடியபடி அமைக்கப்பட்டிருக்குமென எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால், சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது; அல்லது சமீபத்திலேயே வாய்க்கப் போகிறது. காலத்தைக் கடக்கவிடாது, சந்தர்ப்பத்தையும் கைநெகிழ விடாது சமுதாயத்துக்குப் பயன்படும்படி கல்வி முறையை மாற்றியமைத்துக் கொள்ளும் பொறுப்பு உங்களுடையதாகும். அத்தகைய சீர்திருத்த முறையில் அமையவேண்டிய திருத்தங்களையும் மாறுதல்களையும் விளக்கிக் கூறுதற்கு இது சந்தர்ப்பமல்ல. தேச சேவையிற் பழுத்து அனுபவ முதிர்ந்து விளங்கும் அறிஞர்கள் அவற்றை விளக்குவதே பொருத்தமாகும்.

கல்வி முறையைப் பற்றிக் கூறுகையில் அதில் ஒரு முக்கியாம்சமாக அமையவேண்டிய ஒழுங்கைப்பற்றிக் கூறாதிருக்க முடியாது. இளைஞர்களாயிருக்கும் நீங்களெல்லோரும் தேசத்துக்குப் பயன்படுங் குடிகளாவதற்கு முன்னர் தலைமை அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டுச் சேவை புரிவதன் அவசியத்தையும் மதிப்பையும் உணர்ந்து ஒழுங்கான முறையில் பண்படுதல் அத்தியாவசியமாகும். ஏனெனில் அவைகளே குடியாட்சியின் தன்மைளாகும். ஒவ்வொரு மனிதனுக்கும், எந்த விஷயத்திலும் சொந்த அபிப்பிராயங் கொள்ளுதற்கு உரிமையுண்டாயினும் மற்றவர் ஒவ்வொருவரது அபிப்பிராயங்களையும்—அதிலும் தேச நலத்தையும் தேசமக்கள் நலத்தையும் நாடி அவ்விஷயங்களைப் பற்றிப் பேராலோசனை செய்வோராகப் பொது மக்களால் கருதப்படுவோரது அபிப்பிராயங்களை—மதிக்கும் கடமையும் உண்டு. உங்களுடைய சொந்த அபிப்பிராயங்களுக்கு எத்துணை முரண்படினும் பெரும்பான்மையோரது அபிப்பிராயத்துக்குக் கட்டுப்படுதலே இன்றியமையாததாகும். கட்டுப்படுவதோடு நில்லாமல் அவ்வபிப்பிராயத்தினைத் தனது சொந்த அபிப்பிராயமே போல் ஏற்றுக் கையாண்டு அதன் நிறைவேற்றத்திற்காக உழைத்தலும் வேண்டும். நீங்கள் படைவீரம் செறிந்தவர்களென்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். படைகளிற் சாதாரணமாகக் காணப்படும் அடக்கத்தையும் ஒழுங்கையும் தற்போது மறந்திருக்கும் நீங்கள் மீண்டும் அத் தன்மைகளைக் கொள்ளுதல் வேண்டுமென்கிறேன்.



Next to nationalisation of education, national industrialisation must claim your attention.

In this connection, I may be permitted to ebserve in passing that your community may legitimately take pride in having contributed to a very large measure, if not entirely, to the needs of the second of human primary wants, namely clothing, and as such it is but proper, you must bear your part in the scheme of national industrialisation of the country. It may not be amiss on my part to draw your attention to the fact that, in the present economic crisis of the world, the cry is to purchase their own goods. But in adopting this motto, you must not be too narrow in your outlook. For, the rapid strides with which the civilisation of the country has advanced, our needs have increased too in proportion. It may not be possible for us to be too parochial or provincial until the country has fully devloped to be self-sufficient and can supply all our needs. Therefore you must qualify yourself by adopting the principle of buying all Indian, in so far as they are available even at some inconvenience and some sacrifice it may involve with a reservation for identing on foreigners, where you are not capable of producing in your own country. I suggest this as an emergency measure only, and I feel it may be atmost a very remote necessity. Nay it may not even be resorted to. For, a recent visit to the Kadher Exhibition held at Kumbakonam under the auspices of the "ALL INDIA SPINNERS' ASSOCIATION" has convincingly demonstrated that the needs of India in all material wants may be readily and easily met with by the industries of this country alone.

I feel I have taken up your time much longer than I intended to, but the persent momentous changes that are impending are the sole excuse for my having done so and indulging some rambling observations as they have suggested themselves to me.

I once again thank you all for the honour done to me in asking me to open this conference and with very great pleasure I declare this conference open and sincerely wish it every success and a long career of usefulness.

கல்விக் கடுத்தபடியாகக் கைத்தொழில்களைத் தேசியப்படுத்த நீங்கள் முற்படவேண்டும்.

மக்களுக்கு இன்றியமையாதனவாகிய உணவு உடை இரண்டனுள் இரண்டாவதாகிய உடையை, முழுதும் வழங்காவிடினும், பெருமிதமாக வழங்கியதுபற்றி உங்கள் குலம் பெருமை பாராட்ட வேண்டியது நியாயமே யெனவும் அத்தகைய பெருமையுடைய நீங்கள் தேசத்தின் கைத்தொழில்களைத் தேசியப்படுத்துவதில் முதன்மையாய் நிற்க வேண்டுமெனவும் கூற விரும்புகிறேன். தற்போதைய உலகப் பொருளாதார நெருக்கடியில் தத்தம் பொருளையே வாங்கவேண்டுமென்பதே கூச்சலாயிருக்கிற தென்பதைக் குறிப்பிடுவது மிகையாகாதென எண்ணுகிறேன். ஆனால் இந்தக் கொள்கையைக் கையாளுவதில் உங்கள் நோக்கம் குறுகியதா யிருக்கக்கூடாது. ஏனெனில் நாகரிகம் மிக விரைவாக அபிவிருத்தி யடைந்துள்ளது; அதனோடே நமது அவசியங்களும் துரிதமாகப் பெருகியுள்ளன. நமக்கு அவசியமான பொருள்களை யெல்லாம் நாமே உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய நிலை ஏற்படும் வரை நாம் அதிக சுயநல முள்ளவர்களாக இருக்க முடியாது. ஆகவே, நீங்கள், நமது நாட்டில் தயாரிக்க முடியாத பொருள்களைமட்டும் அன்னிய நாடுகளிலிருந்து வரவழைத்துக்கொண்டு கிடைக்கக்கூடிய வரையில், சிறிது அசௌகரியத்தையும் தியாகத்தையும் பொருட்படுத்தாமல், இந்தியப் பொருள்களையே வாங்குதல் என்னும் கொள்கையைக் கையாண்டு உங்களைத் தயார் செய்துகொள்ளவேண்டும். அன்னிய நாடுகளிலிருந்து சொற்ப பொருள்களைத் தருவிப்பதை விலக்க முடியாத நிலையில் மட்டும் கையாள வேண்டிய முறையாகவே நான் கூறுகிறேன்; அத்தகைய நிலை ஏற்படுவது மிக அரிதேயாகும். யோசிக்கின் அந்த முறையைக் கையாள வேண்டிய அவசியமே இராதெனவுங் கூறலாம். ஏனெனில், சமீபத்தில் அகில இந்திய நூற்போர் சங்கத்தின் ஆதரவில் கும்பகோணத்தில் நடந்த கதர்க்காட்சியானது இந்தியாவின் அவசியங்களனைத்தையும் நமது நாட்டுக் கைத்தொழில்களைக் கொண்டே பூர்த்தி செய்துகொள்ளலாமென்பதைத் தெளிவுற விளக்கிவிட்டது.

நான் கருதியதினும் அதிகமான காலத்தைக் கடத்திவிட்டதாக எனக்குத் தோன்றுகிறது; ஆனால் தற்போதைய நெருக்கடியான விஷயங்களே நான் உங்கள் காலத்தைப் பங்கிட்டுக் கொண்டதற்கும் என் மனத்திடை யெழுந்த சில கருத்துக்களை வெளியிட்டதற்கும் காரணமாகும்

இந்த மகாநாட்டைத் திறந்து வைக்குமாறு கேட்டுக்கொண்டு எனக்களித்த கௌரவத்துக்காக நான் மீண்டும் உங்களுக்கு வந்தனமளித்து, மிகுந்த மகிழ்ச்சியோடும், இம்மகாநாடு செவ்வனே சித்திபெற வேண்டுமென்னுங் கோரிக்கையோடும் இதனைத் திறந்து வைக்கின்றேன்.

உ

வாலிபர் மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர்

மஞ்சட்கோல்லை

## திருவாளர் ரெ. விநாயகமூர்த்தி முதலியாரவர்கள்

# சொற்பெருக்கு

தலைவரவர்களே !

சகோதர சகோதரிகளே !!

தஞ்சை ஜில்லாவில் நடைபெறும் நமது நான்காவது வாலிபர் மகாநாட்டினைச் சீர்பெற நடத்தி வைக்கும் பெரு நோக்கத்துடன் இங்கு விஜயம் செய்திருக்கும் தங்கள் அனைவரையும் தஞ்சை ஜில்லா வாலிபர் சார்பாக மனமகிழ்ந்து வரவேற்கின்றேன்.

நமது தலைவரவர்கள், வாலிபர்களிடையே எக்காலமும் பழகி அவர்கள் தன்மை யறிந்து அவரவர்கட் கேற்ற வகையில் போதித்து நல்வழிப்படுத்தும் போதகாசிரியராகையால் அவர்கள் நமது வாலிபர் மகாநாட்டுக்குத் தலைமை பூண இசைந்தது பெரும் பாக்கிய மென்றே கூறலாம். அன்னார் தலைமையில் கூடும் நாம் அவர்களது அநுபவம் நிரம்பிய நற்போதனைகளால் தகுந்த முறையில் திறமையாகச் சமூக சேவையும் அதன் மூலம் தேச சேவையும் செய்ய ஆற்றல் வாய்ந்தவர்களாதல் திண்ணம்.

தவிர, இவ்வாண்டில் நமது செங்குந்தர் மகாநாடுகள் இத்திருவாரூரிற் கூடியதில் ஓர் விசேஷம் இருப்பதைத் தங்கட்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அரச நீதி வழாது ஆணை செலுத்திய சோழ மன்னர்க்குத் தலைநகராக ஒரு காலத்தில் விளங்கிய பெருமையும், சைவசமய குரவர் நால்வரானும் பெரிதும் புகழ்ந்து பாடப்பெற்ற சிறப்பும் 'ஆரூரிற் பிறக்கமுத்தி' என்று விதந்தோதப் பெற்ற பெற்றியும் வாய்ந்த கமலையம் பதிக்கண் நாம் சமூக சேவைபோன்ற துறையில் பொதுஜன சேவை என்னும் திருவினையில் ஈடுபட நேர்ந்தது நமது நற்காலத்துக் கறிகுறி யென்றே எண்ணுகிறேன். நாம் எந்த உயரிய இலக்ஷியத்தை நிறைவேற்ற எண்ணி இன்று இங்குக் கூடியிருக்கிறோமோ அந்த இலக்ஷியத்திற்குத் தியாகத்தன்மை இன்றியமையாததென்னும் தத்துவத்தை நமக்கு வற்புறுத்தி அறிவிக்கும் பெற்றிமையுடையது இத்திவ்விய திருப்பதியாகும்.

நிற்க, நமது இந்திய சமூகம் உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமை கொண்டு பல்வேறு ஜாதிகளாகப் பிரிந்து ஒன்றற்கொன்று முரண்பட்டு நிற்கும் நிலை, சென்ற ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகவே நாம் செய்து வரும் தேசீயக் கிளர்ச்சியினாலும் நம் பாரதப்பழம் நாடு அன்னியர் ஆட்சியினின்றும் விடுதலையடைய முடியாதவாறு ஊறு செய்து வரும் தடைகளில் ஒன்றாக இருந்து வருகிறதென்பது ஒரு தலை. இது பற்றித் தான் நம் நாட்டு நாகரிகத்துக்கே ஒரு பெருங் களங்கமாக உள்ள ஜாதிப் பிரிவினையை ஒழித்து இந்திய சமூக ஒற்றுமை காணுதல் வேண்டும் என்று சீர்திருத்தவாதிகளும் தேசீய வாதிகளும் ஒன்று பட்டு முயற்சித்து வருகிறார்கள். இந்நிலைமையில் சமூக மகாநாடுகள் கூட்டுவது நாட்டுக்கு நலம் செய்வதாகுமா எனச் சிலர் கேட்பர். சாதிப் பிரிவினைகள் ஒழியவேண்டுவது அவசியமே. ஆனால் இந்தச் சாதிப் பிரிவினைகளெல்லாம் வேற்றுமை யுணர்ச்சி யென்னும் நோய் கொண்டிருப்பதனாலேயே நாட்டு நன்மைக்குத் தீமை செய்வனவாக இருக்கின்றன. அங்ஙனமின்றிப் பலவகைச் சமூகங்களும் பெயரளவில் வேறுபட்டனவாக இருந்தாலும், யாவும் தேச முன்னேற்றச் சங்கங்கள் என்ற முறையில் தொண்டு செய்து வருமாயின் சமூக ஸ்தாபனங்களால் நாட்டுக்குக் கேடொன்றும் விளையாது; நன்மையே விளையும். அஃதன்றி, பல திறப்பட்ட சமூகங்களும் இந்திய சமூக சரீரத்தின் பல் வேறு அவயவங்களாகுமென்ற உண்மை யுணர்ச்சியற்றுத் தாம் தாம் ஒன்றற்கொன்று சம்பந்தமற்ற முற்றிலும் தனிப்பட்ட ஸ்தாபனங்களெனக் கருதித் தம்முள் உயர்வு தாழ்வென்று கூறிக் கலாம் விளைத்து வருமாயின் அதனால் நாட்டுக்குப் பெருங்கேடு உண்டாகுமென்பது உணரற்பாலது. ஆதலின் நமது சமூக ஸ்தாபனமும் பெயரளவில் மட்டும் செங்குந்தர் சமூகம், செங்குந்தர் மகாநாடு என்று வழங்கி, கொள்கையிலும் செய்கையிலும் பொதுஜன



சேவை யொன்றையே குறியாகக்கொண்டு நடத்தப்படுவதாகவே யிருத்தல்வேண்டும். மற்றச் சமூகங்களிடம் துவேஷமோ வெறுப்போ கூடாது.

சமூக மகாநாடு கூட்டும்பொழுது வாலிபர் மகாநாடு என்ற தனிப்பட்ட கூட்டம் கூட வேண்டியதற்கான காரணத்தைப்பற்றியும் சில வார்த்தைகள் கூறுவது மிகையாகாதெனவே எண்ணுகின்றேன். ஒவ்வொரு நாட்டின் எதிர்கால வாழ்க்கை நிலைமையும் அந்நாட்டின் அறிவு ஆற்றலைப் பொறுத்தே தீர்மானிக்கத் தக்கதாக இருக்கின்றது. பிள்ளைப் பருவம், வாலிபப் பருவம், வயோதிகப் பருவம் என முக்கூறுகளையுடையது மனித வாழ்க்கை. பிள்ளைப் பருவம் அறிவு நிரம்பாத் தன்மையாலும், வயோதிகம் அசக்தித்தன்மையாலும் குறைபாடுடையனவாகவே யிருக்கின்றன. வாலிபப் பருவமே அறிவின் விளக்கமும், ஆண்மையின் கிளர்ச்சியும் நிரம்பப்பெற்று நல்லுழைப்பில் ஈடுபடுதற்கு ஏற்புடைத்தாக இருக்கின்றது. வயோதிகர்கள் பெரிதும் நிகழ்கால நிலைக்குப் பொறுப்பாளிகளாக இருப்பரேயன்றி, இனி வரும் எதிர்கால நிலைமைக்கு வாலிப சமூகத்தைப்போல அத்துணைப் பொறுப்பு வாய்ந்தவர்களல்லரென்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். என்றாலும், அநுபவத்தால் செப்பம் செய்யப்பட்ட பெரியோர்களின் ஆழ்ந்து தெளிந்த அறிவின் அநுகூலமும் வாலிப உலகத்துக்கு இன்றியமையாததென்பதுண்மையே. யுத்த நிகழ்ச்சிக்கு யுத்த மந்திரியின் யூகமும், போர் வீரரின் வீரமும் இணைய வேண்டியது இன்றியமையாததாதல் போலவே பொதுஜன சேவைக்கும் பெரியோர்களின் அநுபவத்தால் கனிந்த அறிவும் வாலிபர்களின் வீரச்செயலும் ஒன்றற்கொன்று பெரிதும் தொடர்புடையனவாகும். என்றாலும் யுத்த வெற்றிக்குப் போர் வீரரின் புயவலியும் மனவுறுதியுமே பெரிதும் காரணமாக அமைதல் போலச் சமூக சேவைக்கும் வாலிபர் புயவலியும் மனவுறுதியுமே பெரிதும் காரணமாகும். அத்துணைச் சிறப்பும் பொறுப்பும் வாய்ந்த வாலிப சமூகம் ஜனசமூக எதிர்கால நிலைமைக்குக் காரணமாக இருக்கும் தனது கடமைப்பாட்டினை யுணர்ந்து தனது அறிவு ஆற்றலுக்கு ஏற்றவாறு வேலைத்திட்டங்களை அமைக்கும் ஆலோசனையில் தானே ஈடுபடுதற்குத் தனக்கென ஓர் தனிக்கூட்டம் கூட்டுவது எத்துணைச் சால்புடைத்தாகு மென்பது சொல்லாமலே விளங்கும்.

இனி நாம் இங்கு ஆலோசிக்க வேண்டிய முக்கியமான சில விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

ஜன சமூக முன்னேற்றத்திற்கு இன்றியமையாச் சாதனமாயுள்ளது கல்வி என்பதை நான் வற்புறுத்த வேண்டியதில்லை. கல்வியில் முன்னேற்றமடைந்துள்ள தேசமே பொருளாதாரத்திலும் நாகரிகத்திலும் முன்னேற்றமடைய முடியும். ஆனால் உலகிலுள்ள மற்ற முற்போக்கான தேசங்களோடு நம் நாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் நமது நாட்டில் கல்வி கற்றோரின் விகிதம் மிகமிகச் சொற்பமென்றே அறியக்கிடக்கின்றது. அதிலும் நமது சமூகத்திலோ வெனில் அதைவிடச் சொற்பமாகும். ஆகவே, நாம் கட்டாய ஆரம்பக் கல்வி முறையையேனும் நம் சமூகத்தினிடையே பரப்புதற்குப் பெரு முயற்சி செய்தல்வேண்டும். தற்காலத்தில் நமது வாலிபர்களுக்குப் போதிக்கப்படும் உயர்தரக் கல்வியானது அவர்களுக்கு அளிக்கும் உண்மையான பாண்டித்தியத்தையோ, தாய்நாட்டுக் கலைக்யான, பொருளாதார, சமூக முன்னேற்றத்தில் பயன்படும் சேவை யுணர்ச்சியையோ ஊக்கத்தையோ அளிப்பதென்பது மிகமிகச் சொற்பமாகவே யிருக்கின்றது. தற்காலக் கல்வி முறையானது கேவலம் உத்தியோகத்திற்கென்றே கற்கப்படுவதாக இருப்பதால் அவ்வுத்தியோகம் கிடைக்காத விடத்துப் பயனற்றதாகி, நமது வாலிபர்கள் வாணாளை வீணாளாக்கிவிடுகின்றது. ஆகவே தற்காலத்திய கல்வி முறையினை மாற்றி நாட்டின் கலை, கைத்தொழில், விஞ்ஞான அறிவு முதலியவற்றை வளர்க்கக்கூடியதாகவும் நமது வாலிபர்களைத் தமக்கும் தம் தாய் நாட்டுக்கும் யாதேனுமொரு துறையில் பயன்படுத்தக்கூடியதாகவும் உள்ள கல்வி முறையினை நிறுவுமாறு நாம் அரசாங்கத்தை வற்புறுத்துதல் வேண்டும். இன்னும் நமது செங்குந்த மகாஜன சங்கத்தினாதரவில் நமது சமூகத்தில் வருடந்தோறும் குறைந்தது ஒரு வாலிபரையாவது ஜெர்மனி, அமெரிகா, ரஷ்யா முதலான மேல் நாடுகளுக்கனுப்பி மேனாட்டுக் கலைகளிற் பயில்விக்க உதவுதற்கான வசதிகட்கு மூலதனம் ஒன்று ஏற்படுத்துதல் வேண்டும். பின்னும், ஏற்ற இடங்களில் இலவச வாசகசாலைகள் நிறுவிப் பொதுவாக

நாட்டு மக்கட்கும், சிறப்பாக நமது சமூக மக்கட்கும் பயன்படுமாறு செய்தல் பொது ஜன சேவையில் மிகமிக அவசியமான அம்சம் என்பதை நான் அழுத்தமாக வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் நமது சமூகத்தார் தொன்று தொட்டுப் புரிந்து வரும் கைத்தொழிலைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மக்கள் வாழ்விற்கு உணவும் உடையுமே இன்றியமையாது வேண்டப்படுவனவாகும். அவற்றுள் இரண்டாவதாகிய உடையினை மக்கட்கு உதவி வருவதற்கான நெய்தற்றொழில், கைத்தொழில் பலவற்றுள்ளும் சீரிய தென்பதில் ஐயமொன்றுமில்லை. அத்தொழிலின் அருமை பெருமை யுணர்ந்தே தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராம் புண்ணிய மூர்த்தி காந்தியடிகள் அந்நெய்தற்றொழிலுக்கு மூல கருவியாயுள்ள இராட்டினத்தையே தமது தெய்வமென்றும், உயிரென்றும், நம் பாரத நாட்டுக்குப் பொருளாதார முன்னேற்றம் நல்கும் காமதேனு வென்றும் போற்றி வருகின்றார். அத்தகைய பெருமை வாய்ந்த கைத்தொழிலை நமது குலத் தொழிலாகக் கொண்டுள்ள நாம் அதை நம் உயிரே போல் பாராட்டி வளர்த்து வருவதில் செருக்கடைய வேண்டியவர்களாகவே இருக்கிறோம். ஆனால் அதற்கு மாறாக நாம் அத்தொழிலைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கைவிட்டு வருகின்றோம் என்பதை நினைக்க என் உள்ளம் வருந்துகின்றது. நமது கைத்தொழிலின் அழிவுக்கு மேனாட்டு இயந்திரங்கள் பெரிதும் பொறுப்புள்ளவை யாயினும் நாம் விடாமுயற்சியோடு அத்தொழிலைக் கையாண்டு வருவோமாயின் நமது உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமற் போகாதென்பது திண்ணம். ஆகவே, நமது தொழிலை க்ஷீணிக்கவிடாமல் காலத்துக்கேற்ற முறையில் நெய்யும் துணி வகைகளிலும் நாம் உபயோகப்படுத்தும் நெய்தற் கருவிகளிலும் மாறுதலும் திருத்தமும் ஏற்படுத்திக் கையாண்டு வருவோமாயின் நம் முயற்சி திருவினையாக்கும் என்பதில் ஐயமொன்றுமில்லை.

நமக்கும் நமது முன்னோர்களுக்கும் ஜென்மபூமியாகிய நமது பாரத அன்னையிடத்தும், நம் அன்னைமார் நமக்குப் பாலுடன் புகட்டியதும் நாம் மழலையிற் பயின்றதுமான நம் அமிழ்தினுமினிய தமிழ் மொழியிடத்தும் நாம் என்றும் மாறாத அன்புடையவர்களாக இருக்கக் கடமைப்பட்டுள்ளோம். தாய் நாட்டின் கலை, தொழில், ஒழுக்கம், நாகரிகம், பாஷை, சரித்திரம் இயற்கைப் பொருள்கள் முதலியவற்றில் மக்கள் தம்மைப் பெற்ற அன்னையாரிடத்துக் காட்டும் களங்கமற்ற அன்பைப்போலும் அன்பு பூண்டு அவைகளின் ஆக்கத்திற்குத் தம்மால் ஒல்லும் வகையெல்லாம் முயன்று தொண்டு புரிதலே தாய் நாட்டன்பு, தேசத் தொண்டு எனப்படும். "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்றார் பாரதியார். தாய் நாட்டிடத்து அன்பு காட்டாதார் மனித உணர்ச்சியற்றவர் என்றே சொல்லுதல் வேண்டும். மேனாட்டு மக்களிடத்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினைகளில் தாய் நாட்டன்பு என்பது தலை சிறந்ததொன்றாம். தாய் நாட்டில் உற்பத்தியாகும் விளைபொருள்களை எல்லாம் இதர நாடுகளுக்கு அனுப்பாமலிருப்பதற்கும், அப்பொருள்களை நமது நாட்டிலேயே தற்கால நாகரிகத்துக்கேற்ற செய்பொருள்களாக உற்பத்தி செய்வதற்கும், நம் தாய் நாட்டில் செய்யப்படும் பொருள்களையே வாங்குவதற்கும் நாம் பிரதிக்ஞை செய்துகொண்டு அவ்வண்ணம் நடந்தாலொழிய நம் நாட்டுக் கைத்தொழிலும் பொருளாதாரமும் அபிவிருத்தியடையா; நாட்டின் விடுதலையும் எட்டிச் சென்றுகொண்டே யிருக்கும். மேல் நாடுகளில் செய்யப்படும் பொருள்களைப் போலவே நம் நாட்டிலும் நவநாகரிகத்துக்கான பொருள்கள் செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறு நம் நாகரிகத்துக்கும் தேவைக்கும் இன்றியமையாப் பொருள்களுள் அநேகமாக எல்லாமும் நம் நாட்டிலேயே செய்யப்பட்டு வரும் இந்நாளிலும் அவைகளை நாம் முற்பட்டு வாங்குவதில்லை என்பது மிக வருந்தத்தக்கது. ஆகவே, நாம் இனி வாங்கும் ஒவ்வொரு பொருளும் சுதேசிதானா என்பதைப் பார்த்து வாங்கும்படிக்கு நம்மவரனைவரையும் நான் வணக்கத்துடன் வேண்டிக்கொள்ளுகிறேன். சென்ற சுமார் பதினைந்து ஆண்டுகளாகக் கதர் இயக்கமானது அதி தீவிரமாக வேலை செய்து வந்தும் அத்தொழில் தற்காலத்தில் அடைந்திருக்கும் அபிவிருத்தியானது மிகமிகக் குறைவானதாகவே யிருக்கின்றது. இந்தக் குறைவான அபிவிருத்தியிலும் நம் நாட்டு நெசவுத் தொழிலுக்குத் தம் போட்டியினால் அழிவு தேடி வந்த நாடுகளெல்லாம் கிலியடைந்து விட்டனவென்றால்,



நம் நாட்டில் சரி பகுதி மக்களாவது கதரை ஆதரிப்பது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டால் அந் நாடுகளின் கதி என்னாகும் என்பதும் அந்நாடுகளால் நமது பொருளாதார தேசிய அபிவிருத்தி பாதிக்கப்பட்டுள்ள நிலைமை எங்ஙனம் மாறுதலடையுமென்பதும் நம் மக்கள் உணராமலிருப்பது வருந்தத் தக்கதே. கதரியக்கத்தினிடத்து ஏனைய சமூகங்களின் அபிமானம் எப்படியிருந்த போதிலும் நெசவுத் தொழிலையே குலத்தொழிலாகக் கொண்டுள்ள நாம் அதனிடத்து நிறைந்த அபிமானம் வைக்கவேண்டியது அவசியமாகும்.

சமூக சேவையில் பெண்கள் முன்னேற்றம் என்பது அதிமுக்கியமான விஷயமென்பதைத் தாங்கள் எல்லோரும் ஒப்புக்கொள்வீர்கள். நாகரிக மடைந்த இதர நாடுகளில் பெண்பாலார் அநுபவிக்கும் உரிமைகளை நோக்குமிடத்து நம்நாட்டுப் பெண்மணிகள் மிகவும் பிற்போக்கான நிலையிலேயே யிருக்கிறார்களென்பது தெற்றென விளங்கும். மனித சமூகத்தில் ஆணும் பெண்ணும் நெருப்பில் வெப்பமும் வெளிச்சமும் போலப் பிரிக்க முடியாத இரு பெருஞ் சக்திகளாகும். இரு பால் மக்களில் ஒரு பால் மக்கள் குறைபாடுடையரா யிருப்பின் மனித சமூகமே குறைபாடடையும் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

கண்களிரண்டினி லொன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ

பெண்களறிவை வளர்த்தால் வையம்
பேதமை யற்றிடும் காணீர்

மக்கள் கருவினின்றும் வளர்ச்சியடைவதும், பிறகு பிறந்து வளர்வதும் தாய்மாரிடத்தே நிகழ்வதால் மக்களின் அறிவாற்றலுக்கு அன்னைமாரே பெரிதும் பொறுப்புடையவர்களாகின்றார்கள். ஆகவே பெண்பாலார் சிறந்த தேக வன்மையும், அறிவின் விளக்கமும் உடையவர்களாக இருக்கவேண்டு மென்பது எத்துணை அவசிய மென்பது சொல்லாமலே விளங்கும். அவர்கள் அங்ஙனம் உடல் வன்மையும் அறிவின் கூர்மையும் பெற்று விளங்குவதற்குக் கல்வியறிவு, பொருளுரிமை, சமூக அந்தஸ்து முதலியவற்றில் அவர்களுக்குச் சம உரிமையளிக்க ஆண்கள் முற்படுதல் வேண்டும். பெண்களுக்குச் சமவுரிமை யளித்தல் என்னும் விஷயத்தில் நம்நாட்டு நாகரிகத்தை யநுசரித்து ஒத்ததோர் முறையைக் கையாள வேண்டுமே யொழிய இதர நாடுகளில் கையாளப்படும் முறையினையே நாமும் அப்படியே ஏற்றுக் கையாள வேண்டுமென்று சொல்வதற்கில்லை. ஆண்மக்களிலும் ஒவ்வொருவரும் தனது உடல் நிலை அறிவு நிலையால் ஒவ்வொரு குறிப்பிட்ட தொழிலுக்கே தகுதி யுடையவர்களாதல்போல் பெண்களும் ஒவ்வொரு குறிப்பிட்ட தொழிலுக்கே தமது தேகமனோ இயல்புகளை யொட்டித் தகுதி யுடையவர்களாகிறார்கள். குடும்ப நிர்வாகம், பிள்ளைகளை நயம்பட வளர்த்தல், பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்தல் ஆதிய செயல்களுக்கே பெண்கள் பெரிதும் தகுதியுடையவர்கள். எனவே அத்துறைகளில் நமது பெண்கள் தெளிந்த அறிவினையே யடையுமாறு அதற்கேற்ற ஒரு கல்வி முறையினை அமைக்கும்படி நாம் முயலுதல் வேண்டும்.

பல திறப்பட்ட சாதிப் பிரிவினைகளும் ஒழிந்து பாரதமக்கள் அனைவரும் இந்திய சமூகம் என்ற ஓர் ஒருமித்த கூட்டமாக ஆய்விடவேண்டு மென்ற முயற்சி நாட்டில் மும்முரமாக நடந்து வரும் இந்நாளில் நமது சமூகத்தினிடையே பல வேற்றுமைப்பட்ட பிரிவுகள் இருந்து வருவது வருந்தத்தக்கது. ஆனால் சென்ற சில ஆண்டுகளாக நமது சங்கமானது செய்து வரும் முயற்சியினாலும் காலப்போக்கினாலும் அவ்வேற்றுமைகள் கொஞ்சங் கொஞ்சமாகத் தளர்ந்து வருவது நமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இன்னும் எஞ்சியுள்ள வேற்றுமைகளும் அறவே யொழிந்து நமது சமூகமானது ஓர் அன்பான குடும்பம் போல் ஆய்விட வேண்டு மென்றே நான் விரும்புகிறேன். ஒரு சமூகத்திலேயே ஒரு பரம்பரையினருக்கு விசேஷகாலங்களில் முதலாவது மரியாதை செய்யவேண்டு மென்றும் அதைப்போலவே வரிசைக்கிரமமாக மற்றவர்களுக்கு மரியாதை செய்யவேண்டு மென்றும் அம்மரியாதை அம்முறை பிறழ்ந்து செய்யப்படுமாயின் பிணக்கும் மனப்புழுக்கமும் பூசலும் விளைந்து வருவதும் வெறுக்கத் தக்க பழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் இந்தப் பழக்கம் வயது சென்ற முதியோர்களிடையே பெரும்பாலும் குடிகொண்டிருக்கிறதே யொழிய வாலிபர்களிடையே அந்த அர்த்தமற்ற வெற்றுணர்ச்சி மறைந்து வருவது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஆனால் இப்பழக்கம் குறிப்பிட்ட மனிதருக்கு உயர்வு

தருகிறதென்ற காரணத்தால் நீக்கப்படு மாயின் அது பலமாகக் கண்டிக்கத் தக்கதென் றும் சௌகரியமும் பிறவுமன்ன காரணங் களைக் கொண்டதெனில் வரவேற்கத் தக்க தென்றும் எண்ணுகிறேன்.

இறுதியாக, நமது தலைச்சங்கத்திற்கும் அதன் குழவியாகிய நமது மித்திரனுக்கும் இவற்றைத் தோற்றுவிக்க விடாமுயற்சியோ டுழைத்த நமது வள்ளல் தி. நா. சபாபதி முதலியாரவர்களுக்கும், ஆசிரியர் ம. சண்முக சுந்தர முதலியார், நாகலிங்க முனிவர் போன்ற பெரியோர்களுக்கும் நமது சமூகம் பெரிதும் கடமைப்பட்டுள்ள தென்பதை அறி விப்பதோடு என் மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகிறேன்.

நம் முன்னிற்கும் வேலைகளில் ஏதோ என் சிற்றறிவிற் கெட்டியவரை எடுத்துக் காட்டிய வற்றையும் அவை போன்ற பிறவற்றினையும் நம் திறமை வாய்ந்த தலைவர் அவர்கள் உதவி யால் ஆராய்ந்து அதற்குரிய தொரு வேலைத் திட்டத்தினையும் தீர்மானங்களையும் அமைத்து அவை ஏட்டளவில் நில்லாது செயலில் நடை பெறுமாறு செய்யும்படி உங்கள் அனைவரை யும் மிகுந்த வணக்கத்துடன் வேண்டிக் கொண்டு என் சிற்றுரையை நிறுத்துகிறேன்.

எமது வேண்டுகோளுக் கிணங்கிக் கால அருமையையும் சரீர சிரமத்தையும் பொருட் படுத்தாது எங்கட்கு அறிவும் ஊக்கமும் அளித்துச் சமூகசேவையில் எங்களை ஈடு படுத்துமாறு இவண் அன்புகூர்ந்து விஜயஞ் செய்துள்ள கனம் தலைவரவர்களுக்கும், தங்க ளுடைய பலவித அசௌகரியங்களையும் பொருட்படுத்தாது எங்களுக்குத் தங்கள் ஒத் துழைப்பை நல்குமாறு இங்குக் குழுமியிருக் கும் துங்கள் அனைவர்க்கும் வரவேற்புச்சபை யின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித் துக்கொள்ளுகிறேன்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

---

உ

திருவனந்தபுரம் சயன்ஸ் காலேஜ் போதகாசிரியர் உயர்திரு.

## C. பன்னிருகைப் பெருமாள் முதலியார், பி.ஏ., பி.எல். அவர்கள்

ஆங்கிரஸஹு மாசி மாதம் 29—30 தேதிகளில் நடைபெற்ற

தென்னிந்திய செங்குந்தர் நான்காவது

வாலிபர் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த சமயம்

அன்னார்க்கு வரவேற்புச் சபையர் உவந்தளித்த

# வரவேற்பு நல்லுரை

**வன்மையே புகட்டும் வாலிப மணியே !**

பிணி நடுக்குற்று நலிவோர் பிணியின் வாய்ப்பட்டு ஊடாடித் தேறிய அனுபவமுடை யாரை நாடுவர்; லௌகிகப் பற்றற்றுப் பரலோக சுகத்தினுக்காகப் பாடுபடத் துணிவோரும் லௌகிகத்தில் நேரக்கூடிய இடுக்கண்களாற் குட்டுப்பட்டு அதற் கன்னியமான மார்க்கத்திற் கனுகரணங்களாயுள்ள நால்வகைச் சாதனங்களிலே தவறியும் தேறியும் கஷ்டப்பட்டு இடைவிடாது முயன்று பின்னர்ச் சித்திபெற்ற போரனுபவமுடைய ஞானியரைத் தேடுவர். அனுபவத்துக்கு இத்துணை மதிப்பும் சிறப்பும் இருக்குமாயின், வாழ்க்கைக் கடலிலே இப் பொழுதுதான் குதித்துள்ள நாங்கள், அதன் வலிய அலைகளோடு சலியாது பொருது முயற்சியோடு நீந்தித் திட்டேறி, 'இனி எத்துணைப் பெரிய அலை எவ்வளவு கடுமையாக மோதினும் சலியேன்' என்னும் திடத்தோடு தோள் தட்டி நிற்கும் தங்களையன்றி வேறெவரை நாடுவோம்?

**பண்பெலாம் நிறைந்த பண்டித மணியே !**

தன்னிடம் உபதேசம் நாடுவோர்க்கு வழிகாட்டுவதற்கு இன்றியமையாத போரனு பவத்தினோடு அதனைச் செவ்விதின் அறிவுறுத்தி உபதேசம் பெறுவோர் மனதில் ஆழப்



பதிப்பதற்கு வேண்டிய போதனா சக்தியும் தங்களுக்குப் பெருமிதமாக இருப்பது எங்கள் அதிர்ஷ்ட வசமே யன்றோ?

**குலப்பணி யதனிற் களித்திடு குரிசிலே !**

இளமை தொட்டே பொதுநல நோக்கத்துடன் சேவை புரிய வேண்டு மென்னும் பேரவா தங்கள் உள்ளத்திலே தளிர்த்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்து வந்துள்ள தென் பதையும், அப்பெரு நோக்கத்திலே நமது குலம் ஒரு பெரும் பகுதியினைப் பகிர்ந்துகொண்ட தென்பதையும் உன்னுந்தோறும் எங்களுள்ளம் எவ்வளவு பூரிக்கின்றது! தங்கள் ஜில்லாவி லுள்ள ஏழை மக்களது முன்னேற்றத்துக்காகச் சிறப்பாக உழைக்க வேண்டுமென்னும் தங்களெண்ணத்தை யறியும் நாங்கள் அந்த ஜில்லாவிலே பிறந்து தங்கள் உபதேசங்கட்கும் சீர்திருத்தத்துக்கும் என்றும் பாத்திரராகும் பாக்கியம் பெறுமைக்காக வருந்துகின்றோம்.

**உழைக்கச் சலியா உத்தமப் பெரியோய் !**

தாம் கொண்ட நோக்கத்தை நிறைவேற்று முகத்தான் தளரா துழைப்பதே வாலிப ரது தன்மைகளில் முதன்மையான தென்பதைத் தாங்கள் செய்கையான் எடுத்துக் காட்டு வதை யுணர்ந்த நாங்கள், தொலைவி லிருப்பினும் தங்கள் முன்னேற்ற உழைப்பினாற் கிட்டும் பயனைத் துய்த்திடுவோம் என எண்ணித் தேறுகிறோம். அத்தகைய உழைப்பு பல ஜில்லாக் களுக்கும் பரவவும் பன் மடங்காகப் பெருகவும் தங்கட்கு மேலும் மேலும் தேக வன்மையும் செல்வப் பெருக்கும் தந்தருளுமாறு நங்குலச் சோதரனைப் போற்றுகின்றோம்.

இங்ஙனம் :

தங்கள்பால் என்றுந் தளரா அன்புகொண்டுள்ள

தென்னிந்திய செங்குந்தர் நான்காவது
வாலிபர் மகாநாட்டு வரவேற்புச் சபையார்

---

உ

வாலிபர் மகாநாட்டுத் தலைவர்

## திரு. C. பன்னிருகைப் பெருமாள் முதலியார், B. A., B. L. அவர்கள்

நிகழ்த்திய

# முன்னுரை

சகோதரர்களே ! சகோதரிகளே !!

இந்த மகாநாட்டுக்கு என்னைத் தலைமை வகிக்க விரும்பியதற்காகத் தங்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட் டிருக்கின்றேன். என்னைப் பார்க்கி லும் அறிவுத்திறமையில் சிறந்த ஒருவரைத் தெரிந் தெடுத்திருப்பீர்களானால்அது மிகவும் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் அறிவுத் திறமைகளில் குறைந்தவனான என்னைத் தாங்கள் தெரிந்தெடுத் தது என்னிடத்தில் தங்களுக்குள்ள அன்பைக் காட்டுகின்றது. தங்கள் உதவியால் இந்த மகா நாடு சிறப்பாய் நடைபெறுமென நினைக்கிறேன். எல்லாம் லல்ல கடவுளும் சிறப்புடன் முடிவுபெற அருள்புரிவாராக.

தற்காலத்தில் இந்தியா முழுவதும் ஒரு சுடர் ஒளி வீசி வருகின்றது. உன்னத நிலையை அடைந் திருக்கும் இங்கிலாந்து, ஜப்பான்தேசத்தார்களைப் போல இந்திய நாட்டாரும் உலகத்தில் ஒரு உயர்ந்த நிலையை அடையவேண்டுமென பெருமுயற்சி செய்து வருகின்றனர். இம்முயற்சியின் பயனாக இந்தியாவின் வீர கர்ச்சனை மேல் நாடுகளிலும் கேட்கப்பட்டுவருகின்றது. ஆனால் இந்தியா, இங்கி லாந்து ஜப்பான் தேசங்களைப் போல உன்னத நிலையைஅடைவது இந்திய இளைஞர்களின் கையில் இருக்கின்றது.

இளைஞர்களே ! நீங்கள்தான் உங்கள் தாய் நாட் டின் நிலையை உயர்த்துபவர்கள் ஆவீர்கள். இன் றைக்கு இளைஞர்களாக இருப்பவர்கள்தாம் நாளைய பெரிய மந்திரிகள் ; சேனாபதிகள் ; தேசத் தலைவர்கள். நீங்கள்தான் நாளைச் சர்வதேச சங் கம் போன்ற பெரிய மகாநாடுகளுக்கு இந்தியப் பிரதிநிதிகளாகச் செல்பவர்கள் நீங்கள்தான் மற் றைய நாடுகளிலுள்ள இராஜ சபைகளில் இந்தியப் பிரதிநிதிகளாக (Ambassadors) வீற்றிருப்பவர் கள். நீங்கள்தான் நாளை இந்தியாவின் உயர்ந்த

தத்துவங்களை உலகத்தாருக்குப் போதித்து உலக முழுவதும் சமாதானமும் சந்தோஷம் நிலைத்திருக்கும்படி செய்யப் போகிறவர்கள்.

ஆதலால் உங்கள் பிற்கால நிலைமையையும் பொறுப்பையும் கவனித்து நீங்கள் இப்பொழுதே உங்களது பிற்கால உயர்ந்த பதவியைப் பெறுவதற்குத் தயாராகிக்கொள்ளவேண்டும்.

ஆகவே நீங்கள் இப்பொழுது செய்யவேண்டியது என்னவென்றால், நீங்கள் பிறந்த தேசத்தினுடைய நன்மையை மனதில் எண்ணி நம் குல முன்னேற்றத்துக்காக மிகுந்த பாடுபடவேண்டும். நீங்கள் முதலாவது நமது குலத்தார் நன்மைக்காக உழைக்கத் தொடங்குவீர்களானால் உங்களுக்குப் பொதுக் காரியங்களில் இன்னவிதம் நடந்துகொள்ள வேண்டுமென்ற அனுபவம் உண்டாகும். இந்த அனுபவம்தான் உங்களுக்கு உங்கள் நாட்டின் நன்மைக்காக உழைப்பதற்கு வேண்டிய முதல் அனுபவமாம். ஆகவே, குலத்தொண்டில் ஈடுபட்டு உழைப்பதற்கு முன் வந்தால் பிறகு நம்நாட்டின் நன்மைக்காக உழைப்பது லேசாகிவிடும்.

ஆனால் சிலர் இந்தியர் என்ற முறையில் ஆதிமுதலே இந்தியாவுக்காக உழைக்கத் தொடங்க வேண்டுமே யன்றி இந்த விதமாக ஒவ்வொரு குலத்தாரும் அவர் மரபினருக்காக உழைக்கத் தொடங்குவார்களானால் நாட்டில் பல குலத்தார் என்ற உணர்ச்சி யுண்டாகும் என்பர். அவர்களுக்கு நாம் சொல்லும் பதில் என்னவென்றால் சில ஜாதியாரைத் தவிர பெரும்பாலான ஜாதிகளைச் சார்ந்தவர்கள் இப்பொழுது மிகவும் தாழ்ந்த நிலையை அடைந்திருக்கிறார்கள். அவர்களுள் ஒவ்வொரு ஜாதியாரும் அவர்கள் ஜாதியை முன்னேற்றமடையச் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வருவார்களானால் இந்தத் தாழ்ந்த நிலையிலிருக்கும் ஜாதியாரெல்லாம் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். அப்பொழுது எல்லா ஜாதியாரும் ஒரே விதமான உயர்ந்த நிலையை அடைவார்கள். அப்பொழுது பல நிலைமைகளில் இப்பொழுதிருக்கக் கூடிய பல ஜாதியார்களை இலேசாக ஒற்றுமையுள்ளவர்களாகச் செய்துவிடலாம். ஆகவே செங்குந்தராகப் பிறந்த நாம் நம் ஜாதியாரின் முன்னேற்றத்திற்காகப் பெரும் உழைப்பு எடுக்கவேண்டும். ஆனால் நம்மவர்களின் முன்னேற்றம், என் இளஞ் சகோதரர்களே! உங்கள் கையில் இருக்கின்றது.

அன்பர்களே! தமிழ்நாட்டில் நம்மரவைச் சார்ந்தவர்கள் இலக்ஷக்கணக்கான ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் நிலைமையைப் பொதுவாகக் கவனிக்கும்பொழுது மிகவும் தாழ்ந்த நிலைமையில் இருக்கிறார்களெனச் சொல்லவேண்டும். இந்த உண்மையைச் சொல்லும்பொழுது நீங்கள் கோபித்துக் கொள்ளாதிருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். நம்மவர்களுள் பெரும்பாலார் நன்றாக எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. அவர்கள் பொருளாதார நிலையைக் கவனிப்போமானால் நம்மவருள் பெரும்பாலார் பரம ஏழைகள். இந்தவித பரிதாபமான நிலையில் இருக்கும் ஜனங்களைச் சிறந்த மக்கள் ஆக்குவது எப்படி என்று ஆராய்வோம்.

ஒரு நாட்டாரோ ஒரு ஜாதியாரோ உயர்ந்த நிலைமைக்கு வரவேண்டுமானால் அவர்களுக்குக் கல்வி மிகவும் அவசியமானது. ஆகவே, நம் ஜனங்கள் எல்லோருக்கும் கல்வியைப் புகட்டவேண்டும். கல்வி கற்பிப்பது ஆடவர்களுக்கு மாத்திரமல்ல; பெண்களுக்கும் ஆடவர்களைப் போல நல்ல படிப்பைக் கொடுக்கவேண்டும். ஒரு ஜாதியார் உயர்ந்த நிலையை அடையவேண்டுமானால் அந்த ஜாதியிலுள்ள இருபாலாரும் நன்றாகப் படிக்கவேண்டும். பழைய காலக் கொள்கை என்னவெனில் 'ஆடவர் மாத்திரம் கல்வி கற்றால் போதும். மாதர்கள் உத்தியோகத்துக்கா போகிறார்கள்? ஆதலால் அவர்கள் கல்வி கற்கவேண்டியதில்லை' என்பது. ஆனால் காலம் மாறிவிட்டது. மாதர்கள் உத்தியோகத்துக்குப் போவதில்லை என்ற காலம் போய்விட்டது. அவர்களும் ஆடவர்களைப்போல யூனிவர்சிடியில் பெரிய பட்டங்களைப் பெற்று உத்தியோகத்தில் அமர்ந்திருக்கின்றனர். ஆனால் நான் இங்குச் சொல்வது கவர்ன்மெண்டு உத்தியோகத்துக்காகப் படிக்கவேண்டுமென்பதன்று. பொதுவாக மாதர்களெல்லாம் தங்கள் அறிவை அபிவிருத்தி செய்வதற்காக நன்றாகப் படிக்கவேண்டும். நம் குலத்திலுள்ள ஆண் பெண் பாலாருள் ஒவ்வொருவரும் நான்காவது வகுப்பு வரையில் கட்டாயம் படித்துத் தீரவேண்டும். இது மிகவும் குறைந்த படிப்பு; இதிலும் குறைந்திருக்க முடியாது. இந்தப் படிப்பை முடித்த பிறகு தகுதியுள்ளவர்கள் மேல் படிப்பிற்குப் போகட்டும். நம்மவருள் பெரும்பாலார் உயர்தரப் பள்ளிக்கூடங்களில் சென்று படிக்கவேண்டும். அதற்குப் பிறகு மிகுந்த அறிவுள்ள இளைஞர்களைக் கலாசாலைப் படிப்பிற்கு அனுப்பவேண்டும். இந்த விஷயத்தில் அடியேனது தாழ்மையான அபிப்பிராயம் மாதர்களும் ஆடவர்களைப்போல எல்லாவிதப் படிப்பிற்கும் செல்லவேண்டும் என்பது. ஆடவர்களைத் தான் கலாசாலைப் படிப்பிற்கு அனுப்பவேண்டும்; மாதர்களைக் கலாசாலைப் படிப்பிற்கு அனுப்பலாகாது என்று நினைப்பது நல்லதல்ல. எந்தக் காலத்தில் நம் சமுதாயத்துள்ள மாதர்கள் B. A., M. A. போன்ற பட்டங்களைப் பெறுகிறார்களோ அன்றைக்குத்தான் நம் சமுதாயம் உயர்ந்த நாகரிக நிலையை அடையும் என்பது திண்ணம்.

நம் சமுதாயத்துள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் நாலாவது வகுப்பு வரையிலும் கட்டாயப் படிப்புக் கொடுக்கவேண்டும் என்று சொல்லிவிட்டோம். இப்படிச் சொல்லிவிட்டால் மட்டும் எல்லாரும் படித்துவிடுவார்களா? என்பதை நாம் இனிக் கவனிக்கவேண்டும். கனவான்களே! நான் முன் சொன்னதுபோல் நம் சமுதாயம் ஒரு ஏழைச் சமுதாயம். பெரும்பாலாருக்கு வயிறு நிறைய இரண்டு உணவு உண்பதற்குப் போதுமான



பொருள் இல்லை. அப்படிப்பட்ட ஏழைகளுக்குத் தங்கள் ஆண் பெண் குழந்தைகளை எப்படிப் படிப்பிக்க முடியும்?

நம் சமுதாயத்து ஏழைச் சோதரர்களது பொருளாதார நிலையை உயர்த்துவதற்குரிய சில வழிகளைப் பின்னர் கூறுகின்றேன். இங்கு நம் குலப் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டியதைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் குலத்தார் இருக்கக்கூடிய ஊர்களில் கோவில்களும் அந்தக் கோவில்களுக்குரிய பொதுச் சொத்துக்களு மிருக்கின்றன. இந்தச் சொத்துக்களை நம் முன்னோர்கள் தேடி நமது பொது நன்மைக்காகக் கோவில்களின் பேரால் வைத்துவிட்டுச் சென்றனர். இந்தக் கோவில்களின் செலவுக்காக எவ்வளவு சுருக்கச் செலவு செய்ய முடியுமோ அவ்வளவு சுருக்கமாய்ச் செலவு செய்துவிட்டு (கடவுளுக்கு நாம் கொடுத்து நிறையப் போவதில்லை. கடவுள் நம்மைக் காப்பாற்றுவதற்காகக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்) மிச்சமுள்ள பணத்தை ஒவ்வொரு ஊரிலுமுள்ளவர் அந்தந்த ஊரிலுள்ள ஆண் பெண் குழந்தைகள் படிப்பிற்காகச் செலவு செய்யவேண்டும். தவிரவும், நம் முன்னோர்கள் வேண்டியதற் கதிகமான கோவில்களைக் கட்டியிருக்கிறார்கள். ஆதலால் புதிதாக நாம் கோவில் ஒன்றும் கட்டவேண்டியதில்லை. கோவில் கட்டுவதற்குச் செலவு செய்யும் பணத்தைப் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதில் உபயோகப்படுத்துவோம். இந்த விதமாகப் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதால் கடவுள் நம்மிடம் மிகுந்த அன்புள்ளவராவார். இன்னும் தனவந்தர்கள் நம் பிள்ளைகள் படித்து முன்வரவேண்டும் என்ற ஆசைகொண்டு தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்து படிப்பிற்காக அந்தத் தொகையைச் செலவு செய்தால் மிகுந்த பலனை அளிக்கும். தனவந்தர்களே! தீர்த்த யாத்திரைகள் செய்வதில் மிகுந்த திரவியத்தைச் செலவு செய்கின்றீர்கள். தீர்த்த யாத்திரைகளைக் கொஞ்சம் சுருக்கி நம் சகோதர சகோதரிகள் எல்லோரும் படிக்கவேண்டுமென்று ஆசைகொண்டு அவர்கள் படிப்பிற்காக நீங்கள் தீர்த்த யாத்திரைக்குச் செலவு செய்யும் தொகையைக் கொடுங்கள். அப்படிச் செய்வீர்களானால் தீர்த்த யாத்திரையால் உண்டாகும் நன்மையைப் பார்க்கிலும் பதின்மடங்கு நன்மை உண்டாகும். இது உண்மை. கடவுள் ஆணையாக உண்மை.

கனவான்களே! ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் 'செங்குந்தர்கள் நிதி' என்ற ஒரு நிதியை ஏற்படுத்துங்கள். தனவந்தர்கள்தான் இந்நிதிக்கு மிகுதியாகக் கொடுக்கவேண்டும். மேல்நாட்டிலுள்ள தனவந்தர்கள் கல்விக்காகப் பெருந்தொகை கொடுத்து உதவுகின்றார்கள் என்பதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். நம் நாட்டில் அனேக மிஷன் பள்ளிக்கூடங்களும், கலாசாலைகளும், வாசிப்புச் சாலைகளு மிருக்கின்றன அல்லவா? அவற்றிற்குப் பண உதவி செய்பவர்கள் மேல்நாட்டிலுள்ள தனவந்தர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இந்தவிதமாக மேல் நாட்டார் அந்நிய நாட்டாரது கல்வி அபிவிருத்திக்காக ஏராளமான பொருளைக் கொடுப்பார்களானால் நாம் நமது குலத்தாரது படிப்பிற்காகக் கொடுக்கவேண்டியது மிகுந்த அவசியமல்லவா? இவ்விதம் தனவந்தரும் மற்றவரும் கொடுத்த 'செங்குந்த நிதி'யின் உதவியால் திறமையுள்ள பிள்ளைகளை உயர்தரப் படிப்பிற்கும் கலாசாலைப் படிப்பிற்கும் அனுப்பி உயர்ந்த பட்டங்கள் பெறும்படி செய்யவேண்டும். நம் சமுதாயத்தில் எவ்வளவு அதிகம் பட்டாதாரிகள் தோன்றுகின்றார்களோ அவ்வளவு நம் சமுதாயத்தாரை மற்ற சமுதாயத்தார் மதிப்பார்கள். ஆனால் சிலர் 'படித்து எதற்கு? கவர்ன்மெண்டில் வேலை கிடைப்பதற்கு வழி இல்லையே' என்று ஆட்சேபிக்கலாம். கனவான்களே! நம்மவருள் படியாத ஏழைகள் பலர் சாமியார்களாய் ஊர் ஊராய்ச் சென்று பிச்சை எடுத்துக்கொண்டு திரிகிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் யூனிவர்சிடி பட்டாதாரிகள் பிச்சை எடுக்கப் போனார்களென்று இதுவரையிலும் நாம் கேட்டதில்லை. ஆனால் பிச்சை எடுக்கவேண்டியது வந்தபோதிலும் நன்றாகப் படிப்பது நல்லது. ஒரு பாண்டிய அரசனும் 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்றார். கனவான்களே! இந்த அரச புலவரது வார்த்தைகளை ஆராய்ந்து பாருங்கள்.

இனி நமது சமுதாயத்தாரது பொருளாதார நிலையைக் கவனிப்போம். ஒவ்வொரு ஊரிலும் நம்மவருள் சிலர் தனவந்தராக இருக்கலாம். ஆனால் பெரும்பாலார் ஏழைகள். ஒரு நேரம்கூட வயிறு நிறைய உண்பதற்கு இல்லாதவர்கள் இலக்ஷக்கணக்கான ஜனங்கள் இருக்கிறார்கள். இந்த ஏழைச் சகோதரச்கோதரிகள் வாழ்வை இன்ப வாழ்வாக்குவது எப்படி? கனவான்களே! நம் சமுதாயத்தாருக்குரிய தொழில் நெசவுத் தொழில் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. 'நெய்தல் தொழிற்கு நிகரில்லை' என்றும் தமிழ் நாட்டிலே சிறந்தவருள் சிறந்தவரான திருவள்ளுவர் செய்து வந்த தொழில் நெசவுத் தொழில் என்றும் நெசவுத் தொழிலைப் புகழ்ந்து கூறுகின்றனர். ஆனால் நெசவுத் தொழில் செய்பவரின் தற்கால நிலைமை என்ன? கனவான்களே! இதுவிஷயமாக உங்களுக்கு என்னைப் பார்க்கிலும் அதிகமாகத் தெரியும். நம் சகோதரர்கள் பகல் எல்லாம் நெய்கிறார்கள்; சில சமயங்களில் இரவிலும் திருவள்ளுவர் செய்த சிறந்த தொழிலைச் செய்கிறார்கள். இதற்கு நம் சகோதரிகளும் உதவி செய்கிறார்கள். இவ்விதமாக இரவிலும் பகலிலும் தொழில் செய்தும் கஷ்டமின்றிச் சாப்பிடுவதற்கில்லை. இவர்கள் செய்யும் துணிகளைப் பிரியத்துடன் வாங்குவாரில்லை. முதலாளிகள் வாங்குகிறார்களே என்றால் அவர்கள் செய்வது என்ன? முதலாளிகளே! தங்களைக் குறை சொல்லுகிறேனென்று என்னிடம் கோபங்கொள்ளாதிருக்க வேண்டிக் கொள்

கிறேன். நம் ஏழைச் சகோதரர்கள் கஷ்டப்பட்டுத் துணியை நெய்துவைத்திருக்கிறார்கள். ஆனால் அரிசி வாங்குவதற்குத் துட்டு இல்லாமல் விழிக்கின்றார்கள் என்பது நம் முதலாளிகளுக்குத் தெரியும். ஆகவே என்ன செய்கிறார்கள்? குறைந்த விலைக்குத் தாங்கள் நெய்த துணிகளைக் கேட்டால் கொடுப்பார்களென நினைத்து துணிகளைக் குறைந்த விலைக்குக் கேட்கிறார்கள். நம் ஏழைச் சகோதரர்களும் அரிசி வாங்கித் தங்கள் குடும்பத்தாரைக் காப்பாற்றவேண்டுமென்ற நிலையில் கேட்ட விலைக்குத் துணிகளைக் கொடுக்கிறார்கள். இதனால் இலாபம் இல்லாமல் போவதுடன் சரியான கூலியும் கிடைப்பதில்லை.

கனவான்களே! நம் ஏழைச் சகோதரர்களை இந்தத் துன்பமான நிலைமையில் நின்றும் எப்படிக் காப்பாற்றுவது? மேல் நாட்டாரெல்லாம் ஐக்கிய நாணய சங்கங்களை ஏற்படுத்திப் பெரிய நன்மையை அடைந்திருக்கிறார்கள். நாமும் நெசவுத் தொழிலாளர் ஐக்கிய நாணய சங்கங்களை ஏற்படுத்தவேண்டும். அந்தச் சங்கங்கள் நம் சகோதரர் தயாரிக்கும் துணிகளை நியாயமான விலைக்கு வாங்கி நியாயமான விலைக்கு விற்று அங்ஙனம் விற்பதால் கிடைக்கும் லாபத்தையும் தொழிலாளர்க்குப் பங்குவைத்துக் கொடுக்கவேண்டும். இந்தவிதமாகச் செய்யப்படுமானால் நம் சகோதரரது பொருளாதார நிலைமை சற்றுச் சீரடையலாம். ஆனால் தொழிலாள சகோதரர்களே! உங்களிடம் ஒரு வேண்டுகோள். ஐக்கிய நாணய சங்கங்கள் உங்களுக்கிடையில் நன்றாக ஓங்கி வளரவேண்டுமானால் உங்களுக்குள் ஒற்றுமை என்பது அவசியம் இருக்கவேண்டும். தவிரவும் ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவுமுள்ளவராக இருக்கவேண்டும். இன்னும் சிக்கனமாகச் செலவு செய்யவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் நம் தனவந்தர்களான முதலாளிகளிடம் நான் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள விரும்புகிறேன். முதலாளிகளே! நீங்கள் நமது ஏழைத் தொழிலாளிகளை உங்கள் சகோதரர்களைப் போல நினைத்து அவர்களிடம் கொஞ்சம் அன்பு காட்டவேண்டும். அவர்கள் கொண்டு வரும் துணிகளை நியாயமான விலைக்குவாங்கி அவர்களைக் காப்பாற்றுங்கள். இப்படி நீங்கள் செய்வீர்களானால் கடவுள் அருளைப் பெறுவதற்காக மிகுந்த பணச்செலவுசெய்து கோவில்களில் பெரியசிறப்புத் திருவிழாக்களைச் செய்யவேண்டாம். நம் ஏழைச் சகோதரரிடம் தயவுள்ளவராக இருப்பீர்களானால் அவர்கள் எல்லாரும் உங்களிடம் நன்றி பாராட்டுவதுடன் உங்களது அடிமைகளாக உங்கள் வார்த்தைகளைத் தங்கள் தலைமேல் கொண்டு நீங்கள் செய்யச் சொல்லும் காரியங்களை உங்கள் அடிபணிந்து செய்வார்கள். அவ்விதமில்லாமல் முதலாளிகளே! நம் ஏழைச் சகோதரரிடம் கருணையில்லாமல் பொருள் தேடுவதையும் உங்கள் ஆடம்பர வாழ்வையுமே முக்கிய நோக்கமாகக் கொண்டு நடப்பீர்களானால் நீங்கள் ஏழைச் சகோதரரது இயற்கையான விரோதிகளாவீர்கள். மேல்நாட்டில் தொழிலாளி முதலாளி சண்டை பலத்திருக்கின்றது. நம் நாட்டிலும் அச்சண்டை தலைகாட்டாமலிருக்கவில்லை. அந்த விதமான சண்டை பலப்படாமல் பார்த்துக்கொள்வது உங்கள் கடமையாகும்.

செங்குந்த இளைஞர்களே! நம் தொழிலாளிகளின் நன்மைக்காக அங்கங்கே ஐக்கிய நாணய சங்கங்களை ஏற்படுத்தி அவர்களைக் காப்பாற்றுவதும் முதலாளிகளிடம் சென்று தொழிலாளிகளை அன்புடன் நடத்தும்படி செய்யவேண்டியதும் உங்கள் கடமையாம்.

கனவான்களே! கொஞ்ச காலத்துக்கு முன்பு வரையிலும் செங்குந்தர்களான நமக்குள் மாகாண உணர்ச்சி ஒன்றும் இல்லாதிருந்தது. 'மாகாண உணர்ச்சி' என்றால் என்ன என்பதைச் சொல்கின்றேன். தமிழ் நாட்டிலுள்ள செங்குந்த முதலியார்களான நாம் எல்லாரும் ஒரே கூட்டத்தார், பந்துக்கள் என்ற உணர்ச்சி கொஞ்ச வருடத்துக்கு முன்பு வரையிலும் இல்லாதிருந்தது. ஒரு ஜில்லாவிலிருந்த செங்குந்தர் வேறொரு ஜில்லாவிலிருந்த செங்குந்தர்களைத் தங்கள் பந்துக்கள் என நினையாதிருந்தனர். ஆனால் இப்பொழுது கொல்லங்கோடு முதல் கன்னியாகுமரிவரையிலும் உள்ள செங்குந்தர்களெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்ற உணர்ச்சி வரத் தொடங்கி இருக்கிறது. இதையே நான் மாகாண உணர்ச்சி என்று சொல்கின்றேன். இந்த உணர்ச்சி வந்ததன் பயனாக பல ஊர்களில் இருப்பவர்களான நாம் கல்யாணசம்பந்தங்கள் செய்துகொள்ளவேண்டுமென விரும்புகிறோம். சில இடங்களில் முன்னர் பந்துக்களாக இராதிருந்தவர்கள் இப்பொழுது கல்யாணமூலம் பந்துக்களாயிருக்கின்றனர். இன்னும் இந்தவிதமான கல்யாணங்களைச் செய்வதற்கு முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. கனவான்களே! இந்தவிதமான கல்யாணங்கள் மிகுதியாக நடைபெறுவதற்கு இறைவன் அருள்புரிவாராக. நமக்குள் இப்பொழுதிருக்கக்கூடிய பலபிரிவார் என்ற சொல் போகவேண்டும். நாம் எல்லாரும் ஒரே குலத்தார் ஒரே பிரிவார் என்ற சொல் பிறக்கவேண்டும். நாம் ஒற்றுமையுள்ள ஒரு சமுதாய மாகவேண்டுமானால் மேற்கூறியவாறுள்ள கல்யாணங்கள் மிகுதியாக நடக்கவேண்டும்.

ஆனால் இந்த விதமான கல்யாணங்கள் நாம் விரும்புவதுபோல மிகுதியாக நடைபெறவில்லை. இப்பொழுதுள்ள அறிவுடைய முதியோர்களும் எல்லா இளைஞர்களும் நமக்குள் பல பிரிவாராக ஒருவருக்கொருவர் கல்யாணம் செய்துகொள்ளாமல் இருப்பது சரியல்ல என்பதை ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் இந்த நல்ல நோக்கமுடையவர்களும் தாங்களாக இந்தவிதமான கல்யாணங்களைச் செய்து காட்டுவதில்லை. வேறு யாராவது செய்து காட்டவேண்டுமென விரும்புகின்றனர். இந்த இடத்தில் நமது குலத்தலைவர்கள் செய்யவேண்டிய கடமை ஒன்றிருக்கின்றது. நமது தனவந்தர்கள் இந்தவிதமான கல்யாணங்களை முன்மாதிரியாகச் செய்து காட்டவேண்டும். ஏழைகள் இந்தவிதமான கல்யாணங்களைச் செய்வார்களானால் பெண் கிடையாததாலும் மாப்பிள்ளை கிடையாததாலும் இந்த விதமாகச் செய்தார்கள் என ஏளனம் செய்வார்கள். ஆதலால் தனவந்தர்களே! இந்தவிதமான கல்யாணங்களை முதலாவது செய்து காட்டுவது உங்கள் கடமையாம். செங்குந்த இளஞ்சிங்கங்களே! நீங்கள் ஒரு உறுதி செய்துகொள்ளவேண்டும். கூடிய வரையிலும் நமது பிரிவில் நின்றும் வேறான பிரிவிலேயே உங்களது வாழ்க்கைத் துணைவிகளைத் தேடிக்கொள்வது என நீங்கள் தீர்மானிப்பீர்களானால் தமிழ் நாட்டிலுள்ள செங்குந்தர் எல்லாம் சொற்ப காலத்தில் ஒரு நெருங்கின சம்பந்தமுள்ள கூட்டத்தாராவார்கள்.



கனவான்களே! மனிதன் குறைபாடுடையவன். ஆகவே எல்லா நாடுகளிலும் எல்லா ஜாதிகளிலும் உள்ள மனிதர்களிடத்தில் குறைகள் இருப்பது சாதாரணமேயாகும். ஆனால் மனிதருள் சில கூட்டதார்களிடத்தில் வேறு சிலகூட்டத்தாரைப்பார்க்கிலும் குறைகள் அதிகமாக இருக்கின்றன. அவற்றை நீக்குவது பகுத்தறிவுள்ள மனிதனது கடமையாம். மற்ற சமுதாயத்தார்களிடத்தில் இருப்பதுபோல நம் சமுதாயத்தாரிடத்திலும் சில குறைகள் இருக்கின்றன. அவற்றை நீக்கவேண்டுமெனச் சொல்லும் பொழுது நீங்கள் கோபித்துக் கொள்ளாமல் என்னை மன்னிப்பீர்களென நம்புகிறேன்.

நம்மவர் இருக்கும் ஒவ்வொரு ஊரிலும் நம்மை நல்லவராக்குவதற்குக் கடவுள் கோவில் ஒன்று இருப்பதுபோல அநேகமாக எல்லா ஊர்களிலும் நம்மை நாசமாக்குவதற்குக் கக்ஷி ஒன்றும் இருந்துவருகிறது. மனிதர் குணம் இயற்கையிலேயே குறைபாடு உடையது என நான் முன்பு சொன்னேன். இரண்டு பேர் தங்கள் அபிப்பிராயங்களில் முழுவதும் இசைந்து போவதைக் காண்பது அருமை. அப்படியானால் ஒரு கூட்டத்தார் ஒரே விதமான அபிப்பிராயத்தை யுடையவரா யிருப்பதைப் பார்ப்பது முடியாது. அபிப்பிராய பேதங்கள் இருக்கட்டும். ஆனால் ஒருவருக்கொருவர் தாம் கொண்ட அபிப்பிராயமே சரி என நினைத்துச் சண்டை போட்டுக் கொண்டு கக்ஷிகளை உண்டாக்காமல் இருப்பது நல்லது. பொதுவாக மனிதர்களான நாம் எப்பொழுதுமே சரியாக நடந்துகொள்வதில்லை. சில சமயங்களில் தப்பான அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதுண்டு; சில சமயங்களில் தவறுதலாகவும் நடந்துகொள்வதுண்டு என்று நினைப்போமானால் நம்மை விட்டுப் பிடிவாத குணங்கள் சற்று நீங்கும்.

கனவான்களே! ஒரு ஊரில் கக்ஷி இருப்பதால் அவ்வூருக்கு உண்டாகும் தீமைகளைக் குறித்து உலக அனுபவம் மிகுதியாகவுள்ள தங்களுக்கு நான் சொல்லவேண்டியதில்லை. அதனால் பந்துக்கள், ஒரே இனத்தார், ஒருவரை ஒருவர் வெறுத்து ஒருவருக்கொருவர் பெருந்தீங்கைச் செய்துகொள்கின்றனர். மிகுந்த பணத்தை கோர்ட்டாருக்கும் வக்கீல்கள், சாக்ஷிகள் முதலானவர்க்கும் கொடுப்பதில் தொலைக்கின்றனர். இந்த விதமாக வீணாகச் செலவு செய்யும் பொருளை நம் சிறுவர்கள் சிறுமிகள் படிப்பிற்காகச் செலவு செய்தால் எவ்வளவோ நன்மையாக இருக்கும்.

செங்குந்த இளைஞர்களே! நீங்கள் வாழும் ஊர்களில் கக்ஷிகள் உண்டாகுமானால் நீங்கள் ஒரு பக்கத்திலும் சாராமல் பொதுவானவர்களாக இருந்து உங்கள் ஊர்களில் கக்ஷிகளால் உண்டாகும் தீமைகள் வராதிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

கனவான்களே! இப்பொழுது இந்தியாவில் எங்குத்திரும்பினபோதிலும் 'ஆலயப்பிரவேசம்' என்ற விஷயமாகத் தீவிரமான பேச்சு நடந்துகொண்டிருக்கிறது. தீண்டாதாரது ஆலயப்பிரவேச விஷயமாக இப்பொழுது இரண்டு அபிப்பிராயங்களிருப்பதாகத் தோன்றினபோதிலும் பெரும்பாலான ஜனங்கள், மேதாவிகள், பெரிய மனதுடையவர்கள் இவர்கள் 'எல்லாரும் கடவுள் எல்லார்க்கும் தந்தை போன்றவர். ஆகவே அவர் தங்கும் இடமும் எல்லார்க்கும் பொதுவானது. அவர் தமது கோவிலுக்குத் தமதுகுழந்தைகளான எல்லா ஜனங்களையும் வர விரும்புகின்றனர்' என்றே சொல்கின்றனர். இந்த அபிப்பிராயத்துக்கு எதிரான அபிப்பிராயம் சொல்பவர் இந்தத் தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தால் மதத்துக்கு அபாயம் வந்துவிட்டது என்கின்றனர். மதத்திற்கு அபாயம் ஒன்றும் வரவில்லை. இந்துமதத்திற்குச் சனியன் பிடித்துக் கொஞ்சகாலம் ஆய்விட்டது. இந்து மதத்தைப் புதுமுறைகளில் சீர்திருத்த அறிவாளிகள் முயற்சி எடுக்கவேண்டும். தீண்டாதார்கள் கோவிலுக்குள் போகலாகா தெனச் சொல்பவர்களுடைய மனதில் இருக்கும் உண்மையான எண்ணத்தை வெளியில் சொல்லாமல் மறைத்து வைத்துக்கொண்டு வேறு போலிக் காரணங்களை வெளியே சொல்கின்றனர். அவர்கள் உண்மையான நோக்கம் என்னவென்றால் கோவிலுக்குள் சில ஜாதியார் போகாதிருப்பதால் கோவிலுக்குள் போகிறவர்களுக்கு மதிப்பு இருந்து வருகிறது. எல்லாரும் கோவிலுக்குள் போகச் சம்மதிக்கப்படுவதானால் இந்த மதிப்பு போய்விடும் என்று பயப்படுகிறார்கள். கனவான்களே! இந்த விதமான மதிப்பை எல்லாம் நினைத்துக்கொண்டு இனிமேல் உலகத்தில் வாழமுடியாது. மனிதர் எல்லாரும் சமமானவர். பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டே இனிக் காரியங்கள் நடைபெறும். கொஞ்சகாலத்துக்குமுன் இருந்ததற்கு இப்பொழுது சமுதாய விஷயங்களில் எவ்வளவோ மாற்றங்கள் வந்துவிட்டன; வந்துகொண்டிருக்கின்றன. கடவுள் தங்கியிருக்கும் ஆலயங்களும் எல்லா ஜாதியாருக்கும் கூடியசீக்கிரத்தில் திறந்துவிடப்படும் என்பது நிச்சயம். ஆகவே அந்தக் காலத்துக்கு முன்னாகவே நமது கோவில்களுக்குள் தீண்டாதார் என்று சொல்லப்படுபவரைப் பெரிய மனதுடனும் அன்புடனும் வரச்சம்மதித்து நாம் நல்லவர்கள் என்ற பெயரைப் பெறுவோம்.

செங்குந்த இளைஞர்களே! தீண்டாதார் ஆலயப் பிரவேச விஷயமாக உங்கள்மேல் ஒரு பெரிய பொறுப்பு இருக்கின்றது. நம்மவருள் வயது முதிர்ந்தவர்கள் நீண்ட கால வழக்கத்தைக் கவனித்து இவர்கள் கோவிலுக்குள் போகலாகாதென்ற அபிப்பிராயங் கொண்டவராக இருக்கலாம். வேறு சிலர் தங்கள் ஜாதியாருக்கு இப்பொழுதிருக்கும் மதிப்புக் குறைந்துவிடுமென நினைத்துத் தீண்டாதார் கோவிலுக்குள் வரலாகாதெனச் சொல்லலாம். இவர்களிடம் எல்லாம் நீங்கள் சென்று தீண்டாதார் கோவிலுக்குள் போக வேண்டியது நியாயமான ஒரு காரியம் என்பதைப் பல காரணங்களுடன் எடுத்துச் சொல்லி அவர்கள் மனதைத் திருப்பித் தீண்டாதார் ஆலயப் பிரவேசத்துக்குப் பெரும் உதவி செய்யவேண்டும்.

என் இளஞ் சகோதரர்களே! உங்களால்தான் நமது குலம் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும். நீங்கள் நம் சிறுவர் சிறுமியர் படிப்பிற்காகப் பெரும் உழைப்பு எடுக்கவேண்டும். இராப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி வயதான படிப்புத் தெரியாதவர்களுக்குக் கல்வி அறிவைப் புகட்டவேண்டும். சங்கங்கள் ஏற்படுத்தி உலகத்தில் புதிது புதிதாகத் தோன்றும் உயர்ந்த எண்ணங்களைச் சாதாரண ஜனங்களுக்குத் தெளிவாய்ப் பிரசங்கங்கள் மூலம் தெரிவிக்கவேண்டும். புஸ்தகசாலைகள், வாசிப்புச் சாலைகள் ஏற்படுத்தி அவைகள் மூலம் நம்மவர் அறிவைப் பெருக்கவேண்டும். கிராமங்களிலிருக்கும் ஏழைச் சகோதரர்களுக்கு உங்களால் இயன்ற பலவிதமான உதவிகளைச் செய்யவேண்டும். சாதாரணமாக ஆங்கிலம் படித்தவர்கள் கிராமவாசிகளிடம் நெருங்கிப் பழகுவதில்லை என்றும் படித்தவர்களால் கிராமவாசிகளுக்கு ஒரு நன்மையும் இல்லை என்றும் ஆங்கிலம் படித்தவர்களைப்பற்றிக் குறை சொல்லப்பட்டிருக்கிறது. என் அருமைச் சகோதரர்களே! இந்தக் குறை உங்களைப்பற்றிச் சொல்லாதிருக்கும்படி நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். நம் ஏழைச் சனங்களிடம் தாராளமாக உலாவி உங்கள் படிப்பினால் உண்டான நன்மையை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். நாம் இப்பொழுது பல பிரிவினராக இருக்கின்றோம், இந்தப் பல பிரிவுகள் எல்லாம் தொலைவதற்கு நீங்கள் பெரும்பாடு படவேண்டும். நம் குலத்தார் இப்பொழுது சென்னை இராஜதானியில் ஒரு உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. உங்களால் நம்மவர் கூடிய சீக்கிரத்தில் உயர்ந்த நிலையை அடைவதற்கு நீங்கள் இராப்பகலாக உழைக்கவேண்டும். இதற்குச் சம்பளம் கிடையாது; இந்த உயர்ந்த வேலைக்குச் சம்பளத்தை எதிர்பார்க்கவும் முடியாது. இது கைம்மாறு கருதாத உயர்ந்த வேலை. இந்த வேலைக்காக எல்லாம் வல்ல கடவுளது அருள் உங்களுக்கு உண்டாகும்.

# தீர்மானங்கள்

1. தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவராகவும், மித்திரன் ஆதிபோஷகர்களுள் ஒருவராகவும் இருந்த மஞ்சட்கொல்லை திரு. அரு. சி. தியாகராய முதலியாரவர்கள் இவ்வுலகினை நீத்தமைக்கு இம்மகாநாடு அனுதாபப்பட்டு அவ்வனுதாபத்தினை அவரது குடும்பத்தினருக்கு அறிவிக்கத் தலைவரை வேண்டிக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர் திரு. ஆர். விநாயகமூர்த்தி முதலியார், மஞ்சட்கொல்லை. ஆமோதித்தவர் திரு. தி. நா. சபாபதி முதலியார், திருவாரூர்.

2. தற்சமயம் நெல் விலைக் குறைவினால் விவசாயிகட்கேற்பட்டுள்ள கஷ்டங்களைக் கருதி நிலத்தீர்வையை நூற்றுக்குப் பன்னிரண்டரை வீதம் குறைக்க வேண்டுமெனச் சென்னை சட்டசபை தீர்மானித்ததைச் சென்னை அரசாங்கம் நிராகரித்துவிட்டதற்காக இம்மகாநாடு வருந்துவதோடு நூற்றுக்கு 25-க்குக் குறையாமல் கிஸ்தியைக் குறைக்க வேண்டுமென இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர் திரு. தி. நா. சபாபதி முதலியார், திருவாரூர். ஆமோதித்தவர் திரு. முத்துக்குமாரசாமி முதலியார், மஞ்சட்கொல்லை.

3. நமது சமூகத்து ஏழை மாணவர்களின் கல்வி தொழிலபிவிருத்திக் குபயோகப்படுமாறு சென்னையிலுள்ள செங்குந்தர் கல்விநிதிக்குக் கீழ்க்கண்ட மூன்று வகைகளில் நன்கொடை வசூலித்து அனுப்பிக் கல்விநிதியினைப் பெருமிதமாக வளர்க்குமாறு ஒவ்வொரு கிராமத்திலுள்ள கிளைச்சங்கத்தாரையும் கிளைச்சங்கமில்லாத இடங்களில் நாட்டாண்மை பெரிய தனக்காரர்கள் அதனைச் செய்ய வேண்டுமென அவர்களையும் இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

(எ) ஒவ்வொரு கிராமத்திலும் நடக்கும் நம்மவர் சுப காரியங்களுக்குப் போய் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் நன்கொடை வசூலித்தல்.

(பி) நம்மவர்களால் நடத்தப்படும் வியாபாரத்தில் கிடைக்கும் மகிமைப் பணத்தில் நான்கில் ஒரு பகுதியை வசூலித்தல்.

(சி) வியாபாரமில்லாத மிராஸ்தார்கள் வேலைக்காரர் முதலியவர்களுக்குக் கொடுப்பது போல் அறுவடை காலத்தில் ஏக்ராவுக்கு ஒரு பட்டணம் படி வீதம் தானியம் வசூலித்தல்.

4. கல்வியில் பின்னணியில் நிற்கும் சமூகங்களை யெல்லாம் கைதூக்கிவிடும் முறையிலே நம்முடைய சமூகமாணவர்க்கும் சர்க்காரார் அளித்து



வரும் உபகாரச் சம்பளம் சில பாடசாலைகளில் மறுக்கப்படுவது கேட்டு வருந்துவதோடு அத்தகைய குறைபாடு நேராதிருப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்யுமாறும், செங்குந்தர், கைக்கோளர் என்னும் இருதிறப்பட்ட நமது பட்டங்கள் இத்தகைய விஷயங்களில் மயக்கத்திற்குக் காரணமாயிருப்பதால் சமீபத்தில் ஜனசங்கியை விவர அறிக்கையில் வெளியிட்டிருப்பது போலவே கல்வித்திட்டங்களிலும் பிறவற்றிலும் நம்மவரனைவரையும் செங்குந்த ரென்னும் ஒரே பெயரால் குறிப்பிடவும் அதற்கு அவசியமான மாறுதல்களைச் செய்யவும் வேண்டுமென்றும், அரசாங்கத்தினரையும் ஸ்தல ஸ்தாபனங்களையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

பிரேரேபித்தவர் திரு. வி. ரத்தின முதலியார் பி. ஏ. பி. எல்., சென்னை. ஆமோதித்தவர் திரு. ஏ. ஆர். செல்லப்பா, தக்கோலம்.

5. சுபாசுபங்கள் தவிர சமூகத்தாரால் செய்யப்படும் குற்றங் குறைகளையும் வழக்குகளையும் விசாரித்துச் சீர்படுத்துவதற்காக ஒவ்வொரு ஊராரும் வருடந்தோறும் தேர்தல் மூலம் ஐந்து பிரதிநிதிகள் கொண்ட ஒரு பஞ்சாயத்துச் சபையும் அச்சபையின் தீர்ப்பின் மேல் முறையீடு செய்ய 10 பிரதிநிதிகள் கொண்ட ஓர் சபையும் நியமித்துப் பெரும்பாலோர் அபிப்பிராயத்தின்படி தீர்ப்புச் செய்ய வேண்டுமென்றும், தேர்தல் பெரியதனக்காரர் உள்பட ஊராரால் நடத்தப்பட வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர் திரு. கே. எ. சண்முக முதலியார் திருப்பத்தூர்.

ஆமோதிததவர் திரு. எம். வி. பீமராஜ முதலியார், குடியேற்றம்.

6. தற்போது நம் சமூகம் உள்ள பிற்போக்கான நிலையில் நம் சொந்த அபிப்பிராயங்களைப் பாராட்டிக்கொண்டிருப்போமானால் அவை சமூகத்தையே பெரிதும் பாழ்படுத்துமாதலால் சொந்த விரோதங்கள் சமூக ராஜீய அபிப்பிராய பேதங்கள் இவைகளை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் குலாபிமானத்தையே பெரிதாகக் கொண்டு நம் அபேட்சகர்கள் வெற்றிபெற முழுமனதுடன் உழைக்க வேண்டுமெனச் செங்குந்தர் ஒவ்வொருவரையும் இம்மகாநாடு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறது.

தலைவரால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

7. நமது சமூகத்தினருள் இடம், திக்கு வேறுபாட்டால் உள்ள பல பாகுபாடுகளையும் விட்டுவிட்டுச் சம்மத மணம் செய்யவேண்டுமெனவும், சடங்கு முதலிய வேறுபாடு இருக்குமாயின் மணமகன் குடும்ப வழக்கத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், 40 வயதிற்கு மேற்பட்ட மணமகனுக்குப் புது மணப்பெண் தரக்கூடாதென்றும், விதவைப் பெண்கள் இஷ்டப்பட்டால் மறுமணஞ் செய்துகொள்வதைத் தடுப்பது கூடாதென்றும், இம்மகாநாடு தீர்மானிப்பதோடு பெற்றோரும் பெரியதனக்காரரும் ஊராரும் இதைக் கவனித்து நடவடிக்கையில் கொணர முயல வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறது.

பிரேரேபித்தவர் திரு. சி. பி. பன்னிருகைப்பெருமாள்முதலியார், பீ.ஏ., பீ.எல்., திருவனந்தபுரம். ஆமோதித்தவர் திரு. ஏ. ஆர். செல்லப்பா, தக்கோலம்.

8. ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் குடும்ப சொத்தில் பாகம் இருக்க வேண்டுமென அரசாங்கத்தார் ஓர் சட்டமியற்ற வேண்டுமெனவும், யெண்கள்பால் பரிவு, மரியாதை, மேம்பாடு முதலியவை காட்டப்பட வேண்டுமெனவும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர் திரு. பி. செ. மாணிக்கவர்சகர், காஞ்சீபுரம். ஆமோதித்தவர் திரு. ஏ. ஆர். செல்லப்பா, தக்கோலம்.

9. கல்யாணம், ஆலயம், மடம் இவைகளில் வறையறையின்றி வீண் செலவு செய்வதை நிறுத்திச் சுருங்கச் செய்தல் வேண்டுமெனவும், கட்சி சம்பந்தமாய் வழக்கிட்டு எவ்வளவும் செலவிடக் கூடாதென்றும், இம்மகாநாடு அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறது.

தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

10. செங்குந்தர்களது சொந்தக் கோயில்களிலிருந்து வரும் வருமானத்தைக் கோயிலுக்கு மிதமாகச் செலவு செய்துகொண்டு மிச்சமுள்ள தொகையைப் படிப்பிற்காகச் செலவிட வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரேரித்தவர் திரு. பெருமாள் முதலியார். ஆமோதித்தவர் திரு. கே. முத்துக்குமாரசாமி முதலியார், கொல்லங்கோடு.

11. சென்னை சட்டசபையில் சாமி வெங்கடாசலஞ் செட்டியாரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் பொதுஜனப் புத்தகாலய மசோதாவை இம்மகாநாடு முழுமனதுடன் ஆதரிப்பதோடு அதனை ஆதரித்து நிறைவேற்ற வேண்டுமெனச் சட்டசபை அங்கத்தினர்களை வேண்டிக்கொள்ளுகிறது.

தீர்மானத்தைச் சட்டசபை அங்கத்தினருக்கும் சென்னை அரசாங்கத்திற்கும் அனுப்பும்படி தலைவரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

12 செங்குந்தர்கள் பெருமிதமாக வதியும் ஒவ்வொரு கிராமத்திலும் ஊர்ப் பொதுப்பணத்திலிருந்து ஒரு வாசகசாலை நியமித்துச் செங்குந்தரது அறிவையும் உலகானுபவத்தையும் வளர்க்க வேண்டுமெனவும் ஊர்ப்பொதுவில் செங்குந்தமித்திரனுக்கு ஒரு பரம்பரைச் சந்தாவேனும் செலுத்த வேண்டுமெனவும் கிராம நாட்டாண்மை பெரிய தனக்காரரை இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார், காஞ்சீபுரம். ஆமோதித்தவர் திரு. ஜெ. தங்கவேல் பி.ஏ., சென்னை.

13. அடுத்துவரும் சட்டசபைத் தேர்தலில் நம்மவர் வெற்றிபெறக்கூடிய ஓரிடத்தில் நமது குலத்தவரொருவரை அபேட்சகராக நிறுத்திச் சங்கத்தின்மூலம் வேலை செய்யவேண்டுவது மிகவும் அவசியமென இம்மகாநாடு கருதுவதோடு அதற்கேற்ற முயற்சிகளைச் செய்யுமாறு தலைச்சங்கத்தினரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர் திரு. பி. செ. மாணிக்கவாசகர், காஞ்சீபுரம். ஆமோதித்தவர் திரு. ஜெ. தங்கவேல் பி.ஏ., சென்னை.

14. உடற்பயிற்சியே சரீர சௌக்கியத்திற்கும் மனோதிடத்திற்கும் காரணமாயிருப்பதால் ஒவ்வொரு ஊரிலுள்ள செங்குந்த இளைஞர்களும் உடற்பயிற்சிக் கழகங்களை ஆரம்பித்துத் தினந்தோறும் உடல் வன்மைக்கேற்ற பயிற்சிகளைப் பெறுமாறு இளைஞர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர் திரு. மாணிக்கவாசகர் காஞ்சீபுரம். ஆமோதித்தவர் திரு. செல்லப்பா, தக்கோலம்.

15. ஒவ்வொரு கிராமத்திலும் செங்குந்தத் தொண்டர்படை ஒன்று திரட்டி அவர்கள் பொதுவாகக் கிராமத்தொண்டும், சிறப்பாகச் சமூகத் தொண்டும் ஆற்றுவதற்கேற்ற வகையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டுவது அவசியமெனக் கருதுவதால் அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிராமத்தலைவர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

16. நாடெங்கும் தேசீயக் கிளர்ச்சி மும்முரமாக நடந்துகொண்டிருப்பதால் அதற்கு முதற் படியாக உள்ள சுதேசிக் கைத்தொழி லபிவிருத்திக்காக அவரவராலான உதவியை ஒவ்வொரு செங்குந்தரும் செய்ய வேண்டுமென்றும், அந்த வழியிலே கூடுமானவரை சுதேசிப் பொருள்களையே வாங்க வேண்டுமென்றும் இம்மகாநாடு செங்குந்தர்களை வேண்டிக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர் திரு. ஜெ. தங்கவேல், சென்னை. திரு. ஆமோதித்தவர் விஜயகமூர்த்தி முதலியார் மஞ்சட்கொல்லை.

17. கதராடையினைப் பாரத நாடெங்கும் பரப்பிக் கதர்க் கைத்தொழிலை நிலைநாட்ட வேண்டுமெனத் தீவிரமான பிரசாரமும் முயற்சியும் நடந்துவரும் இக்காலத்தில் கதர்த் தொழில் ஆரம்பத்தினால் தாங்கள் பரம்பரையாகச் செய்துவந்த அந்நிய நூல் நெசவைவிட்டுக் கதராடை உற்பத்தி செய்யும் தொழிலை மேற்கொண்டுள்ள நம்மவர்கள் செய்யும் கதராடைகளை அகில இந்திய நூற்போர் சங்கம் அங்கீகரிக்க மறுப்பதன் காரணமாக நம்மவர்கள் அவர்களை நம்பி எழ்மைக்கு இலக்காகி வருந்துவதால் இனி நம்மவர்கள் நெய்யும் கதராடைகளை எல்லாம் தடையும் தவக்கமுமின்றி அங்கீகரிக்குமாறு மேற்படி சங்கத்தை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரேபித்தவர் திரு. கே. மாணிக்க முதலியார், மதுரை. ஆமோதித்தவர் திரு. ரா. சம்பந்தமூர்த்தி முதலியார், மஞ்சட்கொல்லை.

18. ஒழுக்கம் விழுப்பந் தருமாதலால் அறிவினை மயக்கும் கள் முதலியன அருந்தல் உயிர்ப் பலி இடல், ஊனுண்ணல் முதலிய தீய ஒழுக்கங்களை அறவே ஒழிப்பதற்கு வேண்டிய பிரசாரம் செய்ய வேண்டுமென நமது சங்கப் பிரசாரகர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

19. தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் விரைவில் சீர்திருந்தி முன்னுக்கு வரவும் தீண்டாமை ஒழியவும் வேண்டி அன்னார்க்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென அனைவரையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

20. பிற்காலத்தில் ஹிந்தி தேசபாஷையாக வருமெனக் கருத இடமிருப்பதால் செங்குந்த இளைஞர்கள் ஹிந்தியைப் பயில வேண்டுமென இம்மகாநாடு வற்புறுத்துகின்றது.

21. ஒவ்வொரு முனிசிபாலிடியும் தாலுக்கா போர்டும் கூடியவரையில் சித்தவைத்தியசாலையை அதிகமாக ஸ்தாபிக்க வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.


ஜாதிச் சஞ்சிகைகளில் வெளிவரும் விளம்பரங்களுக்கே ஒரு தனி மதிப்புண்டென்பதை அறியீரா? வேறு எந்த ஜாதிச் சஞ்சிகை செங்குந்த மித்திரனைப்போல் 5000 மக்களிடை உலவுகிறது.

**விளம்பர விகிதம்**

| | | ஒரு வருஷம் | ஆறு மாதம் | மூன்று மாதம் | ஒரு மாதம் |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 100 | 50 | 26 | 10 |
| ½ ,, | ,, | 60 | 30 | 16 | 6 |
| ¼ ,, | ,, | 40 | 20 | 11 | 4 |

ஆர்டருடன் பாதிபணம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
2-17, பவழக்காரத் தெரு, சென்னை.




# செங்குந்தர் தொண்டர் படைச் சங்கம், திருவாரூர்

ஆங்கீரஸஹு பங்குனிமீ 11உ (27-3-33) காலை 9 மணிக்குத் திருவாரூர் கமலாலயம் தென்கரையிலுள்ள கட்டடத்தில் செங்குந்தர் தொண்டர்படைச் சங்கமொன்று நிர்மாணிக்கப்பெற்றது. அதற்குச் செங்குந்தமித்திரன் பதிப்பினரும் திருவாரூர் முனிசிபல் வைஸ் சேர்மனுமான உயர் திரு. T. N. சபாபதி முதலியார் அவர்கள் தலைவராகவும், பிரபல வியாபாரியும் மிராசுதாரருமான திரு. தி. கு. ந. நடேசமுதலியார் அவர்கள் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். அவ்வமயம் தலைவர் அவர்கள் தொண்டர்களாகச் சேர்வோர் முக்கிய நோக்கம் என்பதுபற்றியும் தொண்டர்கள் நடக்க வேண்டிய முறைகளைப்பற்றியும் வெகு அழகாகச் சுமார் இரண்டு மணி நேரம் வரையில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதன்பின் திருவாரூர் மிராசுதாரரும் முனிசிபல் கவுன்சிலருமான உயர் திரு. S. ராமசாமி முதலியார் அவர்கள் தலைவர் அவர்கள் பேசிய நோக்கங்களைப்பற்றி ஆமோதித்து வெகு அழகாகப் பேசினார்கள். இன்னும் சிலர் தொண்டர்கள் அவசியம் இருக்கவேண்டும் என்பதைபற்றிப் பலவிதமான நிகழ்ச்சிகளைப் பேசி முடித்தார்கள். சங்கக் கூட்டத்திற்குப் பிரபலவியாபாரிகளும் பிரமுகர்களும் தொண்டர்களும் கூடி இருந்தது மிகவும் சந்தோஷிக்கத்தக்கது. கடைசியில் ஏகமனதாக அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற மணி 11-க்கு கூட்டம் இனிது கலைந்தது.

## தீர்மானங்கள்

(1) 50 தொண்டர்களுக்குக் குறையாமல் சேர்க்க வேண்டும்.

(2) தொண்டர்களுக்குச் சங்கத்திலிருந்து உடைகள் தைத்துக் கொடுக்கவேண்டும்.

(8) தொண்டர்களுக்குத் தினந்தோறும் தேகப் பயிற்சி அளித்தல்வேண்டும்.

(4) மாதம் ஒருமுறை தொண்டர் மீட்டிங் ஒன்று நடத்தல் வேண்டும்.

## தென்னிந்திய செங்குந்தர் 4-வது மகாநாட்டு தொண்டர்படை நன்றிபாராட்டல்

நமது தேசப்பணியாற்றுங் கடமையில் பல்வேறு வகுப்பின் தலைவர்களும் கானல் மழை நடையூன் உறக்கு முதலிய தேகசிரமம் பாராட்டா தலைந்தினைத் தூழியம்புரியு மிக்கால அரிய சந்தர்ப்பத்தில் நமது மரபினரை அயர்ந்த தூக்கத்தினின்று தட்டி யெழுப்பி நல்லுபதேசம் செய்யக் கூடும் பெருங்கூட்டங்களில் எங்களின் எதிர்கால வாழ்க்கை நலங்கருதி யுழைக்கும் பெரியார்களுக்குத் தேகத் தொண்டுபுரியும் கடமை யெங்களின் தலைச்சுமையாயுள்ளதாம். அம்முறை பற்றிப் பணிசெய்த வாலிப எளியேங்களை மெச்சிப் பொற்பதக்க மொன்று பரிசளித்த சபாபதி வள்ளலாரும் நமது மாபெருந்தலைவர் ஸ்ரீ ஷண்முக சுந்தரனாரவர்களும் பள்ளியிலோதும் மாணவர்க்குப் பரிசளித்தூக்க மூட்டுந் தன்மையிலெமக் களித்த ஆதரவொன்றே எங்களை யுண்மையிலீடேற்றும் என்றெண்ணி யுளமகிழ்ந்தோம். எங்களின் சிறுதொண்டூழியத்தை ஏற்று மகிழ்ந்த பெரியார்கட் கென்றும் நன்றி செலுத்துகிறோம்.

மேலும் எங்கள் தொண்டர்படையை ஓர் சாசுவத தலைமைச் சங்கமாய் நிருவிக்கொண்டு டிரில் முதலிய தேகப்பயிற்சிகளும் போதித்தும் செங்குந்த உலகத்தில் என்றும் எங்கெங்கும் சென்று தொண்டாற்றி வரும் நிரந்தரத் தொண்டர் படையின் தலைமைச் சங்கமாயிருக்கவும் 4-வது மகாநாட்டின் மூலம் ஆக்யாபித்தருளிய பேராதரவுக்கும் மிகமிகப் பணிவோடு நன்றி செலுத்துகிறோம்.

டாக்டர். P. முருகேசன்
தொண்டர்படைத் தலைவன்

குறிப்பு: ஆங்காங்கே நிகழும் நம் மகாநாடுகள், ஆண்டுவிழாக்கள், திருவிழாக்கள் முதலியவற்றில் ஒத்தாசை செய்வதற்கும், ஊர்க்காரியங்கள் செவ்வனே நடைபெறவும் ஊரிலுள்ள சங்கம் முதலியவை தளராதுழைக்கவும் உதவி புரிவதற்கும் ஊர்தோறும் நம்மவர் தொண்டர்படை யொன்றை ஸ்தாபித்தல் அத்தியாவசியமெனப் பன்முறை பலர் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியுள்ளனர். இது பற்றி நமது மகாநாடுகளிலும் தீர்மானங்கள் நிறைவேறி யுள்ளன. அத்தீர்மானத்தினை நடைமுறைக்குக் கொண்டுவர முதன் முதலில் முன்வந்த இத்திருவாரூர்த் தொண்டர்கட்கும் அவர்கட்கு ஊக்கமூட்டி இவ்விஷயத்தில் அஸ்திவாரக்கல் நாட்டிய நமது வள்ளலாருக்கும் எமது நன்றி உரியதாகுக. நமது இயக்கம் தலையெடுத்த தாயகத்தினின்றும் தொண்டர்படை ஸ்தாபிக்கும் முறையும் பிறந்தது நமது அதிர்ஷ்டவசமேயாகும். இதர ஜில்லா வாலிபர் இம்முறையில் திருவாரூர் வாலிபரைப் பின்பற்றுவரென நம்புகிறோம். (ப-ர்.)


செங்குந்தர் பிரபந்தத் திரட்டு
அரிய பிரபந்தங்கள் பல திரண்டது ஓரே ரூபாய்

## தலைச்சங்கத்தோடு இணைக்கப்பெற்ற கிளைச்சங்கங்களுள்ள ஊர்களின் ஜாபிதா 1933-வரு

**சென்னை ஜில்லா**
சென்னை (வர்த்தகர்)
,, (வாலிபர்)
திருமயிலை (வாலிபர்)
திருவல்லிக்கேணி

**செங்கற்பட்டு ஜில்லா**
காஞ்சிபுரம்
ஐயங்கார்பாளையம்
விளக்கொளி தெரு
ஐயம்பேட்டை
சிவபுரம்
ஐயங்கார்குளம்
மாணம்பதி
பெருநகர்
உத்திரமேரூர்
கருங்குழி
சிறுகுளத்தூர்
கயப்பாக்கம்
கன்றச்சேரி
மணிமங்கலம்
கோடம்பாக்கம்
சைதாப்பேட்டை
,, (வாலிபர்)
வடதிருநாகேஸ்வரம்

**வட ஆற்காடு**
தக்கோலம்
குருவராஜப்பேட்டை
மின்னல்
அம்மையப்பட்டு
கொடுங்காலூர்
பொன்னூர்
அசனம்மாப்பேட்டை
திருவத்திபுரம்
கலவை
திருப்பத்தூர்
முள்ளிப்பட்டு
வடமணப்பாக்கம்

**தென் ஆற்காடு**
கண்டாச்சிபுரம்
மணவை
உடையார்குடி

**பிரான்சு இந்தியா**
புதுவை
காரைக்கால்

**தஞ்சை ஜில்லா**
திருவாரூர்
மஞ்சட்கொல்லை
திருமருகல்
வாழுமங்கலம்
புத்தகரம்
சுந்தரப்பெருமாள் கோவில்
கூரைநாடு
வலங்கைமான்

**திருச்சி ஜில்லா**
உன்னியூர்
கட்டிப்பாளையம்
கரூர்
மண்ணச்சநல்லூர்
அகரம்

**சேலம் ஜில்லா**
சேலம் அம்மாபேட்டை
திருச்செங்கோடு
மோகனூர்
வேலகத்தம்
பள்ளிபாளையம்

**கோவை ஜில்லா**
ஊத்துக்குழி
சென்னிமலை
பவானி
,, (வாலிபர்)
வடவழி
கணபதி
வள்ளிபுரத்தான்பாளையம்
ஈரோடு (வாலிபர்)
காரமடை
ஜம்பை
சித்தோடு
வடசித்தூர்
சிவகிரி
மொரட்டுப்பாளையம்
கோவை (வாலிபர்)
ராக்கியாபாளையம்

**மதுரை ஜில்லா**
மதுரை
தல்லாகுளம் (இளைஞர்)
வண்டியூர்
சோழவந்தான்

**இராமநாதபுரம் ஜில்லா**
மண்டல மாணிக்கம்
அருப்புக்கோட்டை
இராமேஸ்வரம்
பரமக்குடி
ஸ்ரீவில்லிபுத்தூர்
அளகங்குளம்
தேவகோட்டை
இராஜபாளையம்

**திருநெல்வேலி ஜில்லா**
திருநெல்வேலி
அம்பாசமுத்திரம்
வீரவநல்லூர்
தென்காசி
சங்கரநயினர் கோவில்
கீழ்ப்பாவூர்

**மலையாளம் ஜில்லா**
கொல்லங்கோடு
பாலப்புரம்

**திருவாங்கூர் ராஜ்ஜியம்**
கோட்டாறு

**சிலோன்**
யாழ்ப்பாணம்

**தென் ஆபிரிகா**
டிரான்ஸ்வால்

# கிளர்ச்சி

### திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கத்தின் ஆருமாண்டு பொதுக்கூட்டம்

1933-ம் ஆண்டு ஜனவரித்திங்கள் 22-ம் நாள் ஆதிவாரம் காலை 9 மணிக்கு ஷை சங்கவாசக சாலையில் ஷை சங்க ஆருமாண்டு பொதுக்கூட்டம் திரு. மு. சரவண முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் திரு. டி. சம்பந்தன் அவர்கள் 'வாய்மை' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர். பின்பு இச்சங்க ஐந்தாமாண்டு அறிக்கை வாசித்து அங்கீகரிக்கப்பட்டதும், சில தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. முடிவில் கீழ்க்கண்டவாறு நிர்வாகசபை தேர்தல் நடை பெற்றதும் இக்கூட்டம் பகல் 12 மணிக்கு இனிது கலைந்தது.

தலைவர்:—திரு. சு. குழந்தைவேலு முதலியார் அவர்கள், Manager, F. P. B.

உபதலைவர்கள்:—
1. திரு. அ. தக்ஷிணாமூர்த்தி முதலியார், அவர்கள்
2. ,, மு. சரவண முதலியார்


காரியதரிசிகள்:—
1. திரு. சு. கணேச முதலியார் அவர்கள்
2. ,, மு. சுந்தரவடிவேலு முதலியார் ,,

பொக்கிஷதாரர்:—
திரு. மு. சம்பந்த முதலியார் ,,

நிருவாக சபை அங்கத்தினர்கள்:—
1. திரு. பொ. சி. பாலசுப்ரமணிய முதலியார் ,,
2. ,, மு. வடிவேலு முதலியார் ,,
3. ,, ஜ. வேதாத்திரி முதலியார் ,,

### நிறைவேறிய தீர்மானம்

செங்குந்த குல முன்னேற்றத்தோடு சமுதாய சீர்திருத்தங்களும் இணைக்கப்பட்டு நிலவும் 'செங்குந்த மித்திரன்' என்னும் மாத சஞ்சிகையை இலவசமாக அனுப்பும் அவ்வாசிரியர்கட்கு இப்பொதுக் கூட்டம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.


மகாநாட்டுப் பொதுக் காரியதரிசி
உயர்திரு. S. K. M. முருகைய முதலியாரவர்கள், திருவாரூர்.


வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட
உயர்திரு. V. M. N. பொன்னம்பல முதலியாரவர்கள், திருநாகேச்சுரம்.

Registered No. M. 1514



நான்காவது மகாநாட்டுத் தொண்டர் படை



தென்னாற்காடு ஜில்லா கல்விக்கழகத்தின் அங்கத்தினராகத்
தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள

உயர்திரு. வை. ச. இராமலிங்க முதலியாரவர்கள், கண்டாச்சிபுரம்.

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Sengundha Mahajana Sangam Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswami at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.